ஓம்

பிரசண்ட விகடன்

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் "

மலர் 4. சென்னை, 1936ஞு மேமீ 1௳ இதழ் 3.

உள்ளுறை.

விஷயம்.	பக்கம்.
1. தலைவர் காட்டும் வழி	2
2. பண்டித ஜவஹரின் பொன் மொழிகள்	5
3. லக்ஷ்மணபுரி காங்கிரஸின் முடிவு	8
4. காங்கிரஸ் ரஸமஞ்சரி	10
5. சங்கரி	13
6. மோகனுவின் முன்யோசனை	17
7. கலியாண முஸ்தீப்பு	21
8. "பாம்புத் தாத்தா ?"	26
9. " தங்கம் "	31
10. பட்சி-தரிசனம்	36
11. சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	40
12. உண்மை நட்பின் உயரிய தன்மை	46
13. ஆடல் பாடல்	50

" விகடனி "ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

தலைவர் காட்டும் வழி

:(o):

காங்கிரஸ் மகாசபையின் சரித்திரத்தில் ஒரு நெருக்கடியான நிலைமையில் பண்டித ஜவஹர்லால் நேரு லக்ஷ்மணபுரி காங்கிரஸுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எந்த மாகாணத்தில் காங்கிரஸ் கூடுகிறதோ அந்த மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராகக் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது காங்கிரஸ் சம்பிரதாயம். இந்தச் சம்பிரதாயம் ஜவஹர்லால் நேரு விஷயத்தில் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. லக்ஷ்மணபுரி ஐக்கிய மாகாணத்தில் இருக்கிறது. பண்டித ஜவஹர்லால் நேரு ஐக்கிய மாகாணத்திலுள்ள அலகாபாத் வாசி. எனவே இவர் ஷெ காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது சம்பிரதாய விரோதம். காங்கிரஸ் சரித்திரத்தில் இவர் விஷயத்தில் தான் முதன் முதலாக இப்படிச் சம்பிரதாய விரோதம் அநுசரிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ தயவு தாக்ஷண்ணியங் கருதி இப்படிச் செய்ததாக யாரும் எண்ணுவதற்கில்லை. தீர்க்காலோசனையின் மீதே பண்டிதர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் காந்தியடிகளின் தலையீடு உண்டு என்பது பகிரங்க ரகஸியம்.

முதன் முதலாகச் சூரத் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. லோகமானிய பால கங்காதர திலகர் தீவிர வாதியாய்ப் புதிய கொள்கையை வற்புறுத்தினார். காங்கிரஸ் சிறிது காலம் மந்தமாய் இருந்தது. பிறகு புதிய கொள்கையே அதில் ஆதிக்கம் வகித்தது. இப்போது காங்கிரஸிலுள்ள பழைய தலைவர்களுக்கு ஒரு மாறுதல் கட்டம். தாங்கள் மேற்கொண்டுள்ள கொள்கையையும் போக்கையும் காலத்திற்கேற்ப மாற்றிக்கொண்டு காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டியிருக்கிறது.

சூரத் காங்கிரஸில் தலை காட்டிய தீவிர வாதம் 1920-ம் ஆண்டில் மிதவாதம் ஆகிவிட்டது. 1920-ம் ஆண்டில் புகுந்த தீவிரவாதம் இப்பொழுது மிதவாதம் ஆகிவிட்டது அல்லது ஆகிக்கொண்டு வருகிறது என்றே சொல்லவேண்டும். புதிய மிகத் தீவிரமான கொள்கை ஒன்று காங்கிரஸில் செல்வாக்குப் பெற்றுக் கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பண்டித ஜவஹர்லால் நேரு இப்பொழுது செல்வாக்குப் பெற்றுக் கொண்டிருக்கும் தீவிர வாதிகளின் நம்பிக்கை பெற்ற தலைவராய் விளங்குகின்றார். எனினும் இவர் பழைமைக்கும் புதுமைக்கும் ஒரு பற்றாசு போல இருந்து பழைமையின் தனிப்பெருந்தலைவரான காந்தியடிகளின் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கிறார். பண்டித ஜவஹரின் தலைமையானது மற்றொரு பிளவு உண்டாவதைத் தடுப்பதற்கு மாத்திரமின்றி இருதரப்பினரையும் ஒன்று படுத்துவதின் மூலம் காங்கிரஸைப் பலப்படுத்துவதற்கும், பரஸ்பரம் ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கும் மிகவும் பயன்படுவதாயிருக்கிறது. எனவே காங்கிரஸ் சம்பிரதாயத்தை மீறிப் பண்டிதரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டியது மிகவும் இன்றியமையாத விஷயமாகி விட்டது. இவரும் எல்லாரும் எதிர் பார்த்தபடியே இருதரத்தாருக்கும் ஒருவிதமான திருப்தி உண்டாகும்படியான முறையிலேயே தமது தலைமையுரையைத் தயாரித்துக் கொண்டு வந்து பிரசங்கம் செய்தார். முதன் முதலாகக் காங்கிரஸ் மேடையில், தலைவர் ஹோதாவில், சமதரும (அபேத) வாதக் கொள்கைகளையும் திட்டத்தையும் பேசி வற்புறுத்திய பெருமை பண்டித ஜவஹர்லால் அவர்களுக்கே உரிமையாகும். இச் சமயத்தில் காங்கிரஸுக்குள் சமதருமவாதத்திற்குப் பெரும்பாலோர் எதிர்ப்பு இருப்பதையும் உணர்

ந்து ஒப்புக்கொண்டிருப்பது கவனிக்கத் தக்கதாகும்.

இந்தியத் தேசிய காங்கிரஸ் அதன் பெயருக்கேற்றபடி தேசியக் கொள்கையையே அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. தேசிய தருமத்தில் முதலாளிகள்—நடுத்தர வகுப்பினர்—தொழிலாளர்கள் ஆகியவர்களின் பரஸ்பரம் முரண்பட்ட உரிமைகளும் நலங்களும் அடங்கியிருக்கின்றன. இவர்கள் எல்லாரும் காங்கிரஸ் வளர்ச்சியின்பொருட்டு ஆதரவு நல்கி வருகிறார்கள். காங்கிரஸ் ஒரு காலத்தில் நடுத்தர வகுப்பினரின் நலங்களைக் கருதியிருந்தது உண்மை. ஆனால் காந்தியடிகள் அதில் ஆதிக்கம் வகித்ததிலிருந்து அது பொதுஜன—பாமர ஜனங்களின் நலங்களைக் கருதும் ஸ்தாபனமாகி விட்டது என்பதை யாராலும் மறுக்க முடியாது. லக்ஷ்மணபுரி காங்கிரஸில் தலைமைவகித்த பண்டித ஜவஹர்லால் நேரு விரும்புமாறு அது பாமர ஜன ஸ்தாபனமாக இருக்க வில்லை என்பதையும் எல்லாரும் ஒப்புக் கொள்ள வேண்டும். காந்தியடிகள் கண்ட காங்கிரஸ் திட்டம் சமதருமத்தை ஒட்டியது; ஆனால் அவர் தமது கொள்கையைச் சமதருமக் கொள்கை என்று சொல்லிக் கொள்ளுவதில்லை. அவர் தேசியக் கொள்கையையே கடைப்பிடித்திருக்கிறார். பரஸ்பரம் முரண்பட்ட முதலாளிகள்—நடுத்தர வகுப்பினர்—தொழிலாளிகள் ஆகியவர்களின் உரிமைகளையும் நலங்களையும் தேசியக் கொள்கையால் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பது காந்தியடிகளின் நம்பிக்கை. பண்டித ஜவஹர்லால் நேரு இன்னும் ஒருபடி உயரமாகப் போகிறார். இவர் காங்கிரஸின் கொள்கை சமதரும தத்துவத்தைக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்த முனைகிறார். காங்கிரஸ் உழைப்பாளிகளின் நலத்தையே முதன்மையாகக் கருதிச் சித்தை செலுத்த வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். இதுகாறும் காங்கிரஸில் தலைமை வகித்தவர்கள் எல்லாரும் உயர்ந்தவர்கள் — நடுத்தரமானவர்களே இருந்துவந்திருக்கிறார்கள். சாதாரண ஜனங்களிலிருந்தே தலைவர்கள் கிளம்ப வேண்டும் என்பது பண்டிதரின் ஆவல். அக் கருத்து நிறைவேற இன்னும் அதிக காலம் ஆகும். ஆனால் அத்தகைய நிலை ஏற்படாமல் போகாது என்பது உறுதி. அதற்கான முயற்சிகளை இப்பொழுது முதலே செய்ய வேண்டும் என்பதையும் எல்லாரும் ஒப்புக் கொண்டு தீர வேண்டும்.

பண்டித ஜவஹர்லால் நேரு தம்மைப் போலவே மற்றவர்களும் தீவிரமாக வருவார்கள் என்று உறுதியாக நம்பிவிடவில்லை. தமது போக்கு மற்றவர்கட்குப் பிடிக்கவில்லை என்னும் உண்மையை உணர்ந்து கொண்டிருக்கிறார். எனவே மற்றவர்களோடு கூடியவரை ஒத்துழைக்க வேண்டும் என்ற மனப்பான்மையை இவர் வெளிப்படுத்தியுள்ளார். காரணம் என்ன? காந்தியமும் சமதருமமும் வேறு வேறு கத் தோற்றத்தில் காணப்பட்டாலும் இரண்டிலும் புரட்சித்தன்மை கலந்திருக்கிறது. இரண்டிற்கும் அடிப்படையில் பிரமாதமான வித்தியாசமும் அவ்வளவாக இல்லை. பண்டிதரின் முயற்சியால் காந்தியத்தைக் கடைப்பிடிப்போரும் சமதரும தத்துவத்தைக் கடைப்பிடிப்போரும் ஒற்றுமையாய்க் காரியங்களைக் கவனிப்பார்கள் என்பதே “விகடன்” அபிப்பிராயம்.

காங்கிரஸில் சமதரும தத்துவங்களை ஒப்புக்கொள்ளாதவர்கள் அநேகம் பேர் இருப்பதுபோலவே சமதருமவாதிகளிலும் ஒரே அடியாய் ஆகாயத்தில் பறக்கின்றவர்களும் பலர் இருக்கிறார்கள். ‘தீவிரமான திட்டங்கள் வேண்டும்’ “தீவிரமான வேலைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று அவர்கள் வானமளாவப் பேசிக்கொண்டு வருகிறார்கள். இத்தகையோருக்குப் பண்டிதர் செய்துள்ள இதோபதேசம் பெரிதும் பாராட்டத் தக்கதாகும். “நாம் தீவிர நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். அவர்களுடைய அபிப்பிராயம் என்ன? தேசம் முழுவ

நும் நேரடியான காரியங்களிலோ அல்லது சட்டமறுப்புப் போன்ற காரியங்களிலோ இறங்கவேண்டும் என்பது அவர்களது கருத்தாயின் சமீப காலத்தில் அது சாத்தியம் இல்லை என்றே நான் கருதுகின்றேன். பெரிய காரியத்தில் மீண்டும் இறங்குவதற்குமுன் வெறும் பேச்சுக்களில் ஆடம்பரம் காட்டுவதில் பயனில்லை. முதலில் நமது வீட்டை நாம் சுத்தப்படுத்திக்கொள்ள முயலவேண்டும். ஜனங்களிடையே பரவியுள்ள தோல்விமனப்பான்மையைப் போக்கவேண்டும். பொது ஜனங்களுடைய பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். கிராமவாசிகளின் வறுமை, வேலையில்லாக் கஷ்டம், காலங் கடந்த வரி முறை இவைகளே இப்பொழுது நம் முன் இருக்கும் முக்கிய பிரச்சினைகள்"-இந்த இதோபதேசம் தீவிர சமதருமவாதிகளின் மனங்களை அமைதியாக்குமோ—என்னவோ என்பது இனிமேல்தான் தெரியவேண்டும். பண்டித ஜவஹர்லால் தமது தலைமைப் பேருரையில் பெரும் பகுதியைக் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப்பலப் படுத்தும் வழிகளை ஆராய்வதற்கென்றே ஒதுக்கி யிருக்கிறார். விவசாயிகள்—தொழிலாளர்கள் ஆகிய சாதாரண மக்களுடன் நேரடியான தொடர்பு காங்கிரஸுக்கு இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். இவர்களுடைய ஸ்தாபனங்கள் வலிமை பெற்றுச் செல்வாக்குடன் வேலை செய்யக் காங்கிரஸ் தொண்டாற்ற வேண்டும் என்று இவர் கூறுகின்றார்.

வகுப்புப் பிரச்சினையைப் பற்றி பண்டிதர் குறிப்பிட்டிருப்பது பெரிதும் சிந்திக்கத் தக்கதாகும். "வகுப்பு வாதமும் ஜனநாயகமும் ஒருநாளும் ஒன்று சேரமாட்டா. ஜனநாயக முறையில் நாம் காரியத்தைச் செய்ய வேண்டுமானால் இப்போதிருக்கும் வகுப்பு ஏற்பாடு ஒழிந்து போக வேண்டும்" என்று இவர் கூறுவது காங்கிரஸ் தலைவர்கள் என்பவர்களுக்குள்ளேயே எத்தனை பேருக்குப் பிடிக்கும் என்பது "விகடன்" கேள்வி, நல்ல ஸ்நேக பாவமான முறையில் வகுப்புச் சமரசத்திற்கும் உழைக்க வேண்டும் என்பது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் வேறு விதமாகப் போகிறது. "எல்லாச் சமயத்தாரையும் பந்திப்பனவாகவும் வகுப்பு எல்லைகளை ஊடுருவிச் செல்வனவாகவும் உள்ள பொருளாதாரப் பிரச்சினைகள் எழுந்தால் வகுப்புப் பிரச்சினையை எளிதாகத் தீர்க்க முடியும் என்று ஜவஹர்லால் நம்புகின்றார்.

தேர்தல்களில் போட்டி போட்டுச் சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டிய அவசியத்தை இவர் ஒப்புக் கொள்ளுகின்றார்; ஆனால் பதவிகளை ஏற்பதை ஒப்புக் கொள்ளவில்லை. சட்ட சபைகளைப் பிரசார வேலைக்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதே அவரது கருத்து.

பண்டித ஜவஹர்லால் காங்கிரஸுக்கு வகுத்துக்காட்டியிருக்கும் திட்டம் மகா விசேஷமானது. வாலிப மக்களின் மனங்களை அத் திட்டம் கவரும் என்பதில் ஐயம் இல்லை. காங்கிரஸ் தொண்டர்களுக்குத் தேர்தல் வேலைக்கும் அப்பாலான ஒரு நல்லவேலை ஏற்பாட்டைக் காட்டுகிறது ஜவஹரின் திட்டம். அத் திட்டத்தில் ஏதாவது ஒரு குறை சொல்ல வேண்டும் என்றால் அரசாங்கத்தார் அதை அமலுக்கு வரவிடுவார்களா என்பதே ஆகும். இதை ஒரு தடையாக நாம் எண்ணக்கூடாது. எதுவும் சும்மா கிடைக்கப்போகிறதில்லை. பாடுபட்டாலே பலன் கிடைக்கும். அடிமைகள் கஷ்டப்பட்டே விடுதலை பெற வேண்டும். எதிர்காலத்தில் உலகப் போக்கு எப்படியிருக்கும் என்று யார் தீர்க்க தரிசனம் கூறவல்லவர்கள்? தலைவர் ஜவஹர்லால் இக்கால உலக அரசியல் தருமங்களையும் நிலைமைகளையும் வெகு தெளிவாக எடுத்துக் காட்டினார். இந்தியா ஏனைய நாடுகளின் தொடர்பின்றித் தனித்து வாழ முடியாத உண்மையைக் குறிப்பிட்டார். நம் கடன் பணி செய்து கிடப்பதே. ஆகிறபடி ஆகட்டும். அதைப்பற்றிய கவலை இப்பொழுது ஏன்? எல்லாரும் ஒரு முகமாகப் பண்டிதர் வழி நிற்கவேண்டும் என்பது "விகடன்" பேரவா.

பண்டித ஜவஹரின் பொன் மொழிகள்

உலகில் முதலாளித்வம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் பட்டுப்போக ஆரம்பித்தபோது, நவீன முறையான சமதர்மவாதம் தோன்றியது. இது அமெரிக்காவிலும், ரஷியாவிலும் வளர்ந்தது.

* * *

இதற்கிடையில் கஷ்டங்களைச் சகிக்க முடியாமல் முதலாளித்வம் பாஸிஸ்டு கொள்கையை ஆதரிக்கத் தொடங்கியது. எனவே, தற்சமயம் உலகம் இவ்விருவிதக் கொள்கைகளால் ஆளப்படுகிறது.

* * *

நமது நாட்டில் தோன்றியுள்ள எல்லாக் கஷ்டங்களுக்கும் சாம்ராஜ்யவாதமே காரணமாகும்.

* * *

அடக்குமுறை

அவ்வாதத்திற்கு ஜீவாதாரம் கொடிய அடக்குமுறையும், சாதாரண சுதந்தர மறுப்புந்தான்.

* * *

கிரிமினல் லா திருத்த சட்டம் போன்ற சட்டங்களை நம்பி நாள்கடத்தும் சர்க்கார் நீடிப்பதற்குச் சிறிதும் நியாயமில்லை.

* * *

பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடு புத்தகங்களுக்கு நிர்ப்பந்தம், விசாரணையின்றி ஆட்களைச் சிறையிடல் ஆகியவைகள்தான் இன்று இந்தியாவில் நடை பெறுகின்றன.

* * *

காங்கிரஸ் அமைதியான பயன்படத்தக்க நடவடிக்கைகளையே வற்புறுத்தி வாலிபர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்துவிட்டது.

* * *

சர்க்கார் நடை முறையினால்தான் புரட்சி இயக்கம் வளர்கிறது.

* * *

நம்மை யாள்வோரின் பாஸிஸ்டு கொள்கையே சர்க்கார் நடத்தைக்கு அடிப்படையான காரணம்.

* * *

சமதர்மம்

நமது சுதந்தரப் போராட்டத்தில் ஏகாதிபத்ய ஆசைமுறையை எதிர்ப்பவர்களையெல்லாம் எப்படி சேர்க்கலாம் என்பதையே நாம் கவனிக்கவேண்டும்.

* * *

அடிமைப்பட்ட நாட்டினர் சுதந்தரமடையப் போராடுகின்றனர். ஏகாதிபத்ய ஆசை கொண்டவர்கள் அவர்களை நசுக்கிவருகின்றனர். இப் போராட்டங்களுக்கெல்லாம் ஆதிகாரணம் பொருளாதார நெருக்கடியேயாகும்.

* * *

உலகப் பிரச்சினைகளுக்கும், இந்தியப் பிரச்சினைகளுக்கும் சமதர்ம முறையே பரி

காரமளிக்க வல்லதென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

* * *

இந்தியரின் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், அடிமைத்தனம் முதலியவைகளை யொழிப்பதற்குச் சமதர்மமுறையைத் தவிர வேறுவழி எதுவும் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

* * *

என் தேசிய உணர்ச்சி அன்னியர் ஆதிக்கத்தைச் சகிக்காததால், நான் இந்தியாவின் சுயேச்சைக்காகப் பாடு படுகிறேன்.

* * *

காங்கிரஸ் சமதர்ம ஸ்தாபனமாகி உலகில் புதிய நாகரிகத்தை ஏற்படுத்துவதற்குப் பாடுபடும் சக்திகளோடு சேர்ந்து வேலை செய்யவேண்டுமென விரும்புகிறேன்.

* * *

கைத்தொழில்

தேசத்தில் துரிதமாகக் கைத்தொழில்களைப் பெருக்கினால்தான் ஜனங்களின் அந்தஸ்தைப் போதுமானபடி உயர்த்தி வறுமையை எதிர்த்துப் போராட முடியும் என்று நான் நினைக்கிறேனாயினும், கதர் வேலைத் திட்டத்தில் மனமார உழைத்திருக்கிறேன்; இனியும் உழைக்கப் போகிறேன்.

* * *

தீண்டாமை

சமதர்ம முறையில் தீண்டாமை, சாதி வேற்றுமை முதலியவை இருக்க முடியாது.

* * *

பொருளாதாரப் பரிகாரத்தால் சம்பிரதாயங்களும் பழக்கவழக்கங்களும் ஏற்படுத்தியுள்ள சமூகத் தடைகளை நீக்கிவிட முடியும்.

புது அரசியல்

புது அரசியல் மிகவும் பிற்போக்கானது. இந்த அடிமை சாசனமானது ஏகாதிபத்திய ஆதிக்க பந்தங்களைப் பலப்படுத்துகிறது.

* * *

இது நமது பாமரமக்களை ஏமாற்றிக் கசக்கிப் பிழிந்து வேலைவாங்கி, சிலர் சௌகரியமாக வாழும் முறையை அதிகரிக்கும்.

* * *

அடிமை சாஸன பத்திரமொன்று இருப்பதாலேயே அது அடிமைக்கான ஒரு சட்டமாகி விடாது.

* * *

இதற்கு தற்காலிகமாக நாம் நிர்ப்பந்தங் காரணமாக, அவசாசட்டங்களுக்குட் பட்டிருப்பது போல் அடங்கி யிருந்தாலும் அதை மீற வேண்டு மென்றும், அதை ஒழிக்க வேண்டுமென்றும் எண்ண நமக்கு உரிமை இல்லாமற் போகவில்லை.

* * *

ஆகவே, தயவு தாட்சண்ய மின்றிச் சந்தேகமற இந்தப் புதிய அரசியல் சட்டத்தை எதிர்ப்ப தென்பதே நமது மனப்பான்மையாக இருக்க வேண்டும்.

* * *

நாம் நமது கொள்கைகளைக் கடைப்பிடித்து, தேசிய விடுதலையை ஏற்கனவே, எதிர்த்து வந்திருப்பவர்களுடனும், பிரிட்டிஷ் ஆதிபத்யத்திற்கு உதவி புரிந்தவர்களுடனும் எவ்வித சமாசமும் செய்து கொள்ளாமல் நேர்முகமாக நமது திட்டத்தை வற்புறுத்திப் போராடுவது தான் சரியான முறை.

* * *

இந்தியாவில் புரட்சியான பெரிய மாறுதலை நாம் வேண்டுகிறோமா அல்லது பிரிட்டிஷ் ஆட்சியில் சில சீர்திருத்தங்களை விரும்புகிறோமா என்னும் பிரச்சினையும் இருக்கிறது.

இத்தனை வருஷமாகத் தைரியத்தோடு போராடி புரட்சி மனப்பான்மையை உண்டாக்கி விட்டு, இப்போது சீர்திருத்த வேலையில் ஈடுபடுவது சரியல்ல.

* * *

ஆதலால் சட்டசபைகளில் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டும், நமது பிரசாரத்துக்கு அவற்றை மேடைகளாக உபயோகித்துக் கொண்டும் இருக்க வேண்டுமே யொழிய பதவிகளை ஏற்பதுகூடாது.

* * *

வகுப்புத் தீர்ப்பு

மதத்தை ஆதாரமாகக் கொண்டு இந்திய மக்களைப் பல பிரிவுகளாகச் செய்தும் ஜனநாயகத்துக்கும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் இடையூறாக நிற்பது வகுப்புவாதமே யாகும்.

* * *

வகுப்புவாதமும் ஜனநாயகமும் ஒரு காலும் ஒன்று சேர முடியாது.

ஜனநாயக முறையில் நாம் காரியஞ் செய்ய வேண்டுமானால் இப்போதிருக்கும் வகுப்பு ஏற்பாடு ஒழிந்து போகவேண்டும்.

* * *

எல்லா மதத்தினரையும் பாதிப்பதாகவும், வகுப்பு எல்லைகளை ஊடுருவிச் செல்வதாயுமுள்ள பொருளாதார பிரச்னைகள் எழுந்தால் அப் பிரச்னையை உண்மையில் எளிதாகத் தீர்க்க முடியும் என்பது என் கருத்து.

* * *

மகாத்மா சேவை

பயமின்மை, கட்டுப்பாடு, தியாக புத்தி இவற்றை மகாத்மாகாந்தி நமக்குக் கற்றுக் கொடுத்தார்.

* * *

உணர்ச்சியற்றிருந்த நம்மையும் ஆளாக்கி, இந்தியாவையும் பாதாளத்திலிருந்து தூக்கி விட்ட பெருமை அவருக்கே உரியது.



ரிக்ஷா வண்டியில் ஏறிச் சவாரி செல்வதாலுண்டாகும் சுகத்தை ரிக்ஷா இழுப்பவன் அனுபவித்துப் பார்க்கிறான்.

லக்ஷ்மணபுரி காங்கிரஸின் முடிவு

சமீபத்தில் லக்ஷ்மணபுரியில் நடந்த தேசிய காங்கிரஸ் மகாசபையின் 49-வது மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் சுருக்கம்:—

1. தேசிய தொழிலாளர், விவசாய இயக்கங்களை நசுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் நெடுகத் தீவிரமாக சிவில் சுதந்தரங்களையும், பலர் விஷயத்தில் சரீர சுதந்தரங்களையும் நசுக்கி வந்திருப்பதைப் பொது மக்களது கவனத்துக்கு இக் காங்கிரஸ் கொண்டுவருகிறது.

2. இந்திய சமஸ்தானங்களிலும், இம்மாதிரி சிவில் சுதந்தரங்களும், சரீர சுதந்தரங்களும் ஒடுக்கி நசுக்கப்படுவதைக் கண்டு இக் காங்கிரஸ் வெகுவாக வருந்துகிறது.

3. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆசை முறையை அநுஷ்டிப்பவர்களால் சிறைச்சாலைகளிலும், பந்தோபஸ்திலும் அயல் நாடுகளிலும் வைக்கப்பட்டு இந்தியாவின் சுதந்திரத்திற்காகத் தங்கள் கஷ்டங்களைத் தீரமாகவும், மௌனமாகவும் அநுபவித்து வரும் ஆயிரக்கணக்கான இந்தியர்களுக்கு இக் காங்கிரஸ் வாழ்த்து கூறுகிறது.

4. அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களுடனும், சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனம், இன்னும் பிற ஸ்தானங்களுடனும் சம்பந்தத்தை யுண்டாக்கிக் காத்து வரும் நோக்கத்தோடு, அகில இந்திய காங்கிரஸ்கமிட்டியின் காரியாலயத்தில் அன்னிய இலாகா ஒன்றை வேண்டிய அளவு விசேஷ சிப்பந்திகளுடன் ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய காரியக் கமிட்டிக்கு இக் காங்கிரஸ் அதிகார மளிப்பதோடு, அவ்வாறு செய்யும்படி அதற்குக் கட்டளை யிடுகிறது.

5. 1927-ல் சென்னையில் நடந்த காங்கிரஸ் ஏகாதிபத்ய ஆசை கொண்டவர்களுள் யுத்தம் நிகழக் கூடியதாக யிருப்பதையும், அச் சண்டையில் ஏகாதிபத்யத்தின் காரியங்களுக்குப் பயன் படும்படி இந்தியா ஒரு சாதனமாக உபயோகித்துக் கொள்ளப் படக் கூடியதையும் தேசத்தாருடைய கவனத்துக்குக் கொண்டு வந்து மக்களுடைய திட்டமான முன் அநுமதி இருந்தாலொழிய அம் மாதிரியான யுத்தங்களில் கலக்க முடியாதென மறுக்க இந்தியருக்கு உரிமை யுண்டென்றும் முன் அறிவித்ததை மீண்டும் வற்புறுத்துகிறது.

6. பிரிட்டிஷ் சர்க்கார் அறிக்கையையும் பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டி ரிபோர்ட்டையும் ஆதாரமாகக் கொண்டு 1935-ம் வருஷ இந்திய சர்க்கார் சட்டம் தயாரிக்கப் பட்டிருக்கிறது சிவில் உரிமைகளைக் கட்டுப்படுத்தியும், அடக்கு முறையைக் கையாண்டும் இந்த அரசியலை இந் நாட்டினர் மீது சுமத்துவதால் இதை பூரணமாக நிராகரிக்க வேண்டுமென முன்னமே செய்த முடிவை மீட்டும் வற்புறுத்துகிறது. அத்துடன் ஜனப் பிரதிநிதித்வ சபை யொன்றைக் கூட்டும்படியும், அடுத்த தேர்தலில் உண்மையான காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தும்படியும் தெரிவிக்கிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் உத்தியோக மேற்கலாமா? வேண்டாமா? என்ற விஷயம் இம் மகாநாட்டில் அதிக கவனம் பெற்றிருக்கிறது. இப்போது அது பற்றி ஒருவித முடிவுக்கு வருவதைவிட, அவசிய மேற்பட்ட சமயத்தில் மாகாண கமிட்டிகளை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கலந்து கொண்டு ஒரு முடிவு செய்ய வேண்டுமென இக் காங்கிரஸ் கருதுகிறது.

7. தென்னாப்பிரிக்கா, கிழக்காப்பிரிக்கா, ஜான்ஸிபார், பிஜீ முதலிய இடங்களில் வாழும் இந்தியர் விஷயத்தில் காங்கிரஸ் அநுதாபங் காட்டுவதுடன், அவர்களுக்குச் சௌகரியஞ் செய்து தருவதாக உறுதி கூறுகிறது.

8. பொதுமக்கள் காங்கிரஸ் திட்டத்தை வகுத்து அதன் வேலைகளில் முழு பங்கு எடுத்துக்கொள்ளும்படி செய்வதற்காக காங்கிரஸ் ஸ்தாபனங்களும், பொதுமக்களுக்கு மிடையேயுள்ள அந்நியோந்நியமான சம்பந்தத்தை வலுக்கச் செய்வது நன்மை பயப்பதாகுமென காங்கிரஸ் கருதுகிறது.

9. விவசாயிகளின் கொடிய வறுமை, வேலையின்மை, வரிப் பளுவால் ஏற்படும் கடன் ஆகியவைகளே இந்நாட்டின் முக்கிய அவசரப் பிரச்னைகளென காங்கிரஸ் கருதுகிறது.

10. இந்திய சமஸ்தானங்கள் சம்பந்தமாக 1928-ஆம் வருஷம் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானத்தை இம் மகாநாடு வற்புறுத்துவதோடு, 1935-ஆம் வருஷம் சென்னையில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி வெளியிட்ட அறிக்கையையும் அங்கீகரிக்கிறது. இருந்தாலும். பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளைப் போலவே, சமஸ்தான பிரஜைகளுக்கும் சுயநிர்ணய சுதந்திரமிருக்கவேண்டு மென்றும், பொதுவாக இந்தியாவிலுள்ள பிரஜைகளுள் எல்லாருக்கும் ராஜீய பிரஜா உரிமைகள் இருக்கவேண்டுமென்றும், எனினும், சமஸ்தானங்கள் தற்போதிருந்துவரும் நிலையில் அதன் பிரஜைகளே சுதந்தரப் போராட்டத்தை நடத்திவர வேண்டுமென்றும் காங்கிரஸ் கருதுகிறது.

11. பிரதிநிதிகள் தொகையை இரட்டித்தும், தேக உழைப்பு விதியை ரத்து செய்தும், கதர் விதியைமட்டும் வற்புறுத்தியும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஒற்றைமாற்று ஓட்டுமுறையின் மூலம் பிரதிநிதித்வம் ஏற்படவேண்டுமென்று திருத்தியும் காங்கிரஸ் அமைப்பில் பல மாறுதல்களைச் செய்து காங்கிரஸ் தீர்மானம் நிறைவேறியது.

ரூபாய் 5-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். 60-விடைகளனுப்பும் நபர்களுக்கு சில் விடை நேரில் திறக்கப்படும். சென்ற கூட்டல் போட்டியில் பரிசுபெற்றவர்கள் விடை 1-க்கு அணா நான்கு வீதமே பிரவேசக் கட்டணம் கட்டவேண்டும்.

முதற் பரிசு ரூ 2000. ரொக்கப் பரிசு ரூ. 3200. 2-வது பரிசு ரூ. 1000.

முதலில் வரும் இரண்டு சரியான விடைகளுக்கு ரூ. 75, 25. எண்ணிக்கையில் அதிக விடை அனுப்பும் 2-நபர்களுக்கு ரூ. 60, 40. முடிவு தேதி 16-5-36.

1.	ந — து	சங்கு
2.	— யம்	தடாகம்
3.	மு — வர்	துறவி
4.	— — கு	ஒரு திக்கு
5.	— — ணம்	உணவு

பிரவேசக் கட்டணம் அணா 4. M. O. ரசீதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரில் அனுப்பலாம். சீலிட்ட விடை சினிமா நேசன் காரியாலயத்தில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது. முடிவு தெரிய விரும்புவோர் ¾ அணா ஸ்டாம்புடன் அனுப்புக. மானேஜர் தீர்ப்பே முடிவானது.

S. R. சாமி, மானேஜர், R. S. டாணி அண் கோ., கீழக்கண்டித் தெரு, பீமநகர், திருச்சி.

காங்கிரஸ் ரஸமஞ்சரி

லக்ஷ்மணபுரி காங்கிரஸ் சம்பந்தமான சொற்பொழிவுகளைப் பற்றியும் நடவடிக்கைகளைப்பற்றியும் தீர்மானங்களைப் பற்றியும் எல்லாரும் அறிந்து கொண்டிருக்கலாம். அவைகளை யெல்லாம் இங்கே விரிவாக வெளியிடல் அசாத்தியம். ஷை நடவடிக்கைகளில் ஆங்காங்குக் கண்ட ரஸமான அம்சங்களை மாத்திரம் திரட்டி ரஸமஞ்சரியாக வெளியிடப்படுகிறது. நேயர்கள் அநுபவித்து இன்புறுவார்களாக.

"சட்டசபைகளுக்குள் சென்று போராட்டம் நடத்துவதாக என்னுடைய நண்பர்கள் சிலர் கூறுகிறார்கள். ஆனால் உள்ளே சென்றால் ஒரு வகதியின் நிலைமையில்தான் அவர்கள் இருக்க வேண்டும்." (சிரிப்பு)

—பண்டித ஜவஹர்லால்

* * *

விஷயாலோசனைக் கமிட்டியில் சுதேச சமஸ்தானங்கள் பற்றிய தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் வந்த சமயத்தில்—

சத்தியமூர்த்தி:—உங்கள் (ஜவஹர்லால்) செய்கை எதேச் சாதிகாரத்தன்மை வாய்ந்தது; நீங்கள் மரியாதையாக நடந்து கொள்ளவேண்டும்.

தலைவர்:—"நீங்கள் (சத்தியமூர்த்தி) கண்ணிய புருஷர். நான் அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன் இல்லை. (சிரிப்பு)

* * *

காரியக் கமிட்டியில் சத்தியமூர்த்தி பேச்சு—

"இப்போதுள்ள நிலைமை நிச்சயமாக இல்லாமையால்தான் இப்பிரச்சினை சம்பந்தமாகத் திட்டமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் உணரவேண்டும். (சிரிப்பு)

ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்குச் சட்டசபை பாஷை இங்கும் வந்துவிட்டது கவனிக்கக்கத்தக்கது-

* * *

காங்கிரஸில் விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று ஸ்ரீமான் பட்டவர்த்தனர் கொணர்ந்த திருத்தப் பிரேரபணை மீது வாதம்—

"இத்தகைய மாறுதலுக்கு இப்பொழுது அவசரம் இல்லை" என்றார் நரிமன்.

ஸ்ரீமாதி கமலாதேவி:—"அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி இன்னும் எவ்வளவு காலம் குழந்தையாகவே இருந்து முக்கிய விஷயங்களை நிராகரித்துக் கொண்டிருக்கப் போகிறது?"

தலைவர்:—'நான் நிராகரிக்கவில்லையே!—அதை யார் செய்தது?"

கமலாதேவி:-"ஆம் நிராகரிக்கவில்லை"

தலைவர்:—"இதைக் கேட்டு நான் மகிழ்கின்றேன்". (சிரிப்பு)

* * *

ஷை விஷயமாக ஸ்ரீமான் அவிநாசிலிங்கம் செட்டியார் பேசியபோது "இன்னும் அதிக அவகாசத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும்" என்றார்.

பாலகிருஷ்ண சர்மா.—"இதுவரைக்கும் ஏற்பட்டுள்ள அநுபவம் காணாதா? கமிட்டி அதிக அவகாசம் கொடுத்தமையினாலேயே விவகாரங்கள் இப்படி மாறி நிற்கின்றன. இதற்கு முன் சட்டமறுப்புச் சம்பந்தமான விசாரணையை நடத்தி வேலைத்திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நியமிக்கப்பட்ட ஒரு கமிட்டி என்ன செய்தது? சட்டமறுப்புக்குப் பதிலாக சட்டசபைப் பிரவேசம் செய்ய முடிவு செய்தது" (சிரிப்பு)

காங்கிரஸில் பிரதிநிதித்து முறை விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் ஆச்சாரிய கிருபாளினி.

"காங்கிரஸில் ஒவ்வொரு பிரிவினரும் தனித்தனியாகப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டால் அதற்கு ஒரு முடிவு ஏது என்பதை யோசித்துப் பாருங்கள். இன்று தொழிலாளர் பிரதிநிதிகள் என்று சிலரைச் சேர்த்துக்கொள்ள ஒப்புக் கொண்டால்—காலேக்கு வக்கீல் சங்கத்தார் எங்களுக்கும் காங்கிரஸில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பார்கள். பிறகு காங்கிரஸ் முதலாளிகள், காங்கிரஸ் ஜமீன்தார்கள், காங்கிரஸ் காட்டியக்காரர்கள் என்று இப்படியெல்லாம் நடக்க இடமேற்பட்டுவிடாதா? அப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?

(பலத்த சிரிப்பு)

* * *

காரியக் கமிட்டி தீர்மானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறிக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு திருத்தத்திற்கு ஓட்டுக் கணக்கு எடுக்கப்பட்டபோது ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி இரண்டு கைகளையும் தூக்கினர்.

தலைவர்:—"சாம்பமூர்த்தி பக்கமிருந்து இரண்டு கைகள் கிளம்புகின்றனவே"

கூட்டத்தில் ஒருவர்-"சாம்பமூர்த்தி "டியூப்ளிகேட் மனிதர்" (சிரிப்பு)

தலைவர் ஜவஹர்லால்:—சாம்பமூர்த்தி ஒருவரே அதிக ஓட்டுக்களைக் கொடுக்க ஏதோ தந்திரம் செய்கிறார் என்று நான் எண்ணினேன்".

(பலத்த சிரிப்பு)

* * *

உத்தியோகம் ஏற்புச் சம்பந்தமான தீர்மானத்தின்மீது ஸ்ரீமான் டி. பிரகாசம்.

"காந்தி மஹாத்மா இந்தியாவில் ஒரு தருமப் புரட்சியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கிறார். இவருடைய மகோந்நதமான லக்ஷியங்கள்—ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை-தொண்டு செய்வதில் ஆர்வம்—உண்மை கடைப்பிடித்தல்—கொள்கைப் பிடிவாதம்............................"

என்று ஆவேசமாய் நடுக்கத்துடன் கம்பீரமாய்ச் சொன்மாரி பொழிந்து கொண்டிருந்தார்.

தலைவர்:—"இது உத்தியோகம் ஏற்பது பற்றிய தீர்மானம். மகாத்மா காந்தி சம்பந்தமான தீர்மானம் அன்று".

(சிரிப்பு)

* * *

காங்கிரஸ்காரர் மந்திரி பதவிகளை ஏற்றால் காங்கிரஸ் மந்திரிகளே காங்கிரஸ்காரர்களைக் கைது செய்விக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றார் சம்பூர்ணானந்தர்.

சத்தியமூர்த்தி:-"காங்கிரஸ்காரர் மந்திரிகளானால் காங்கிரஸ் நிர்மாணத் திட்டங்களை அமல் செலுத்தச் சக்தி வஞ்சனையின்றி முயல்வார்கள்" (இது பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் கொட்டைப் பாக்கு எட்டுப் பணம் என்பதுபோன்ற பதில்)

ஒருவர்:-(கிண்டலாக) சட்டமறுப்பு இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பித்தால் காங்கிரஸ் மந்திரிகள் என்ன செய்யப் போகிறார்கள்!" (பலத்த சிரிப்பு.)

* * *

சத்தியமூர்த்தி:—"காங்கிரஸ் மந்திரிகள் கதர்த்தொழிலுக்கு ஆதரவு காட்டுவார்கள்; சுதேசியத்தைப் பலப்படுத்துவார்கள்; மது விலக்கில் சிரத்தை காட்டுவார்கள்; நிலவரி—நிலவரிக் குறைப்புக்களில் கருத்தைச் செலுத்துவார்கள்;"

கமலாதேவி:—"வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி என்ன சங்கதி?"

"சத்தியமூர்த்தி:—"தாங்கள் வரவு செலவுத் திட்டத்தை வாசித்திருக்கிறீர்களா?"

கமலாதேவி:—"வாசித்தேன்."

சத்தியமூர்த்தி:-அப்படியானால் வித்தியாசத்தைத் தெரிந்து கொண்டிருக்கலாமே" (சிரிப்பு)

சத்தியமூர்த்தி :—“அபேதவாதிகள் எந்தத் திட்டத்தைச் சமர்ப்பிக்கப் போகிறார்கள்?”

கமலாதேவி:–“நாங்கள் ஒரு வேலைத் திட்டத்தைச் சமர்ப்பிக்கப் போகிறோம்.”

சத்தியமூர்த்தி:—“நமக்குத் தெரிந்த ஒரு திட்டத்திற்கு இப்போது ஆதரவு அளிக்கலாமே!”

* * *

சத்தியமூர்த்தி:—“நீங்கள் இந்தத் தீர்மானத்திற்கு 'ஓட்டுக் கொடுத்தால் நான் மந்திரி பதவி வகிக்கமாட்டேன்” (சிரிப்பு)

* * *

காங்கிரஸ்காரர் பதவிகளை வகித்துச் சாதிக்கப்போவது ஒன்றுமில்லை; அதில் அநேக சங்கடங்கள் இருக்கின்றன என்பதை விளக்கி டாக்டர் பட்டாபி சீதாராமையா ஒரு உபந்நியாசம் செய்தார்.

சத்தியமூர்த்தி:—“நீங்கள் அஸம்பிளிக்கு வந்து இந்த உபந்நியாசம் ஏன் செய்யக்கூடாது?”

பட்டாபி:–“அப்படியானால் எனக்கு அது பெரிய பாராட்டுதல் (Compliment) (சிரிப்பு)

* * *

லக்ஷ்மணபுரி காங்கிரஸ் முடிவுரைக்குப் பின் பண்டித ஜவஹர்லால் நேரு “இம்மாதிரி சமயத்தில் சிலர் சாமகவி பாடும் வழக்கம் உண்டு. இதற்குச் சரோஜினி தேவியைவிட வேறு யார் தகுதியாய் இருக்க முடியும்!” (சிரிப்பு) “அவர் தாமாக எழுந்து இந்தக் கூட்டத்தைப்பற்றியும், மூன்று நாளாக இங்குப் பிரபலமாகத் தலைமை வகித்து விட்டு மீண்டும் மறக்கப்படப் போகும் தலைவரைப் பற்றியும் பேசப் போகிறார் (கை முழக்கம்)

சரோஜினிதேவியார் :—“துரிதமாக இறக்காமல் நீண்டகாலம் இழுத்துக் கொண்டிருந்த பழைய விஷயங்களைப்பற்றிச் சாமகவி பாட முன் வந்திருக்கின்றேன்.”

அடுத்த காங்கிரஸ் தமது மாகாணத்தில் (எல்லைப்புறம்) கூடவேண்டும் என்று அழைத்த டாக்டர் கான்சாஹிப் - “நீங்கள் அங்கே வரும்போது ஆகாயகுண்டு மாரிக்குத் தப்பிப் பிழைத்தால்” என்று தமாஷாகக் கூறினார். [எல்லைப்புறத்தில் அரசாங்கத்தார் குண்டுமாரி சகஜம் என்பது இங்கே கவனிக்கத்தக்கது.]

ஷை யார் “அங்கே குளிர் மிகுதி என்று பயப்படுகிறீர்களோ? பயம் வேண்டாம் ; குளிரானால் ஆளுக்கொரு ஆட்டுத் தோல் சப்ளைக்கு ஏற்பாடு செய்வேன்.”

* * *

(“ரங்காரம்” சேர்த்தது.)

சங்கரி

(அனந்தன்.)

ஒரு மாதகாலமாகக் கண்ணைத் திறக்காது பெய்து கொண்டிருந்த மழை அன்று பலமாகப் பெய்தது. இம்மாதிரியான மழை ஒரு போதும் பெய்ததில்லை என்று எல்லோரும் நினைத்தனர். சிறுவர்கள், 'மானம் ஓட்டையாகி விட்டது' என்று கூவிக் கொண்டு குதித்தோடினர். நடு முற்றத்தில் கூடுவாய் வழியாக அருவி போல் ஜலம் ஓடிற்று. முற்றத்துக் கம்பிகளில் ஜலம் திரண்டு ஸ்படிக மணி போல் உதிர்ந்து கொண்டேயிருந்தது. அவ் விடத்தில் அந்த அழகைப் பார்த்து மனதில் வியந்து கொண்டு எஜமானி மங்களம் உட்கார்ந்து ஜடை பின்னிக் கொண்டிருந்தாள். வேலைக்காரி சங்கரி கதவோரம் வந்து நின்றாள். அவள் வந்த காரணம் தெரியுமாதலால் மங்களம்மாள் கவனிக்காதது போல் பேசாதிருந்தாள். சில நிமிஷங்களுக்குப் பின் சங்கரி அசட்டுச் சிரிப்புடன் மெதுவாக "அம்மா சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு" என்றாள்.

"உன் வழக்கந்தானே அது. சம்பளம் வாங்கு நாளாகு முன் உனக்கு முன் பணம் வேண்டும்."

"சம்பளப் பணமெல்லாம் கடனுக்கு சரியாய்ப் போச்சு. வீட்டுக் காரு காயலாவாப் படுத்ததினா தானே கேக்கிறேன். பாழும் மழை வந்து கட்டட வேலையும் நடக்கலை. கொல்லத்துக் காருங்க ரொம்பக் கஷ்டப் படராங்க. என் புருஷன் காயலாவா யில்லாட்டி எப்படியோ பாத்துக்குவாங்க. பெரிய மனசு வைச்சு கொடுங்கம்மா" என்று தங்கம் முறையிட்டான்.

"போன மாத முன் பணத்தையே நான் பிடிக்க வில்லை. இன்னும் முன் பணம் வாங்கினால் எப்படி அதைக் கழிக்கப் போகிறாய்."

"மாசம் ஒரு ரூபாயாப் பிடிச்சுக்கோங்கும்மா. என் புருஷனுக்கு இரவது நாளாக் காச்சல். குட்டிங்களுக்கு சீதபேதி. ஓரிடத்தில் இருந்த பொண்ணுக்கு இரண்டு நாளா சுரம். இல்லாட்டிக் கேக்க மாட்டேன்"

"சரிதான் போ! இப்போது எனக்கு வேலையா யிருக்கின்றது. உங்களுக்கென்ன. அஞ்சாமல் பொய் சொல்லுவீர்கள். நமக்கோ கஷ்டமென்று கேட்டால் மனம் இளகுகிறது. எதுவாயிருந்தாலும் சரி. இப்போது ஒன்றும் முடியாது. இன்றைக்கு பணத்தை வாங்கிக் கொண்டு நாளைக்கு வேலைக்கு வராமல் நின்று விடுவாய்" என்று மங்களம்மாள் சில வார்த்தைகளை சங்கரியை நோக்கியும் சிலவற்றைத் தன்னிடமே கூறிக் கொண்டும் உள்ளே சென்று விட்டாள். மழையில் வேலை செய்த திருப்புடைவை—அதைப் புடைவை என்று சொல்ல மனம் வரவில்லை.—நனைந்திருக்க சங்கரி நிராசையுடன் விடு திரும்பினாள்.

கண்களில் நீருடன் செல்லும் வேலைக்காரியை மங்களம்மாள் பார்த்திருந்தால் மனமிளகி கேட்ட பணத்தை கொடுத்திருப்பாளோ என்னமோ! அவள் தான் கூறிக் கொண்டவாறு இளகிய மனதுடையவள் தான். அதனாலேயே அவள் அதற்கு முன் பல வேலைக் காரர்களுக்கு முன் பண முதவியதும், அவர்களிற் சிலர் அவளுரைத்தவாறு முன் பணம் வாங்கிய

தும், வேலையை விட்டு நின்று போனதும். ஆனால் சங்கரி பொய் சொல்லவில்லை. அவள் சொல்லிய தனைத்தும் உண்மையே. அவள் நல்ல வேலைக்காரி. சற்று முன் கோப முள்ள மங்களம்மாளிடம் பல வேலைக்காரர்கள் நிலைக்காமல் மாறிக் கொண்டே யிருந்தனர். ஆனால் சங்கரி மட்டும் அவளிடம் விசுவாசமாய் அவள் போக்கை அறிந்து நடப்பவள்.

வறுமையின் கொடுமையால் சங்கரி கேட்கும்படி நேரிட்டதும், மிக அற்பத் தொகைதான். அப்பணம் ஒரு பொருட்டன்றாயினும் மங்களம் அதை மறுத்ததும் வியப்பன்று. அவள் தயவுடன் தான் போன மாத முன் பணத்தைப் பிடிக்கவில்லை. அதையே கொடுக்காமல் மேலே இன்னும் பணம் கேட்டால் யார் தான் தான் கொடுப்பார்கள். சங்கரி வேறு யாரையாவது சென்று தன் துயரைக் கூறியிருந்தால் அவர்கள் அவளை ஆயிரம் கேள்வி கேட்பார்களேயன்றி, அரைக் காசு கொடுத்து அனுப்புவார்களோ! அதையும் நிரூபிப்பவள் போல் சங்கரி நாலைந்து வீடு புகுந்து பலனற்று ஏக்கத்துடன் தன் குடிசைக்குத் திரும்பினாள்.

அங்கு ஈரம் பொசிந்து கொண்டிருந்த தரை மீது விரித்திருந்த ஒரு கிழிந்த பாயின் மேல் அவள் புருஷன் கந்தன் படுத்திருந்தான். புதிதாக வேயப்படாத மேற் கூரையின் வழியாக மழை அவ்விடத்தை இன்னும் ஈரமுள்ளதாகச் செய்தது. ஜுரம் என்று சங்கரி சொன்ன அப் பெண் அடுப்பில் வைக்கப்பட்டிருந்த சட்டியிலிருந்த கூழை மா அகப்பையால் துழாவிக் கொண்டிருந்தாள். இரண்டு குழந்தைகள் இடுப்பில் ஒரு கிழிந்த சவுக்கமும் மேலே ஒரு கிழிந்த சட்டையுமாக குவிந்திருந்த கந்தைகளின் மீது சுருண்டு படுத்திருந்தன. இரண்டு வயதுள்ள ஒரு சிறுவன் மட்டும் உடம்பின் மீது ஒன்றும் இல்லாது கட்டை மணை போல் திரிந்து கொண்டிருந்தான். தாயைக் கண்டதும் அப் பையன் பசிக்கிறதென்றான். பணமில்லாததினால் சங்கரி அரிசி வாங்கவில்லை. அவள் எஜமானி வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த பழைய அமுதை அக் குழந்தைக்கும் போட அவள் மனம் வருந்தினாள். சீதபேதியும் ஜுரமுமாயிருக்கையில் சில்லென்றிருக்கும் பழைய அமுதைப் போட்டால் எவ்வாறு ஒத்துக்

கொள்ளும். பசி யென்று கேட்கும் குழந்தைக்கு அன்னமிட வேறு விதியுமில்லை. சங்கரியிடம் அப் பெண் வந்து கந்தனுக்கு கஷாயம் வைத்துக் கொடுத்ததையும் ஜுரமும் வழக்கத்தை விட அதிகமாக இருப்பதையும் கூறினாள். சங்கரி நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். அவ் வுணர்ச்சி அவன் கண்களைத் திறக்கச் செய்தது. தாக மென்று கேட்டான். சட்டியில் காய்ந்து கொண்டிருந்த கஞ்சியில் சிறிது கொண்டு வந்து அவன் வாயில் ஊற்றினாள். கந்தன் கொஞ்சம் குடித்தான். பிறகு இறங்கவில்லை. சங்கரியை வெறித்துப் பார்த்தான்.

"தாயே! அம்மா!! மாரடைக்குது. தலை நோவுது. காலைக் கொண்டு போகுது. டே யய்யா..........என்னே

..........ன்ன நோவுது. மூச்ச விடக் கூடலை" என, தலையைப் புரட்டினவாறு கையையும் காலையும் மாறி மாறி போட்டுக் கொண்டு மூச்சு வாங்கி கந்தன் இவ்விதமெல்லாம் அலட்டிக் கொண்டிருந்தான். அவனது முகத்தையும் வார்த்தைகளையும் கவனித்த சங்கரி மிகப் பயந்தாள். காலைத் தொட்டுப் பார்த்தால் ஜில்லென்று இருந்தது. ஓவென் றலறிக் கொண்டே சங்கரி கொட்டும் மழையில் வயித்தியர் வீட்டை நோக்கி ஓடினாள்.

சங்கரி சற்று சுமாரான அழகுள்ளவள் என்று இத்துக்ககரமான சமயத்தில் நாம் சொல்ல வேண்டி யிருக்கிறது. அவள் டாக்டரைக்கண்டு கூப்பிட அவர், "பணத்தைக் கொடு; இல்லா விட்டால் முடியாது என்று அவள் பக்கம் திரும்பாமலே சொன்னார். அவள் அவர் காலில் விழுந்தது, சேலையை கொதுவை வைத்தாவது அப்புறம் தருகிறேன்" என்று மன்றாடினாள். அப்போதுதான் அவளது ஸ்பரிச உணர்ச்சி டாக்டருக்குப் பட்டு உள்ளே மருந்து பரவியது போன்று தோன்றியது. திடுக்கிட்டு அவளைப் பார்த்தார். மெதுவாகக் கரங்களைப் பற்றினார்.

சங்கரி அக்காமாதுரனது உட்கருத்தை யறிந்தாள். அவள் அங்கம் சிலிர்த்தது. உடம்பு கொதித்தது. அவன் பிடியினின்று தப்பி வெறி பிடித்தவள் போல் தன் கூரை வீடு ஓடினாள்.

கந்தனுக்கு ஒருவர் வைத்தியமும் இனித் தேவையில்லை. அவனுக்கு அது தெரியும். அவன் கண்கள் சங்கரியின் மீதும் குழந்தைகளின் மீதும் சென்றன. அவைகளில் பிரதி பலித்த துயரையைப் பார்த்தவரே உணரக் கூடும். அவன் அதிகக் கவலை கொள்ளவில்லை. துயரம் சகஜமாய் விட்டால் தன்னால் எதுவுமில்லை. எல்லாம் வல்ல ஈசன் மரம் வைத்தவன் தண்ணீர் வார்ப்பான் என்கிற ஞான முதயமாகி விடுமல்லவா! அவன் நினைவு தெரிந்த முதல் கைப்பாடு பட்டு சரீரத்தை உழைத்துத் தன் வயிற்றையும் மனைவி மக்களையும் ரக்ஷித்து வந்தான். பிறர் வைத்த சொத்தை அனுபவித்து அதன் பெருமையும், கஷ்டமும் தெரியாது மமதை கொண்டுள்ள செல்வந்தர்கள் ஏழைகந்தன்—கூலி வேலை செய்து, மெய்வருத்தக் கூலி

வெறும் கந்தனை விட கடவுளின் பார்வையில் மேம்பட்டவர்களாவார்களா?

கந்தனது சுவாசம் வர வர திணறியது. கடைசியில் சில வார்த்தைகளை முணுமுணுத்தான்.

“ஆ............றுமாசம் பிள்ளை தாச்சி? சமுசாரி பாவம். சாமி காப்பாத்தணும். சங்கரி, சங்கரா............தாகம்” என்று குழறினான்.

சங்கரி சிறு சுடு ஜலம் அவன் வாயில் விட்டாள்.

அத்துடன் அவன் சுவாசம் அடங்கிற்று.

அவன் கண்களினின்று ஒரு ஒளி எழும்பி சங்கரியின் கண்களில் படிந்தது.

அவன் ஆத்மா சாந்தி யடைந்தது.

இறைவனே! இவ்வுலக நாடகத்தின் முக்கிய பாத்திரமான கந்தனை சேர்த்துக் கொண்ட நீ அபலைகளான சங்கரியையும் அவள் குழந்தைகளையும் காப்பாற்று!

சென்னை சினிமா சென்டிரலில் ஏப்ரல் 25உ சனிக்கிழமை ஆரம்பம்!

இடி முழக்கமல்ல! தாரையின் முழக்கமே தரணியைச் செவிடுபடச் செய்கிறது.
லீலா விநோத கோலாகலமான படம் எது?
தமிழ் டாக்கிகளுள் தலைமைவகித்து தாரணியிலே தனிப்புகழ் நாட்டும் படம் எது? எது??
அதுதான்—மிஸ். T. V. ராஜசுந்தரிபாய் நடித்த
“தாரா - சசாங்கம்” என்னும் ஒப்பற்ற தமிழ்ப் பேசும் படம்
சினிமா ரசிகர்களே! தாங்கள் அதைப் பார்த்து மகிழவேண்டாமா?
மதுரை சில்வர் ஜூபிலி டாக்கீஸிலும், இதர ஊர்களிலும்
ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!

பிலிம் போர்டு தேர்தலில் முதல் ஸ்தானம் பெற்ற S. D. சுப்புலக்ஷிமியும், C. V. V. பந்துலு, M. V. கிருஷ்ணப்பா ஆகியோர் நடித்த
“உஷா - கல்யாணம்”
(பல ஊர்களில் காட்டப்பட்டு வருகிறது)

S. D. சுப்புலக்ஷிமி & M. K. தியாகராஜ பாகவதர் ஒருங்கு சேர்ந்து நடித்த
“நவீன சாரங்கதரா”
(தமிழ் நாட்டவர் கண்டு புகழ்ந்த படம்(

எமது அடுத்த படங்கள்:—துளசி பிருந்தா, மஞ்சு-கோஷா, மதுரை-வீரன்.

விபரங்களுக்கு:—முருகன் டாக்கி பிலிம் கம்பெனி, மதுரை.
போன் நெ. 53. தந்தி:—Talko Films.

மோகனாவின் முன்யோசனை

—:(0):—

("அசலம்.")

ஓர் நாள் வெள்ளிக்கிழமை, இரவு பத்துமணி இருக்கலாம். நிலவு களங்கமில்லாமல் பிரகாசிக்கின்றது. அமராவதியாற்றின் கரையில் தனிமையான மணற்குன்று ஒன்றின்மேல், ஒரு வாலிபன் சாய்ந்த வண்ணமாக ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவனது கை, பிரம்பினால் மணலைக் கிறிக் கொண்டிருந்தது. அவனுடைய மனம் ஏதோ கவலையில் ஆழ்ந்திருந்தது.

'மோகனா! எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? யாவும் வெளிப்பகட்டே. ஹா! என்ன உலகம் இது. அதிலும் பெண்கள் உள்ளத்தின் ஆழத்தை அறிவது அரிதரிது! களங்கமில்லாத தண்ணீர் மிக்க ஆழமுடையது என்பதை முன்னரே அறியாமற் போனேனே! என்ன சாகஸம்,என்ன ஒய்யாரம்! குடும்ப ஸ்திரீகளுக்கு இருக்கும் நடத்தைகள் அல்லவே இது. இவள் ஒரு பரத்தைதானோ?........ பத்தர் நம்மை ஏமாற்றி மணம்முடித்துவிட்டார். நாடோடிகளை என்றும் நம்பக்கூடாது. பல ஆடவர்களிடம் இவள் நெருங்கிப் பழகியிராவிடின், இவ்வித ஆபாச சாகஸங்கள் எவ்வாறு பிடிபட்டிருக்கும்?........... எத்தனை காதல்கிளிகளை எவ்வளவு ரஸிகமாக வரைகின்றாள்........... சாவித்திரி எங்கே, சீதை எங்கே? இவள் எங்கே? கலிகாலம் என்பது சரியாயிற்று. இருக்கட்டும். இன்றையதினம் இரண்டில் ஒன்றை முடிவு செய்து விடுகிறேன்,—" என்று இவ்விதமாக ஒன்றுக் கொன்று முரண்பாடான பல விஷயங்களைக் கொஞ்சம் பலமாகவும், பிறகு சற்று மெதுவாகவும் தனக்குத் தானே பேசி முடிவுசெய்து கொண்டான்.

உடனே தன் இடுப்பில் சொருகியிருந்த ஏதோ ஒன்றை எடுத்தான். உறையிலிருந்து இழுத்ததும் அது தகதகவென்று மின்னிற்று. "கட்டாரியே! உன்னை இதுகாறும் களங்கமில்லாமல் காப்பாற்றினேன். உன்னைப்போலவே யாவரும் களங்கமில்லாமல் இருப்பார்களென்றும் நினைத்தேன். இப்போது என்னைச் சதித்து விட்டது உலகம். என் மானம் அழிந்து விட்டது. எனது மானபங்கத்தை, மாசுமருவற்ற நீ காப்பாற்றுவாயா?" என்று கூறியவாறே உறையில் போட்டுக்கொண்டு, ஏதோ நிச்சயபுத்தியுடன் சரேலென எழுந்து தன் வீட்டை நோக்கி நடந்தான்.

"பொறத்தவர் பூமியாள்வர். ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டு. எண்ணித்

துணிக கருமம், துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு. கண்டதும் பொய், கேட்டதும் பொய், தீர விசாரித்து அறிதலே மெய்"— என்பதாக இப்போது அவன் மனம் வழிகெடுகக் குறைகூறலாயிற்று. அதனால் அவனுடைய நடையும் தடுமாறியது.

"இதென்ன என் வீட்டில்தான் சதிபதிகளுக்குள் இரு பிளவென்றால், இந்தப் பாழும் மனோ வீட்டிலும் கூடவா இரு பிளவு ஏற்படவேண்டும்! எது எப்படியாயினும் சரி. நான் ஆண் சிங்கமாயின் நினைத்தபடி நடத்தியேதான் தீருவேன்"— என்று கூறியபடியே தன் வீட்டின் வாயிலை அடைந்தான்.

*

மோகனா மிகவும் அழகு வாய்ந்தவள். வயது பதினேழு நடப்பு. ஒரு விசேஷம் என்னவெனில் அவளது கூந்தல் முழங்காலுக்கும் கீழேதவழுமாறு நீண்டிருந்தது. ஆதலின் அவளைக் "கூந்தலழகி" என்பர். நாட்டியம் சங்கீதம் முதலியன கற்றிராவிடினும், ஒய்யாரமான நடையும் இனிய குரலும் இயற்கையாக வாய்க்கப் பெற்றவள். ஆங்கிலம் கற்றவள் அல்லவெனினும், சூட்சும அறிவு சுபாவமாக உள்ளவள். அவளுடைய தகப்பனார் இராமகிருஷ்ண பத்தர் சித்திரக் கலையில் மிக்க தேர்ந்தவர். பாரசீக, சீன, அமெரிக்க, பிரெஞ்சு, சித்ரக்கலைகளை வெளிநாடுகளுக்குச் சென்று பயின்று, நமது இந்தியக் கலையிலே ஒரு புத்துயிர் தோற்றுவிப்பதற்காகக் கண்ணும் கருத்துமாகப் பாடுபட்டவர். மோகனாவும் சித்திரம் எழுதுவதில் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

தக்க வயதில் சத்தியநாதனை மணம்

புரிந்து, பூவும் மணமும்போல் இல்லறம் நடத்தி வந்தனள். இவ்வாறு மூன்று மாதம் கடந்தது. இவர்களது காதல் இன்பத்திலே ஒரு கலக்கம் இப்போது ஏற்பட்டு விட்டது. அதன் விளைவால்தான் முற்கூறியவாறு சத்திய நாதன் நதிக்கரையில் எண்ணுதன வெல்லாம் எண்ண நேரிட்டது. மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள். இப்போது மூன்றுமாதம் முடிந்தமையால், இவளது காதல் உலகில் ஓர் கிரகணம் ஏற்பட்டதுபோலும்.

'பாம்பறியும் பாம்பின் கால்' தனது புருஷன் தன்மீது சந்தேகம் கொண்டுவிட்

டார் என்பதை சூட்சம புத்தியுடைய மோகனாவும் தெரிந்து கொண்டாள். ஆடவர்கள் அவசரப் புத்திக்காரர் என்பதை அவள் நன்கு அறிவாள். அவருடைய மனோவியாதியைப் போக்க மருந்தொன்று தேடலானாள். நிற்க,

எப்போதும் இரவு எட்டுமணிக் கெல்லாம் வீடுவந்து சேருபவர், அன்று மணி பதினொன்று ஆகியும் வாராததால், ஏதோ விபரீதம் நடக்குமென யூகித்து, அன்று விரத நாளானபடியால் ஆகாரம் ஒன்றும் உட்கொள்ளாமல் தன் படுக்கையறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

* * *

மந்தமாருதம் பரந்தவெளியில் சுகந்தமாக வீசுகின்றது. வெளியே வெண்ணிலவு தண்ணொளியைப் பரப்பிற்று. படுக்கை அறையில் மின்சார விளக்கு பிரகாசமாக எரிகிறது. எங்கு பார்த்தாலும், பன்னிறமும் அழகும் வழிந்தோடும் சித்திரங்கள் இமையா நாட்டத்தோடு, அதன் நடுவில் போட்டிருந்த கட்டிலைப் பார்த்தவண்ணமாக இருந்தன. அவை யாவும் மோகனாவின் கைத்திறனைக் காட்டும் அத்தாட்சிகளாம்.

படுத்தவண்ணமே, தலையணையின் கீழிருந்த தான் எழுதிய சித்திரமொன்றைப் பார்த்துக்கொண்டு ஏதோ அதனடியில் எழுதிக்கொண் டிருந்தாள் மோகனா.

சத்திய நாதன் வழக்கம்போலக் கதவைத் தட்டாமலே, பரபரப்புடன் அதனைத் தள்ளிக்கொண்டு அறையில் நுழைந்தவாறு படுக்கையை உற்று நோக்கினான்—பாம்பு ஓர் பறவையை நோக்குவதுபோல. மோகனாவும் திடுக்கெனத் தலையைத் தூக்கி மருண்டு நோக்கினாள்—பறவை பாம்பைப் பார்ப்பது போல.

சத்தி:— 'மோகனா! அது யாருடைய படம்? யாருக்கு அதை எழுதுகின்றாய்?' என்று சட்டெனக் கேட்டான்.

மோகனா:—'தாங்கள் இந்நேரம் வாராததால் காத்துக்கொண் டிருக்கிறேன். சாப்பிடலாம் வாருங்கள்' என்று கூறி எழுந்து நின்றாள்.

சத்தி:—ஏ! நீலி!! நீ உண்மையில் என்னை நேசிக்கின்றாயா?

மோகனா:—நாதா! தாங்கள் கேட்பதன் நுட்பம் எனக்கு விளங்கவில்லையே!

சத்தி:—'உம்....... உன் நுட்பம் எல்லாம் எனக்கு விளங்கிவிட்டது. உன் நடத்தை எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

மோகனா:— ஒரு பாவமும் அறியேனே. கனவிலும்கூட உங்களுக்குத் துரோகம் நினைத்தறியேனே!

சத்தி:—'உன்னிடம் வாதமிடுவதில் பயனில்லை. நீ வேறொரு ஆசைநாயகனுடைய உறவை வைத்துக்கொண்டிருக்கிறாய். உண்டா இல்லையா? உண்மையைக் கூறிவிடு. இல்லையேல் இதோ இந்தக் கட்டாரியால் குத்துவேன்'— என்று ஓங்கினான் கட்டாரியை.

மோகனா:—'நாதா! நாதா! நான் ஒரு பாவமும் அறியேன். சத்திய....'— என்று கூறியவாறே கட்டிலின்மேல் விழுந்து மூர்ச்சையானாள்.

சத்தியநாதனும் பிரமித்துவிட்டான். அவளது இனிய இரங்குரல் அவனது இருதயத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. ஓங்கிய கை அப்படியே நின்றது. படுக்கையை ஏறிட்டுப் பார்த்தான். தலையணையின்கீழ் கிடந்த படத்தை எடுத்தான். அவன் கண்கள் சற்றுநேரம் அதிலேயே பதிந்திருந்தன. கருவிழி சுழன்றதே ஒழிய இமை கொட்டவே இல்லை.

— தூரத்திலே ஒரு பெரிய மலைத் தொடர். அதனூடே ஓர் அருவி ஓடுகிறது. இருபுறத்திலும் வளம்பெற வளர்ந்த மரங்கள். அவற்றின் கிளைகளிடையே பல பக்ஷிகள். அருகிலே ஒரு புதர். அதன் மறைவிலே ஓர் பெண்சிங்கம். தாயினிடமிருந்து அப்போதுதான் ஓர் சிங்கக்குட்டி தோன்றுகிறது. அதன் எதிரே பெரிய யானை. அப்போதுதான் கண்திறக்கும் இளஞ்சிங்கம் யானையைக் கண்டதும் முன்னங்கால்களைத் தூக்கி மத்தகத்தின் மேல் அடிக்க முயலுகின்றது —

இதுவே அவன் கண்ட காட்சி! அப்படத்தின் கீழே "மீன் குஞ்சுக்கும் நீச்சு பழக்குவாருண்டோ? யாவும் பிறவிக் குணம்"— என்று அழகிய எழுத்தால் எழுதப்பட்டிருந்தது. சில எழுத்துக்கள் இன்னும் ஈரமாகவே இருந்தன!

அந்த எழுத்துக்கள் ஒவ்வொன்றும் அவனை ஏளனம் செய்வதுபோல் தோன்றின. மோகனா தயாரித்த மருந்து, சத்தியநாதன் மனதிலே மிக நன்றாக வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

,'என்ன பைத்தியக்காரன் நான். ஒவ்வொரு ஜந்துவிற்கும் பூர்வ வாசனைக்கேற்ப குணவிசேஷங்கள் பரிணமிக்கின்றன என்பதை உணராமல், ஒரு பாவமுமறியாத என் கண்மணி மோகனாவைப் பற்றி நான் சந்தேகம் கொண்டேனே! ஒருக்கால் என் கட்டாரி தன் காரியத்தை நிறைவேற்றியதோ"—என்று கூறிய வண்ணமாக மோகனாவிடம் மெல்ல அணுகினான். காயமொன்றும் இல்லாதிருப்பதைக் கண்டான். கட்டாரியை மறுமுறை பார்த்தான். விபரீதம் விளையவில்லையென்பதை யுணர்ந்து சந்தோஷம் கொண்டான். தன் களங்கமில்லாத கட்டாரிக்கு ஓர் முத்தம் இட்டான்.

பக்கத்திலிருந்த டம்ளரிலிருந்து கொஞ்சம் ஜலத்தை எடுத்து முகத்தின் மேல் தெளித்தான். அருகில் முழங்கால் படியிட்டவாறு விசிறி கொண்டு மெல்ல விசிறினான். கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். சற்று நேரத்தில் கண்விழித்தாள் மோகனா.

சத்தியநாதன் முழங்கால் படியிட்ட வண்ணமே தன் காதலியை நோக்கி "மோகனா! நீ என்னை மன்னிப்பாயா?"— என்று வினயமாகக் கேட்டான்.

மோகனாவின் விழிகளிலிருந்து கண்ணீர் ததும்பிற்று. இருகரங்களையும் அவனது தோளின்மே லிட்டவாறு ஓர் முத்தமிட்டாள். சத்தியநாதன் பாவசமடைந்து ஒரு முத்தத்திற்கு இருமுத்தம் மோகனாவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுத் தன் கட்டாரிக்கும் ஓர் முத்தமிட்டான்.

கலியாண முஸ்தீப்பு!

(பியர்ஸ்.)

'வீட்டைக் கட்டிப்பார்–கலியாணத்தைப் பண்ணிப்பார்' என்றுரே ஒருவர், அவர் ஒரு தேர்ந்த அனுபவசாலியாக இருக்கவேண்டும். இந்த நாளில் யுத்த முஸ்தீப்புகள் கூட நினைத்த மாத்திரத்தில் தயாராகி விடுகின்றன. கலியாணத்திற்கோ..............பண்ணித்தான் பார்க்கவேண்டும்!

சென்னையில் என் தமக்கையின் பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி விட்டதாகக் கடிதம் வந்தது—அவ்வளவு தான். வீட்டில் ஒரே அமர்க்களம். அப்பளமிடுவதும் அவலிடிப்பதும் உளுந்து உடைப்பதும் மாவரைப்பதும் மும்முரமாய் நடந்தன. என் பாட்டிக்கு நீக்குப் போக்குத் தெரியவில்லை. இரவு பகலாய் தான் கண் விழித்து வேலை செய்வது போலவே தற்காலப் பெண்களிடம் எதிர்பார்க்கலாமா? என் மனைவி "நானென்ன செய்யட்டும். நான் குழந்தைக்காரி. இதோ பாருங்கோ. என்னைக் கொஞ்ச நாழியாவது கையாட காலாட விட்டாத்தானே?' என்று குழந்தையின் பேரில் பழியைப் போட்டுவிட்டு, விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு அப்பால் நகர்ந்து விடுவாள். கிழவி ஓடியாடி வேலை செய்யும்போதுதான் மட்டும் சும்மா இருந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோவென்று 'எனக்கென்னமோ உடம்பு கணகணவென்றிருக்கிறது. நீங்கள் வேலை செய்வதைப் பார்த்தால்கூட என் இடுப்பு விட்டுப்போகிறது' என்பாள். சில சமயங்களில் 'கலியாணம் பண்ணப் போகிறவள் ஹாயாக ஆகப் பட்டணத்தில் உட்கார்ந்திருக்க எல்லா சாமான்களையும் இங்கென்ன தயாரிப்பது' என்று முணமுணத்துக் கொள்வதும் என் காதில் விழும்.

பாட்டிக்கு ஒன்றும் தெரியாதவளென்று பெயரானாலும் பேரன் மனைவியின் 'பேரம்' எல்லாம் அவளுக்குத் தெரியாமற் போகவில்லை. 'உம். ஆத்தில் பிறந்த பெண்ணுச்சேன்னு ஆருக்கானு அக்கறை யிருந்தாத்தானே. என்னமோ நான் இருக்க வரையிலுமாவது என் கையாலானத்தை செய்துட்டுரேன்' என்று வருவார் போவாரிடத்தில் சொல்லிக் கொள்வாள்.

என் மனைவி இவ்வாறு அலக்ஷியமாயிருந்ததை ஒரு விதத்தில் நலமென்றே எண்ணினேன். எங்கள் ஊரிலிருந்து சென்னைக்குப் போய் வருவதாயிருந்தால் ஒவ்வொருவருக்கும் சராசரி இருபது ரூபாயாவது செலவாகும். கலியாண வேலைகளில் அசட்டையாக விருந்த என் மனைவி,

கலியாணத்திற்குப் போவதிலும் அவ்வாறேதான் இருப்பாள் என்றும், சில அசடுகளைப்போல் கலியாணத்திற்கில்லாவிட்டாலும் பட்டண யாத்திரைக்காகவாவது நானும் வருவேன் என்று பிடிவாதம் செய்யமாட்டாள் என்றும் எண்ணியிருந்தேன். அவ்வாறே தீர்மானித்து, என் பாட்டியிடம் தனியாக இந்த யோசனையைத் தெரிவித்தபோது 'சே! அது நன்னாயிராது. அம்மா கோலத்துக்கு அவ இல்லாதெப்போனு நன்னாயிருக்குமோ' என்று மறுத்துரைத்தாள் பாட்டி. என்னுடைய பாட்டியின் குணமே ஒரு போக்கு. அவள் செய்யும் காரியங்களையெல்லாம் நாலுபேர் பார்த்து மெச்சவேண்டுமென்றெதிர்பார்ப்பவள். ஆனாலதே காரியங்களைச் செய்யாமல் விட்டுவிட்டால் நமக்கொரு இருபதுரூபாய் சிலவு மீதமாகுமென்பதைச் சொல்லிவிட்டால், உடனே அவைகளை விட்டு விட்டு அதற்காகச் சமாதானமும் சொல்ல ஆரம்பித்து விடுவாள். ஆகையால் என் மனைவியை அழைத்துப் போகாவிட்டால் இருபதுரூபாய் மீதமாகு மென்பதை மெதுவா யோதினேன். அவ்வளவுதான். பாட்டி திரும்பிவிட்டாள். 'வீணாக ரயில்காரனுக்கும் மோட்டார்காரனுக்கும் கொட்டியழுரத்திலே என்ன பிரயோசனம். அந்த ரூபாயை அப்படியே கலியாணப் பெண்ணுண்டை வெச்சுக்குடுத்தா காலுக்குக் காப்பாவது அடிச்சுப்போட்டுக்கும். உன் தம்பி அவன் ஆம்படையாளை அழைச்சிண்டு வருவான். அதுபோறும்' என்று சமாதானம் சொன்னாள்.

இத் தீர்மானத்தை நான் என் மனைவியிடம் சொல்லவில்லை. இதைப் போய்ச் சொல்வதென்ன, அவளுக்கே இஷ்டமில்லாததைப்பற்றி நாம் பேசப்போனால் ஒருக்கால் மனதை மாற்றிக்கொண்டு விடுவாளோ என்பது என் சந்தேகம்.

முகூர்த்த தேதி நெருங்கிவிட்டது. ஒருநாள் என் மனைவி, 'என்னைக் கலியாணத்துக்கு அழைச்சிண்டு போற விஷயமா உங்க பாட்டியுடன் மந்திராலோசனை பண்ணது எவ்வளவிலிருக்கிறது!' என்றாள். எனக்கிது பாம்ஷெல் போட்டது போலிருந்தது! நான் பாட்டியுடன் தனிமையாகப் பேசியதை இவள் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருக் திருக்கவேண்டும்.... உடனே இவள் என்னுடன் பேசுவதையும் என் பாட்டி ஒட்டுக் கேட்டுக்கொண்டிருப்பாளோ என்று சந்தேகம் வந்துவிடவே சுற்று முற்றும் பார்த்தேன்.



நல்ல வேளையாக அவள் பின்கட்டில் மாவரைத்துக் கொண்டிருந்தாள். என் மனைவி போட்ட கேள்வியிலிருந்தே அவளுடைய எண்ணம் விளங்கிவிட்டது. ஆதலின் 'மந்த்ராலோசனை யென்ன. நாம் மூவரும் போனால் அறுபது ரூபாய் சிலவாகும். இரண்டுபேர் மட்டும் போனால் இருபது ரூபாய் மீதமாகும் என்றுதான் சொன்னேன். நீ போக வேண்டுமென்றால், நீயும் பாட்டியுமாகப் போய் வாருங்கள். நான் இங்கேயே இருந்து விடுகிறேன். கலியாணத்தில் நான் வாராததைப்பற்றிய பேச்சு வந்தால், திருடர் பயம் அதிகமா

யிருப்பதால் வீட்டில் யாராவ தொருவர் இருக்க வேண்டுமேயென்று நான் தங்கி விட்டதாகச் சொல்லிவிடு' என்றேன்.

என் மனைவிக்குப் பதில் திருப்தி யளித்ததாகத் தோன்றவில்லை. ஒரு அரை மணிநேரம் என்னென்னமோ பிரசங்கம் செய்தாள். சாதாரணமாய் என் மனைவி பிரசங்கத்திற் காரம்பிக்கும் போதெல்லாம் பிரசங்கம் சீக்கிரம் முடிவடையும் பொருட்டு நான் கண்மூடி ஞானியா யுட்கார்ந்து விடுவது வழக்கம். இப்பொழுதும் பிரசங்கம் அவ்வாறே இனிது முடிந்தது. 'ஆத்தில் பிறந்த பெண் அருமையா கலியாணம் பண்றா. அதுக்கு நான் வாராமெ போனா நன்னா யிருக்குமோ. ஆத்திலே பெண் பிறந்தால் அத்தை அசலாவாள் என்று இந்தக் குழந்தையையன்னா நாலுபேர் நிந்திப்பா' என்பதுதான் அப்பிரசங்கத்தின் சாரம்.

அவளுடைய பிரசங்க முடிவில், அவ ளிடுப்பிலிருந்த குழந்தை, தன் தாயாரின் தொண்டையைவிடத் தன் தொண்டை எவ்வகையிலுங் குறைந்ததல்ல வென்பதைக் காட்டத் துடங்கியதுபோல் வீறிட்டழ வாரம்பித்தது. தாயாரின் பிரசங்க வேகத்தைக் கண்டு அலண்டு விட்டது போலும், அல்லது தன் தாயாரினால் கிள்ளப்பட்........ ....டிருக்காது.......... இருக்கலாம். ஸ்த்ரீ புருஷரிடையே ஊடல் நேரிடின் ஒரு பாவமு மறியாத அன்னாரின் குழந்தைகள் பெரிதும் இடர்ப்படுதல் கண்கூடு...............

ஆகவே நாங்கள் மூவருமே போவதாகத் தீர்மானமாயிற்று.

அப்பளம், அவல், மிளகாய்ப் பொடி முதலியவை மட்டும் தயாரித்து வரும்படி எழுதி யிருந்த என் தமக்கை இப்பொழுது சில பாத்திரங்களையும் வாங்கி வரும்படி அவசரக்கடிதம் அனுப்பி விட்டாள். சென்

னைவிட எங்களூரில்தான் பாத்திர சாமான்கள் சகாயமாய்க் கிடைக்குமாம்! என்ன ஆழ்ந்த யோசனை! இந்த சாமான் களைப் பொருத்தவரையில் தங்களுக்குச் செலவு மீதமாகு மென்பதே அவன் நோக்கம்.

எனக்கு எமதர்மனின் உத்தியோகம் கிடைத்தால், பாவம் செய்தவர்களை யெல்லாம் நரகத்தில் தள்ளி இடர்ப்படுத்தி அதன் பொருட்டு எனக்கும் என் தூதர்களுக்கும் மந்திரிகளுக்கும் கணக்காளர்களுக்கும் வீண் வேலை யுண்டாக்கிக் கொள்ளமாட்டேன். பேசாமல் ஒவ்வோர் பாவம் செய்தவனையும் ஒரு அரை டஜன் பெண்களுக்கு அம்மாளுகப் பிறக்கும்படி செய்துவிட்டு, குஷாலாய் 'சத்தியவான் சாவித்ரி' நாடகம் பார்த்துக்கொண்டிருப்பேன். உம்; அதோ என் பாட்டி இறைகிறுள் பாருங்கள்........என் தாயார் உயிருட னிருந்திருந்தால் எல்லாம் நடக்கும் விதமே வேறுதானும். ஆத்தில் பிறந்த பெண்ணுக்கு அம்மா இருக்கும் வரையில்தான் சீரும் சிறப்புமாம். அவ ளில்லாமல் போகவே அக்காவைப்பற்றி அக்கரை கெட்டு அசட்டை மேலிட்டு விட்டதாம்!

தாயா ரில்லாவிட்டாலும் பிறந்தகத்துக்குத்தான் கொடுக்கும் ஆர்டர்கள் எல்லாவற்றையும் அவ்வப்போது கவனித்தனுப்புவதற்குப் பாட்டி யிருக்கிறுள் என்ற நம்பிக்கை என் தமக்கைக்குப் பூர்ணமா யுண்டு.

வீட்டில் உட்கார்ந்த இடத்திலிருந்து கொண்டு வேலைகளைச் செய்ய முடியவில்லை என்று சொன்ன என் மனைவிக்கு, பாத்திரசாமான்கள் வாங்குவதற்கு என்னுடன் கூட கடைத்தெருவுக்கு எப்படி நடந்துவா முடிந்ததோ தெரியவில்லை. அதோடு, என்னுடன் கூட வந்ததுடன் நிற்கவில்லை. 'இதைப்போல் நம்மாத்துக்கும் ஒன்னு இருந்தாத் தேவலை' என்று சொல்லி என் தமக்கைக்காக வாங்கிய சாமான் ஒவ்வொன்றுக்கும் 'டியூப்ளி கேட்' ஆக இன்னென்றை எடுத்து வைத்துக் கொண்டாள்!

கலியாணத்திற்குப் புறப்பட்டோம். ஸ்திரீகள் வெளியூர்களுக்குப் புறப்படுவதானல் அதோ இதோ வென்று அரை நாள் வீணுக்கி விடுவார்களென்பது எனக்குத் தெரியும். எட்டுமணி ரயிலுக்குப் போகவேண்டுமென்று சொல்லி வைத்திருந்தால்தான் பனிரண்டுமணி வண்டியையாவது பிடிக்கலாம். மூட்டைகளை மூன்று தரம் அவிழ்த்து முடிவார்கள். புடவையை இரண்டுதரம் அவிழ்த் தவிழ்த்துக் கட்டிக் கொள்வார்கள். தலைப்பைத் தள்ளிச் சொருகுவதும் முந்தாணியை முன்னு லிழுப்பதும் கொசுவலை முறுக்கிக் கொசுவுவதுமாகக் குறைந்தது ஒரு மணி நேரமாவது இதற்கே ஆகிவிடும். இந்த சம்பிரமங்களில் ஒன்றும் விடாமல் இன்றும் நடந்தேறியபின் ரயில் ஸ்டேஷனை யடைந்தோம்.

ரயில் வருவதற்குப் பதினைந்து நிமிஷங்கள்தா னிருந்தன. திடீரென்று என் மனைவி நினைத்துக்கொண்டு 'ஐயையோ—கோட்புக்கை வைத்துவிட்டு வந்துவிட்டேனே' என்றுள். நான் 'அதுபோனுல் போகிறது. பட்டணத்தில் வேறென்று வாங்கிக்கொண்டால் போகிறது' என்றேன். அவள் 'ரொம்ப சரிதான். பாட்டு கோட்டை எடுத்திண்டு வாலேன்னு; நீங்க வேறே வாங்கிக்கலாம்னு சொல்றையளே. அதிலே பாட்டு கோட்டு இல்லாமெபோனு என்னுலெ பாட முடியாது. உங்க மருகா கலியாணத்துக்கு நீங்கதான் பாடணும்' என்றுள்.

நான் சிறுவனு யிருந்தபோது, கலியாணங்களில் கலியாணப்பெண் பாடுவதைப்போல் மாப்பிள்ளையும் நலங்கு, ஊஞ்சல் முதலிய சமயங்களில் பாடவேண்டுமாக்கு மென்றெண்ணி யிருந்தேன். என்? என் கலியாணத்தின்போது பாடுவதற்கென ஒன்றிரண்டு பாட்டுக்கள்கூட நெட்டுருச் செய்து வைத்திருந்தேன் போங்களேன்! நல்ல காலமாய் என் சகதர்மிணி தானே முழுவதும் கத்தித் தீர்த்தாளே

யொழிய அப்பொழுது எனக்குச் சான்ஸ் கொடுக்கவில்லை. இப்பொழுது அவள் 'உங்கள் மருமா கலியாணத்திற்கு நீங்கள் தான் பாடணும்' என்று சொன்னதும் கோடையிடி மழை—ஐயோ—கோடைகால சங்கீத பாடசாலைகளி லாவது சேர்ந்து விடலாமா என்றெண்ணினேன்.

ரயிலுக்காகச் சிறிதுநேரம் காத்திருக்க நேர்ந்தமையால் என் மனைவியையும் பாட்டியையும் முதல்கிளாஸ் வைடிங்ரூமில் உட்கார்ந்திருக்கச் செய்தேன். அங்கிருந்த முகம் பார்க்கும் கண்ணாடியைக் கண்டுவிட்ட என் மனைவி அதனருகிற்போய் நின்றுகொண்டு மறுபடியும் டிரெஸ் செய்துகொள்ள ஆரம்பித்து விட்டாள். ஒன்று மில்லாம லிருக்கும்போதே சரியா யிருக்கும் புடவையை இப்படியும் அப்படியும் இழுத்து விட்டுக்கொள்ளும் ஸ்திரீகள் கண்ணாடியைக் கண்டால் விடுவார்களா! அவள் ஒழுங்கு செய்து கொள்ளும் மும்முரத்தில் ரயில் வந்தால்கூட வெளியே வரமாட்டாளோவென்று பயந்தேன்.

ரயிலில் கும்பல் ஏராளமாக இருந்தது. 'நாம் போறபோ தெல்லாம் இந்த எழவு ரயில்வே இப்படித்தான் கும்பல் நெறியவேண்டும்' என்று நொந்து கொண்டாள். மடியாக இருக்கும் பொருட்டு நெளிந்து ஒதுங்குவதும் நகர்ந்து ஒதுங்குவதுமா யிருந்தாள். தன் பேரில் யாராவது பட்டுத் தொலைத்தாலும் அவல், பக்ஷணம் முதலியவை வைத்திருந்த பாத்திர சாமான்களின் பேரில் ஒருவரும் பட்டுவிடாமல் பார்த்துக்கொள்வதில் தீவிரமாயிருந்தாள்.

சென்னையை யடைந்ததும் ரயிலை விட்டிறங்கினோம். என் தமக்கையின் வீடு ஸ்டேஷனுக்கு இரண்டே பர்லாங்கு தூரத்தி லிருப்பதால் அதற்கொரு வண்டி வைக்கக்கூடாது என்று என் பாட்டி பிரேரேபிக்க என் மனைவியும் ஆமோதித்ததால் என் தீர்மானம் ஈடேறவில்லை. வண்டி வேண்டாமென்று சொன்ன பொறுப்பை யுணர்ந்து பாட்டி, தன் தலையிலும் முதுகிலும் இடுப்பிலும் சாமான்களை எடுத்து வைத்துக்கொண்டு, இன்னு மிரண்டு சாமான்களை எடுத்துத் தன் கையில் கொடுக்கச் சொன்னாள். ஆனால் அவளை ஆமோதித்த என் மனைவியோ, இத்தனை நாழிகை ஒரு பக்கத்து இடுப்பில் வைத்துக் கொண்டிருந்த குழந்தையை எடுத்து இரண்டு கைகளிலும் ஏந்திப் பிடித்துக்கொண்டு மெல்லென அன்ன நடை பின்னநடை போடலானாள். என்ன கோபம் வந்து என்ன செய்வது? பேசாமல் மிகுதி யிருந்த சாமான்களெல்லாவற்றையும் நான் சுமந்தேன்.

ஸ்டேஷனிலிருந்து எங்களைப் பின்பற்றி இன்னொரு கலியாணக் கும்பல் சாமான்களுடனும் செட்டுகளுடனும் மூக்கி முருண்டிக்கொண்டு வந்து கொண்டிருந்தது. நாம்தான் வண்டி வைக்காமல் கஷ்டப்படுகிறோமென்றால் இதுகளாவது வண்டி வைத்துக்கொண்டு சௌக்யமாய்ப் போகக் கூடாதா என்று அனுதாபப்பட்டேன். ஆனால் நாங்கள் வீட்டை யடைந்ததும் அந்தக் கும்பல்தான் சம்பந்தி ஜனங்கள் என்று தெரிந்து கொண்டேன். அடடா! அவர்களெதிரில் குறவன் குடிசையைத் தூக்கிப் போவதைப்போல் நடந்து வந்தோமே என்று சிறிது வெட்கந் தோன்றியது. ஆனா லவர்களுந்தானே நடந்து வந்தார்கள். ஆயிரம் ரூபாய் வரதக்ஷிணை வாங்கியவர்கள் நடந்து வந்தபோது நமக்கென்ன? தவிர, சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்திற்குச் சாப்பிடப் போனால் ஏசுவாருமில்லை — பேசுவாரு மில்லை என்று நானே சமாதானம் செய்துகொண்டேன்!



“பாம்புத் தாத்தா?”

—:(0):—

(“அநாமதேயம்.”)

இரவு எட்டு மணி. வாய்க்காலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார் புரோகிதம் சாமிநாத சாஸ்திரிகள். அவருக்குமுன், இரண்டுபேர்கள் ஏதோ, பேசிக்கொண்டு போகிறார்கள். இடது கையிலிருந்த ஊன்றுகோலை வலதுகையில் மாற்றிக்

கொண்டு சற்று விரைவாய்ச் சென்று, கவனித்துக் கேட்டுக்கொண்டே போனார் சாஸ்திரிகள். அவர்களில் ஒருவர் விஷஜெந்துக்களில் பாம்பு மிகவும் கொடியது என்றும் நேற்று பாம்புகடித்து இரண்டுபேர்கள் இறந்துவிட்டார்களென்றும் அது எந்த இடங்களிலுமிருக்கிறது; ஆனால், தெரிவதில்லை என்றும் சொல்லிக்கொண்டார். ‘ஆமாம் நேற்றைக்கு முந்தின நாள் எங்கள் வீட்டில் ஒரு பாம்பு. குழந்தை தொட்டிலில் படுத்துத் தூங்குகிறது. வீட்டிலொருவருமில்லை; வெளியே போயிருந்திருக்கிறார்கள், விளக்கும் அணைந்துவிட்டது. நான் உள்ளே போனவன் அதன் மேலேயே மிதித்துவிட்டேன். நல்லவேளை கடிக்கவில்லை! விளக்கு ஏற்றிப் பார்க்க மூலையில் படமெடுத் தாடுகிறது. நல்ல பாம்பு. அப்புறம் அடுத்த வீட்டுச் சுந்தரநாதன் வந்து அடித்தான்; எதற்கும் நல்ல விதிவேண்டும்’ என்றார் மற்றவர்.

இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டுபோன சாஸ்திரிகளுக்குப் பயம் அதிகரித்தது. அப்போதே காலுக்குள் பாம்பு கிம்பு வந்துவிடுமோ என்று காலைத் தூக்கி வைத்துத்தான் நடந்தார். வீட்டிற்குப்போனார். வீட்டில் அலமு அம்மாள் பக்கத்துவீட்டு மீனாளுடன் பேசிக்கொண்டிருக்கப் போய்விட்டாள். சுப்புப் பாட்டி குழந்தை ராஜம் சாப்பிடமாட்டேன் என்பதால் கிண்ணத்தில் சாதத்தைப் பிசைந்து எடுத்துக்கொண்டு, “அதோ பூச்சாண்டி, பாப்பா! ராஜம் சாப்பிட்டுக்க மாட்டேன் என்கிறான், நீ வாங்கிக்கோ! பாப்பா, சாப்பிடப்போறும் நீ சாப்பிடு” என்று ராஜத்தை இடுப்பில் எடுத்துக்கொண்டு வெளியில் போய்விட்டாள். நடுக்கட்டில் சங்கரனும் கமலமும் தூங்குவதால் அரிக்கன் லயிட்டு நடுக்கட்டில் வைக்கப்பட்டிருந்தது. சமையற்கட்டில் இருட்டாயிருந்தது, அலமு அலமு என்று கூப்பிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தார் சாஸ்திரி

கள். சப்தமில்லை! நடுக்கட்டில் குழந்தைகள் தூங்குகிறது. சரி, கொல்லைப்புறத்தில் நிற்பாள் என்று சமையற் கட்டின் படியிலிருந்து ஒரு அடி எடுத்து வைத்தாரோ இல்லியோ காலில் நழுக் கென்றது, பாம்பின் மேலேயே மிதித்துவிட்டார். "ஐயோ. பா....ம்....பு, பாம்....பு" என்று கூச்சல் போட்டுக்கொண்டு வெளியில் ஓடி வந்தார். சாஸ்திரிகளுக்கும் பயத்தால் வேர்த்து விலவிலத்து கைகால் நடுக்கமெடுத்தது.

சாஸ்திரிகள் போட்ட கூச்சலைக் கேட்டு, அடுத்த வீட்டுத் திண்ணையில் சீட்டாடிக்கொண்டிருந்த சுந்தரமய்யர், கிருஷ்ணய்யர், கிட்டு, பாஸ்கரன் முதலியவர்கள் ஓடிவந்தார்கள்.

கிருஷ்ணய்யர் பயத்துடன்—என்ன சாஸ்திரிகள் பாம்பா?

சாஸ்திரிகள் கைகால் நடுக்கத்துடன்—ஆ....மா...ம் சமையலறையில், அலமு எங்கே! பிள்ளைகள் தூங்குகிறது என்று, பரதவித்தார்.

கிருஷ்ணமய்யர்—வாஸ்தமா! நீர் எப்படிக் கண்டீர்?

சாஸ்திரிகள்—நல்லவேளை, அதன் மேலேயே மிதித்துவிட்டேன்; கடிக்கவில்லை!

இதற்குள் கோபாலன் ஓடிவந்து; "அம்மாமி அம்மாமி அலமு அம்மாமி! உங்கள் ஆத்திலே பாம்பாம். சமையல் அறையில், சாஸ்திரிகள் மிதித்துவிட்டார். நல்லவேளை கடிக்கவில்லை. உள்ளே பாம்பு சீறிக்கொண்டிருக்கிறது" என்றான்.

இதைக்கேட்டு அலமு அம்மாளுக்கு கைகால் நடுங்கிற்று. தலைவிரிகோலமாய் ஓடிவந்தாள். வீட்டின்முன் ஏகப்பட்ட கூட்டம். வந்துவிட்டார் சுந்தரமய்யர், நாரதாவதாரம் லக்ஷ்மியம்மாள் ஒவ்வொரு வீட்டிலும் சென்று 'அடி கோமளம் கல்யாணி, சுப்பி, சாஸ்திரிகளாத்திலே பாம்பாம். சமையலறையில் படமெடுத்தாடுகிறதாம். ஏகப்பட்ட கூட்டம், அடிக்கப்போறு' என்று பறைசாற்றினாள். ஆகக்கூடிப் பெண்களெல்லாம் ஒரு புறத்தில் கையைப் பிசைந்துகொண்டு கூடினார்கள். இதில் ஆண்பிள்ளைகள் போய் அடித்தாலென்ன? வீட்டில் பெண்டுகளன்னு அதிகாரம் செய்வார்கள் என்று வசை கூறினாள் கல்யாணியம்மாள். இது தெய்வ குத்தம் இதுநாளுமில்லை, அந்தச் சங்காக் கடவுளுக்கு நேர்ந்து கொள்ளனும்; அவருடைய குத்தமே தவிர வேறொன்றுமில்லை? சங்கரா! உனக்கு ஆடி மாதாந்தத்தில் நாகர்கிளாச்சி வாங்கிச் செலுத்துகிறேன் என்று பிரார்த்தித்தாள் சுப்புப் பாட்டி. அலமு அம்மாள் நல்லவேளை என் குழந்தைகள் பிழைத்தார்கள். அந்த விஷ ஜெந்தைப் பார்க்கலைன்னு, இதற்குள் என்ன ஆகும். இதில்தான் லோகத்தில் நன்மை தீமை செய்தது தெரியும். யாரையும் என் வாயினில் கெடுவாய்னு, சொல்லிடமாட்டேன். என்னமோ? உம், அந்தப் பராசக்திதான் காப்பாத்தினு! எல்லாம் ராஜத்தின் தந்தைசெய்த புண்ணியம் என்றான்.

இங்கு பார்த்தால் ஒவ்வொருவரும் பூணூலை உருவிக்கொண்டு நிற்கிறார்களே தவிர உள்ளே நுழையக்கூடிய ஒரு ஆசாமியைக் காணோம். அப்போதுதான் ஜவுளிக்கடையிலிருந்த மணி அய்யர் பாம்பின் சமாசாரங் கேட்டுக் கையில் பாட்டிலைட்டுடன் குதிக்கால் பிடரியிலிடிபட ஓடிவந்தார். இவர் அலமு அம்மாளின் கணவர். சாஸ்திரிகளுடைய புத்திர சிகாமணி இவர்வந்த வேகத்தைப் பார்த்தால், ஏதேது! பாம்பு இதற்குள் இறந்திருக்கும் என்று தான் நினைக்கவேண்டியிருந்தது. என்ன செய்தார் தெரியுமோ? பாம்பை அடித்தாலென்ன! எவ்வளவு சோமாய்ச் சமையலறையிலிருக்கிறது! எப்படி வந்தது முதலில் யார் பார்த்தது! நாளி என்ன இருக்கும்" என்றெல்லாம் கிராஸ் பண்ண ஆரம்பித்தார்.

உஸ்....ஸ்...ஸ் சத்தம் போடாதீர்கள். தலையாரி மாடசாமித் தேவனைக் கூப்பிடுங் கோ ஸார். இதற்குள் அடித்திருக்கலாம் என்ற குரல் வந்தது. இரண்டு லைட்டுடன் மாடசாமித் தேவனைக் கூப்

பிட ஆள்போயிற்று. (அடுக்களையில் பாம்பிருக்குது ஆண்பிள்ளையைக் கூப்பிடடி) என்றானாம் ஒரு தைரியசாலி என்பது போல் மாடசாமித் தேவன் கையில் தடியுடன் பிரசன்னமானான். அவனைப் பார்க்கும்போதே யுத்தவீரன்போல் காணப்பட்டான். சரி, எல்லோரும் விலகுங்கள் இதற்கா இந்தக்கூட்டம் என்று அலட்சியமாய்ச் சிரித்துவிட்டு வேஷ்டியை நன்றாய்த் தூக்கி ஓடுவதற்கு சௌகரியமாய்க் கட்டிக்கொண்டு எங்கிருக்கிறது பாம்பு," என்றான் மாடசாமித் தேவன். பேட்டரி விளக்கை அடித்துச் சமையலறையைக் காட்டினார் மணி அய்யர்.

உடனே மாடசாமித் தேவன் அடிமேலடிவைத்து உள்ளே நுழைந்து பம்மல் போடத் தொடங்கினான். சற்று நேரத்துக்கெல்லாம் லைட்டுடன் ஓர் ஆள் வாருங்கள் என்று சைகை காட்டினான்.

இங்கு யார் போவது என்ற பிரச்சனை. கடைசியில் மணி அய்யரே வேஷ்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு லைட்டுடன் உள் நுழைந்தார். இருவரும் லைட்டுடன் சமையலறையின் பக்கல் போனார்கள்.

மாடசாமித் தேவனுக்கு ஓர் பாகம் தள்ளி ஓடுவதற்கு ஹேதுவாய் நின்று கொண்டு துணிந்து லைட்டைக் காட்டினார் மணி அய்யர். வாசற்படியின் நிழல் மறைத்துக்கொண்டிருப்பதால் பாம்பின் மேல் பாகம் மட்டும் வெள்ளையாய்த் தெரிந்தது. மாடசாமித் தேவன் வெளிக்குத் தைரியமாய்ப் பேசினாலும் உள்ளுக்குள் மிகவும் பயந்தான். சற்று தலையில் தள்ளி எச்சரிக்கையாய் நின்றுகொண்டு

தடியை உயர்த்தினன். மணி அய்யர் ஓடுவதற்குத் தயாரானர்.

இதற்குள் வெளியில் கொஞ்சம் சலசலவென்ற கூச்சல் கேட்டது. மணி அய்யர் உஸ்....ஸ்....ஸ் என்ருர். உஸ் என்றதை பாம்புதான் சீறிக்கொண்டு வருகிறதென்று மாடசாமித் தேவன் வாசற்பக்கம் ஓடுவதற்கு யத்தனித்தானே இல்லியோ, உடனே ஒரே பாய்ச்சலில் தலை

வாசலில் தாண்டிவிட்டார் மணி அய்யர். மாடசாமித் தேவனும் பெரிய பாம்பு என்னமாய்ச் சீறுகிறது என்று ஓடிவந்தான். பின் வெளிக்கூட்டங்களை கேட்பானேன் பாம்பென்ருல் படையும் நடுங்குமல்லவா?

மறுபடியும் துணிந்து புறப்பட்டான் மாடசாமித் தேவன். லயிட்டையும் அவனே பிடித்துக்கொண்டு பார்த்தான். ஆனல், மணி அய்யரை எங்கே என்று கேட்கலாம். நல்லவேளையாக படியில் விழுந்து காயம் கியம் ஒன்றுமில்லை! கால் சறுக்கி நடக்க முடியவில்லை? மற்றப் பேர்களும் பயத்தால் லயிட்டுப் பிடித்துக் கொண்டுபோக மறந்துவிட்டார்கள்.

ஆனல், மாடசாமித் தேவன் பார்த்தான் பாம்பு இருந்த இடத்தைவிட்டுக் கொஞ்சங்கூட நகரவில்லை ! லயிட்டை வைத்துவிட்டு உயிரை வெறுத்து ஓங்கினன். சீறி மேல்வந்துவிட்டால் என்ன செய்வது என்று நினைத்தான். தேகம் நடுக்குற்றது. பின்னும் திடம்படுத்திக் கொண்டு அடித்தான். சாகிற கிழவியைக் குத்திப்போட்டேன் சந்த மாமா என்றபடி, வாழைத்தண்டுப் பாம்பு என்னசெய்யும், எழெட்டடி மேலடியாய் அடித்துவிட்டு, அதார்ட்டியான குரலில் "பாம்பு செத்துவிட்டது," என்ருன். உடனே சுத்த வீரன் மாடசாமித் தேவனும், இன்னும் சிலபேரும் உள்ளே சென்று பார்த்தார்கள். வாழைத்தண்டுதான் சிதைந்து சிதைந்து கிடந்தது. பாம்பாவது கீம்பாவது? மாடசாமித் தேவனுக்கு அசடு தட்டியது. எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். சாஸ்திரிகள் இதைக்கேட்டு மிகவும் வெட்கினர். பெண்களெல்லாம் சாஸ்திரிகளைச் சுற்றி நின்றுகொண்டு வயிறு குலுங்கச் சிரிக்கலானர்கள். சாஸ்திரிகளுக்கோ, கோபம்வருகிறது. என்ன செய்வார் பாவம், கூட்டம் கலைந்தது. அதுமுதல் சாஸ்திரிகளையோ, மாடசாமித் தேவனையோ, மணி அய்யரையோ ஜனங்கள் கண்டால், சிரிப்பு தானே வந்துவிடும். ஸ்திரிகளெல்லாம் என்ன வேலை செய்தாலும் அல்லது கோபமாய் இருந்தாலும் இந்த சம்பவம் ஞாபகம் வந்துவிட்டதானல் உடனே சிரிப்புத் தவிர வேறொன்றும் பார்க்கமுடியாது. சிலர் காரணமின்றிச் சிரிப்பதால் சண்டை சச்சரவுகளாகவும் முடிகிறது. நிற்க,

ஒருநாள் கமலம் எதையோ கேட்டுத் தொந்திரவு பண்ணிக்கொண்டிருந்தாள். அலமு அம்மாளுக்குக் கோபம் வந்து இரண்டு மூன்றடி அடித்துவிட்டாள். கமலம் அழுதுகொண்டிருந்தாள். அப்போது தான் அடுத்த விட்டிலிருந்து வந்த சுப்புப் பாட்டி எதை எல்லாமோ சொல்லிப்பார்த்தும் கமலம் அழுகையை நிறுத்தினபா

டில்லே. கடைசியில் 'கமலம்; வா கதை சொல்லுகிறேன்' என்று தூக்கிக்கொண்டு வெளியில்வந்து மடியில் உட்காரவைத்துக் கதை சொல்ல ஆரம்பித்தாள்.

கமலத்துக்கு கதை கேட்பதில் அதி பிரியம். ஏங்கி ஏங்கி பெரு மூச்சு விட்டுக் கொண்டு கேட்டுக்கொண்டிருந்தாள். 'நம்ப ஆத்தில் ஒருநாள் பாம்பு வந்துடுத்து" என்று ஆரம்பித்தாள் குப்புப் பாட்டி. இதற்குள் விஷமக்காரச் சங்கானும் அடுத்த வீட்டு நாணுவும் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவர்கள் பாட்டி கதை சொல்லுமிடத்தில் வந்து உட்கார்ந்தார்கள்.

பாட்டி சிரிப்புடன்—பாம்பு வந்துடுத் தோல்லியோ நம்ப தாத்தா மிதித்துட்டார்!

சங்கான் குறும்பாக "அப்போ நம்ப தாத்தா உயிரோடன்னு இருக்கிறார்!" என்றான்.

பாட்டி—இல்லேடா? அது பெரிய கதை சொல்லுகிறேன் கேள் என்று சொல்லலானாள். எல்லோரும் கேட்டார்கள்.

பாட்டி—உங்கதாத்தா மிதித்துட்டுப் பயந்து வெளியில் ஓடிவந்துவிட்டார். மாடசாமித் தேவனெல்லாம் அடிக்க வந்துட்டான். ஒங்கப்பா ஜவுளிக்கடையிலிருந்தெல்லாம் வந்துட்டார். இரண்டு கீட்டு போட்டுண்டு அடியடின்னு அடித்துப் பார்க்க வாழைத்தண்டுப் பாம்பு. அப்படி ஒங்க தாத்தா வாழைத்தண்டுக்கு பயந்துட்டு ஓடினூர்—என்று சிரிப்பாய்ச் சிரித்தாள் பாட்டி. சங்கானும் வாழைத்தண்டுக்கா பயந்துட்டார். என்று கைகொட்டிச் சிரித்துக்கொண்டு தாத்தா வாட்டும் சொல்லிட்டு சிரிக்கணும் என்றான். அடே சொல்லிடாதேடா தாத்தா கோவிச்சண்டு அடிக்கப்போறார் என்றாள் பாட்டி. அதே சமயத்திலா வாவேண்டும் சாஸ்திரிகள். உடனே சங்கான் 'பாம்பு தாத்தா டோய். பாப்புத்தாத்தா டோய்!' என்று குதித்தான். நாணுவும் சேர்ந்து குதித்தான்.

சாஸ்திரிகள் விரட்டினாரோ இல்லியோ, மறுநிமிஷம் தெருவில் சங்கானுடைய பார்ட்டிக் கூட்டங்கள். ஓகோ! பாம்பு தாத்தா டோய்! என்ன கூச்சல். அதுமுதல், சாஸ்திரிகளுக்குப் பாம்புத் தாத்தா! என்ற புனை பெயரும் நிலைத்தது.

வல்லப கணபதி ரக்ஷை.

இந்த கணபதிரக்ஷை ஆதிசைவ குருக்களால் ஆகம சாஸ்த்ரோக்தமாய் ஷட்கோண யந்திரத்தில் மஹா பீஜங்கள் அடக்கி மூலமந்திர ஜபதப ஹோமாக்னி முதலானதுகளும் செய்து கணபதி அனுக்ரஹத்தினால் வெளிவிடப்பட்டது. இதன் மகிமை புத்ரசந்தானம், வ்யாபாரம், உத்யோகம் அதிகரிக்கும். சத்ருக்கள் பாத நிவாரணை, வ்யாதி நிவாரணை, வ்யவஹார விஷயங்கள் அனுகூலம். கர்ப்பஸ்திரீ கட்டிக்கொண்டால் சுகப்ரஸவம் உண்டாகும். நாம் எந்த காரியத்தை உத்தேசித்து இதை வரவழைத்தோமோ அந்த காரியம் உடனே ஜயம். நம்பினவர்கள் இதன் பலனை அடையலாம். இதன் விலை ரு. 1. வி. பி. சார்ஜ் அணா 5. வெளிநாட்டுக்கு தபால் சார்ஜ் ப்ரத்தியேகம்.

ஸ்பெஷல் ரக்ஷை தயார் செய்து அவரவர்கள் நாம நக்ஷத்திரம் கடித மூலம் தெரிவித்தால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் தயார் செய்து அனுப்ப ரூ. 10—0—0

ம-ள-ள-ஸ்ரீ T, சுப்பிரமணிய குருக்கள்,

தேவஸ்தானம்-ஸ்தானீகம், திருத்தணி போஸ்டு, சித்தூர் ஜில்லா.

"தங்கம்"

("குப்பன்")

[தங்கத்தைப் பற்றியாவது இந்தியாவிலிருந்து அதன் ஏற்றுமதியைப் பற்றியாவது எழுத நான் பொக்கிஷ மெம்பருமல்ல; பொருளாதார சாஸ்திர நிபுணருமல்ல; பொன் மேனி வாய்ந்த "தங்கம்மாள்" எனப் பெயர் கொண்ட பெண்ணின் கதையே யாகுமிது.]

I. குழந்தை விவாகம்.

கதை ஆரம்பிக்கும் காலத்தில் சூரியப்பட்டி திருநெல்வேலி ஜில்லாவில் உதயகிரி மலை யோரத்தில் சுமார் இருபது குச்சுகளுள்ள ஒரு சிறு கிராமமாய் விளங்கியது. அவ் வூரில் பரம ஏழையான சிங்காரம் பிள்ளை ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து நடத்தி கிராமத்தினர் கொடுத்து வந்ததைக் கொண்டு ஜீவனஞ் செய்து வந்தார். அவர் மகன் சுந்தரத்தைப் பெரிய துரதிருஷ்டசாலி யென்றே சொல்ல வேண்டும். ஒரே நாளில் வைசூரியினால் அவன் தாய் தந்தையரிறக்கவே சுந்தரம் தனியனான். ஊர்க் கிழவி யொருத்தி தன்னை கட்டிக் கொண்டழுததும், தான் குளிரில் விறைக்கத் தண்ணீரில் முழுக்காட்டப்பட்டதும், ஊரிலுள்ளவர் தன்னை அனாதை யென்று சுட்டிக் காட்டியதும் தான் அவனுக்குத் தெரியும். ஐந்து வயதுப் பையன் தான் அடைந்த பெரும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் எப்படி உணர முடியும்? ஆனால் தான் ஏதோ பெரிய குற்றஞ் செய்து விட்டதாகத் தன்னைப் பிறர் கருதியதாக அவன் சில சமயங்களில் சந்தேகித்ததுண்டு.

சூரிய பட்டியில் கிழ் புறமாய் "பிள்ளையார் குட்டை" என்று ஒரு சிறு குளமிருந்தது. அதன் வடகரை "உடையான் மேட்டில்" ஒரு குச்சில் வேலு பிள்ளை தன் மனைவி நீலாவுடனும், வெகு நாள் கழித்துத் தவங்கிடந்து கிடைக்கப் பெற்றது போலுள்ள தன் ஒரே பெண் குழந்தை தங்கத்துடனும் வசித்து வந்தார். அழகு மிக்க அக் குழந்தையை அருமையாய் வளர்த்து மகிழ்ந்து வந்தனர் என்று கூறவும் வேண்டுமோ? அவருக்கு அன்ன வஸ்திரத்துக்கும் போதுமான சொல்ப நிலமும் இரண்டு பசுக்களு மிருந்தன. வேலு பிள்ளை உத்தமகுணசீலர். அவர் மனைவி நீலா கொஞ்சம் கடுமைக்காரி. இருந்த போதிலும் வேலு பிள்ளை கெட்டிக்காரராகையால் அவளுடன் புத்திசாலித் தனமாய் பழகி ஒற்றுமையாய்க் குடும்பம் நடத்தி வந்தார். அனாதைச் சுந்தரத்தை அவர் தன் வீட்டிற்கு அழைத்து வந்து ஆறுதல் கூறி தன் பிள்ளையாகப் பாவித்து வந்தார். சுந்தரத்திற்கு வயது ஐந்து. அவனும் நாலு வயதான வேலு மகள் தங்கமும் இரட்டையாகப் பிறந்தவர் போல் அந்நியோந்நியமாய் விளையாடி வளர்ந்து வந்தனர்.

வேலு பிள்ளை ஐந்தாவது வயதில் நோய் வாய்ப்பட்டார்; அவர் உடம்பு மெலிந்தது. தான் இறக்கு முன் தங்கத்திற்குக் கல்யாணஞ் செய்வித்துப் பார்க்கப் பேராவல் கொண்டார். பெண் கல்யாணமானதும் புருஷன் வீட்டுக்குப் போகவும் தன்னைப் பிரியும் படியும் நேரிடுமே யென்று கவலை கொண்டார். கடைசியில் தங்கத்தை சுந்தரத்துக்கே மணஞ் செய்வித்து தன் சொல்ப ஆஸ்தியையும் அவனிடமே ஒப்புவிக்க எண்ணங் கொண்டார். முதலில் நீலாவிற்கு அபிப்பிராய பேத மிருந்தும் வேலு பிள்ளை முடிவில் அவளைச் சரிப்படுத்தி விட்டார்.

சுந்தரம் சிவந்த உடம்பும் அழகிய முகமு மமைந்த சிறுவன். தங்கமோ பெயருக்கேற்ற ரூபவதி. ஒருநாள் வாசு

வில் கண்ணு மூச்சி விளையாடிக் கொண்டிருந்த இரு பாலகரும் வீட்டினுள் அழைத்துவரப் பட்டனர். மேளச் சத்தமும் தான் பட்டுக் கட்டிக் கொண்டதும் சந்தோஷத்திற்குக் கொண்டாட்டமா யிருந்தது. தன் இடுப்பில் பெரிய புடவையைச் சுற்றி நிறுத்தி வைத்தது மட்டும் ஆறே வயதுள்ள தங்கத்திற்கு கொஞ்சம் அருவருப்பாயிருந்ததே யொழிய, மற்றப்படி அவளடைந்த சந்தோஷத்திற்கு மளவேயில்லை. மங்கள ஸ்நானம் முடிந்து மங்கிலிய தாரணமும் நடந்தேறியது.

குழந்தைகள் தம்பதிகளாய் மாறிய இரண்டு வருஷத்திற் கெல்லாம், வேலு பிள்ளை வாழ்க்கையில் திருப்தியடைந்து விட்டவர் போல் கண்ணை மூடினார்.

II. வறுமையும் கொடுமையும்

வேலு பிள்ளை இறந்ததும், அவர் அன்புடனும் அதற்கதிகமான புத்திசாலித் தனத்துடனும் பழகி வந்தமையால், வெளிவாராது ஒதுங்கி ஒளிந்திருந்த கோப தாபம் அவர் மனைவி நீலாவிடம் தலை காட்டத் தொடங்கின; காலமும் கோலஞ் செய்யத் தொடங்கியது. இருந்த கொஞ்ச நிலமும் விளைவு குறைந்தது. பசுக்கள் மாட்டுச் சிக்கில் மாண்டன; நீலாவின் முணு முணுப்பு அதிகரித்தது. ஈகத் துவேஷங்கள் அவள் அறிவை மறைத்தன; புத்தியிழந்த பெண்டிரின் செய்கை கேட்கவும் வேண்டுமோ! காலஞ் சென்ற தன் புருஷன் தரித்திரஷ்டவானுக்குப் பெண்ணைக் கல்யாணஞ் செய்து வைத்த மூடத்தனத்தைப் பற்றியும், காலணுச் சம்பாதிக்க வழியின்றி பெண்டாட்டி வீடே கதி யென்றிருப்பது ஆண்பிள்ளைக் கழகோ வென்றும் மனம் போல் பிரதி தினமும் வசை மொழி கொட்ட ஆரம்பித்தாள்.

"இளங்கன்று பயமறியுமா." பனிரெண்டு வயது பாலன் சுந்தரம் ஒருநாள் மத்தியானம் நீலா வெளியே சென்றிருந்த சமயம் தங்கத்தைக் கூப்பிட்டுத் தான் இனி அவள் தாயின் கொடுமையைச் சகிக்க முடியா தென்றும், வெளியே எங்காவது சென்று சம்பாதித்து வருவதாயும் அல்லது தற்கொலை புரிந்து தன் தாய் தந்தையர் சென்ற விடமே சேர்ந்து விடுவதாயும் கூறி, முத்தமிட்டு, வீட்டைத் துறந்து வெளியேறினன். தங்கம் சுந்தரத்தின் பிரிவு நினைந்து வருந்தினள். தோழ னின்றி நாட்களைக் கழிப்பது மிக கடினமாயிருந்தது. சுந்தரத்தை உயிர்த் தோழனுக் கருதி வந்தாளே யொழிய "கணவன்" என்பது அவள் மனத்தி லெழ வில்லை.

சுந்தரம் வீட்டைத் துறந்த ஒரு வருஷத்தின் முடிவில், தான் தேயிலைத் தோட்டத்தில் வேலையி லிருப்பதாயும், தோட்ட துரையுடன் "ஜல வீரா" என்னும் கப்பலில் சிமைக்குப் போவதாயும் எழுதி யிருந்தான்.

இடையில் மஹா யுத்தம் ஆரம்பித்து விட்டது. கிராம வாசிகளின் மனோபாவத்தைப் பெருக்கிய வற்றுள் யுத்தம் முதன்மையான தென்பதை எவரும் மறுக்க முடியாது. பத்திரிகைகள் எங்கும் பறந்தன. "ஜலவீரா" கப்பல் ஜிப்ரால்டருக் கருகில் ஜெர்மன் நாசகாரியால் தாக்கப்பட்டு அதிலுள்ள மாலுமிகள், பிரயாணிகள் யாவரும் மூழ்கி யிறந்த செய்தி எங்கு பார்த்தாலும் பேச்சா யிருந்தது. சூரியப்பட்டியில் இரண்டு ஆத்மாக்களுக்கு இச் செய்தி இடி விழுந்தாற் போலிருந்தது. சுந்தரமும் "ஜல வீரா"வில் பிரயாணி யன்றோ? நீலாவின் வருத்தத்தைக் கேட்கவும் வேண்டுமோ! தன் புருஷன் செய்த பெரும் பிசகின் முடிவென்றே இதை அவள் நினைந்தாள். தங்கம் தன் பதின்மூன்றும் வயதில் விதவைப் பட்டம் பெற்றுள்.

"பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடு மென்பது" நீலாவின் வாழ்க்கையில் உண்மையாயிற்று. மறு வருஷம் நாட்டில் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. கிராமந்தாங்கள் வாழ்ந்தன; வீடுகள் காலியாயின. குடிகள் ஊர் விட்டு ஊர் ஓடலாயினர். சூரிய பட்டியில் நீலாவும் தங்க

மும் பட்ட கஷ்டம் சொல்லத் தரமல்ல. ஒரு வேளை ஆகாரத்துடன் அவர்கள் எத்தனை நாட்கள் கழிக்க முடியும்? அதுவும் அபலைகள்! கடைசியில் நீலா தன் காலஞ் சென்ற புருஷனின் பாலிய சிநேகிதரான நாகலிங்கம் பிள்ளை பட்டணத்தில் செல்வாக்குடனிருப்பதாய்க் கேள்விப் பட்டிருந்தபடியால் அவரிடம் சென்று உதவி கோரத் தீர்மானித்து கையிலிருந்த கொஞ்ச திரவியத்தைச் செலவு செய்து கொண்டு, பதினாறு வயதான தங்கத்தையும் அழைத்துக் கொண்டு சென்னை போய்ச் சேர்ந்தாள்.

III. இளமையும் காதலும்

நாகலிங்கம் பிள்ளை சென்னப் பட்டணத்தில் பண்டகசாலை யொன்று வைத்து வியாபாரஞ் செய்து வந்தார். நல்ல வியாபாரி யென்று பெயர் வாங்கி செல்வாக்குடனும் கௌரவத்துடனும் இருந்தார். தன்னிடம் வந்த ஆதரவற்ற நீலாவையும் தங்கத்தையும் அன்புடன் உபசரித்துத் தன் வீட்டிலேயே தங்கி யிருக்குமாறு சொன்னார். நாகலிங்கம் பிள்ளை மனைவி சரீரத்திடக் குறைவும் தள்ளாமையும் உள்ளவளா யிருந்ததால் நீலாவும் தங்கமும் வீட்டிற்கு வந்தது அவளுக்கு மிக்க உதவியா யிருந்தது. தங்கமும் அவள் தாயும் வீட்டுக் காரியங்கள் முழுவதையும் தாங்களே கூடிய மட்டும் கவனித்து வந்தனர். நாகலிங்கம் பிள்ளைக்கு ராஜசேகரன் என்று ஒரு பையனிருந்தான். அவனுக்கு வயது பதினெட்டு இருக்கும். அப்பொழுது மிக்க பெரிய பதவியாய்க் கருதப்பட்டு வந்த வக்கீல் வேலைக்குப் படித்து வந்தான். ராஜசேகரனுக்குப் பெண் கொடுத்துக் கல்யாணஞ் செய்து வைக்க அநேகர் நாகலிங்கம் பிள்ளை வீடு தேடி வந்தனர். ஆனால் ராஜசேகரன் தன் படிப்பு முடிந்த பிறகே தன் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கப் போவதாய்க் கூறிவிட்டான்.

* * *

நீலா நாகலிங்கம் பிள்ளை வீட்டிற்கு வந்து ஆறேழு வருஷங்களாயின. தங்கத்திற்கு வயது பதினெட்டுக்கு மேலாகி, அவள் கட்டழகியாய் விளங்கினாள். ராஜசேகரனுக்கு வயது இருபத்திநாலு. அதே வீட்டிலிருந்த யௌவன வயதினரான இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து, பழகி, நேசிக்கலாயினர். தென்றல் முற்றிப் பெருங் காற்றாயது போல் நேசம் காதலாய் மாறியது. காதலின் வலிமையை யார் தான் மறுக்க முடியும்? இதனாலன்றோ கவியரசு பாரதியார்,

“காதல், காதல், காதல்,
காதலின்றேல்
சாதல், சாதல், சாதல்.”

என்று பாடியுள்ளார்.

ராஜசேகரன் தங்கத்திற்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தான். மாலை வேளைகளில் கோச்சு வண்டியில் கடற்கரைக்குக் கூட்டிக் கொண்டு போய் வருவான். நீலா ராஜசேகரன் தன் மகள் தங்கத்திடம் கொண்டுள்ள பிரேமையைக் குறித்து, சந்தோஷப் படலாயினாள். தங்கள் ஒரே பிள்ளையின் சந்தோஷத்தையே முக்கிய மென்று கருதிய நாகலிங்கம் பிள்ளையும் அவர் மனைவியும் ராஜசேகரன் அபிப்பிராயத்திற்கு மாறாக ஒன்றும் கூறவில்லை.

ராஜசேகரனுக்கும் தங்கம்மாளுக்கும் விவாகம் இனிது நடந்தேறியது என்று சொல்லவும் வேண்டுமோ?

IV. திகைப்பும் தியாகமும்

1926௵ டிசம்பர்௴ 23௳ சூரியபட்டி ரயில்வே ஸ்டேஷனில் மத்தியான வண்டியில் ஒரு மனிதர் வந்திறங்கினார். அவர் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்து களைத்தவராய்த் தோன்றினார். கூலி வண்டிக்காரனைக் கூப்பிட்டு உடையான் மேட்டிற்கு வண்டி விடுமாறு சொன்னார். எல்லா வண்டிக் காரர்களும் அந்த மாதிரி பெயருள்ள இடம் அவ்வூரிலேயே இல்லை என்று கூறிவிட்டனர். பிரயாணி ஊருக்குள் நடந்து சென்றார். சூரிய பட்டியில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக்கண்டு திகைத்துப் போனார். எங்கு பார்த்தாலும் தார்

போட்ட ரோடுகளும், மோட்டார் வண்டிகளும், கடைகளும் காப்பி கிளப்புகளும், க்ஷவர ஸலூன்களுமா யிருந்தன. ரோடு சந்திப்புகளில் போலீஸ் புலிகள் கைகாட்டி வண்டிகளை அடக்கி ஓட்டுமாறு செய்து நின்றனர். பிரயாணி ஒரு போலீஸ் காரரை உடையான் மேட்டுக்கு வழி கேட்டார். அச் சேவகன் தான் வேலைக்கு வந்து இரண்டு வருஷங்கள் தானாயிற்றென்றும் தனக்குத் தெரியாதென்றும் கூறி விட்டான். கடைக்காரர்களும் அந்தப் பெயர் கூடக் கேட்டதே யில்லையென்று சொல்லவே, பிரயாணி ஒரு வழியே நடந்தான். ஒரு வீட்டுத் திண்ணையில் பழுத்த கிழவன் ஒருவனை யணுகி பிள்ளையார் குட்டையைப் பற்றிக் கேட்டார். கிழவன் புது ஆசாமியை ஏற இறங்கப் பார்த்து விட்டு, "பிள்ளையார் குட்டை" தூர்க்கப்பட்டு "காந்தி பார்க்" ஆக மாறியிருப்பதாயும், உடையான் மேட்டில், ராஜசேகரர் என்று ஒரு வக்கில் பங்களா கட்டிக் கொண்டு வசிப்பதாயும் சொன்னான்.

ஊருக்குப் புதிதாய் வந்த பிரயாணி, "ஜலவீரா" கப்பலில் சென்ற நமது சுந்தரமே. தேயிலைத் தோட்ட துரையுடன் கப்பலேறிய சுந்தரம் துரையுடன் ரேபில்ஸ் துறைமுகத்தில் ஒருநாள் தங்கிவிட்டு மறுநாள் "ஸமுத்ர ராஜன்" கப்பலில் சீமைக்குப் பிரயாணமானார். ஆனால் "ஸமுத்ர ராஜன்" கப்பல் ஜெர்மானியரால் பிடிக்கப்பட்டு அதிலுள்ள அனைவரும் கைதிகளாக ஜர்மனியில் சிறையிடப் பட்டனர். தோட்ட துரை சிறையிலேயே இறந்தார். 1918-ஆம் விடுதலையடைந்த சுந்தரம் அந்நிய நாட்டில் பிழைப்பிற் கிடமின்றி, கையில் காசுமின்றி தவிக்கலானான். மேலும் சிறைவாசத்தினால் மெலிந்த தன் உடம்பைத் தேற்றிக் கொள்ள வேண்

டியிருந்தது' கடைசியில் தெய்வானு கூலத்தால் ஒரு தொழிற் சாலையில் மூட்டை தூக்கும் வேலையில் புகுந்து, விடா உழைப்பினால் படிப்படியாய் மேஸ்திரி வேலை பெற்று நற் பெயருடன் எழெட்டு வருஷ காலம் வேலை செய்த பின்னரே கொஞ்சம் சம்பாத்தியத்துடன் ஊர் திரும்ப முடிந்தது. விடுதலை யடைந்ததும் ஐந்தாறு கடிதங்கள் சூரியப்பட்டிக்கு எழுதினான். ஆனால் பஞ்சத்தில் கிராமம் பாழ்த்துப் போகவும், நீலாவும் தங்கமும் பட்டணம் போய் விடவும் அவன் எழுதிய கடிதங்கள் அவனிடமே திரும்பிப் போயின.

* * *

சுந்தரத்திற்கு என்ன செய்வதென்றும் புரியவில்லை. "இருந்தாலும் பார்க்கலாம், எதற்கும் ராஜசேகார் பங்களா சென்று பழைய வீட்டைப் பற்றி விசாரிப்போம்" என்று, ஒரு வண்டியிலேறி "காந்தி பார்க்" அடைந்தான். "சேகர் வில்லா" விற்குச் சென்று வாசற் கதவைத் தட்டினான். வீட்டினுள்ளிருந்து சுமார் இருபத்தைந்து வயதுள்ள ஒரு பெண்மணி வந்து கதவைத் திறக்கவே, "ராஜசேகார் வீட்டிலிருக்கிறாரா" என்றான் சுந்தரம்.

வக்கீல் பட்டணத்திற்கு கிறிஸ்துமஸ் லீவிற்குப் போயிருப்பதாயும் ஒரு வாரத்தில் வந்து விடுவாரென்றும் அப் பெண்மணி கூறினாள். அவள் இடுப்பில் ஒரு பெண் குழந்தை இருந்தது. அவள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது உள்ளேயிருந்து மூன்று வயதுள்ள ஒரு சிறுவன் ஓடி வந்து "அம்மா நேக்குப் பட்சணம் கொடுக்கறேயா இல்லையா; அப்பா வந்ததும் சொல்றேன் பாரு" என்று கூறி அப் பெண்மணியின் புடவைத் தலைப்பைப் பிடித்திழுத்தான்.

அப் பெண்மணியே தங்கம்; அதே அழகிய முகம். அதை எப்படி சுந்தரம் மறக்க முடியும்? சுந்தரத்திற்கு தலை சுழல ஆரம்பித்தது. கண்களில் நீர் ததும்பி பார்வையை மறைத்தன. தன்னை யறியாது துக்கம் அவன் நெஞ்சை யடைத்தது. பெரு மூச்செறிந்த வண்ணம், முகத்தைக் கைக்குட்டையால் துடைத்த வண்ணம், நாக்குழற, "வக்கீலைப் பின்னால் வந்து பார்க்கிறேன், அம்மணி" என்று கூறி வெளியே வந்து, ரயிலடியை நோக்கி நடந்தான். ஆனால் தங்கத்திற்கோ தன்னைவிட்டுப் பிரிந்து பனிரெண்டு வருஷத்திற்கும் மேலாகிய சுந்தரத்தை அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை. வெளி தேச வாழ்க்கையும், சரீர கஷ்ட நிஷ்டூரங்களும், காலமென்ற கள்வனும் ஒருங்குகூடி சுந்தரத்தை வேறு மனிதனாக்கியதில் ஆச்சரிய மென்னவிருக்க முடியும்.

* * *

ரயிலேறிய சுந்தரம், சில மணி நேரத்திற்குள் கிழவனாகத் தோன்றினான். கண்களிலிருந்த பிரகாசமும்,

பட்சி-தரிசனம்

—:(0):—

(ஆரியூர்- வ. பதுமநாப பிள்ளை.)

இந்த பூவுலகம் மிக மிகக் கெட்டுப் போய்விட்டது; ஏன், இன்னும் கெட்டுப் போய்க்கொண்டேயிருக்கிறது. எங்கு நோக்கினும்—எங்கு சென்றாலும்—பொய் சொல்ல அஞ்சாத நெஞ்சினரும் பலவகைப்பட்ட வஞ்சகர்களுமே மலிந்து போய்விட்டிருக்கின்றனர். ஆதலால், பாவப்பேய் தலைவிரித்தாடும் இம் மண்ணுலக வாழ்க்கையைத் துறந்துவிட்டு, தர்மதேவதை களிநடம் புரியும் விண்ணுலகத்திற்குக் கூடிய விரைவில் சென்றுவிட வேண்டுமென்று எனது நெஞ்சம் என்னை வற்புறுத்தியது. உழைப்புக்குத் தகுந்த வருவாயோ மதிப்போ எளிதில் கிடைக்காத இந்த மண்ணுலகத்தில், எனக்குத் தோன்றிய வெறுப்பை எழுத்தால் எழுதி உணர்த்த முடியாது. எனினும், இவ்வுலகைத் துறந்து செல்வதன் பொருட்டு, மூச்சை அடக்கி யோகம் பயிலவோ, மழையில் நனைந்து வெயிலில் உலர்ந்து உணவை மறந்து கடுந்தவம் புரியவோ நான் தயாராக இல்லை. ஆதலால், அதிகப் பிரயாசையின்றி விண்ணுலக இன்பத்தை அடைந்து அனுபவிக்கக்கூடிய வழி ஏதேனும் உண்டோ என்று புராணங்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேன்.

"சிவ—சொரூபமாயுள்ள ருத்ரகோடி என்று விளங்கும் திருமலையின் உச்சியை வெகு தூரத்திலிருந்து தரிசித்தவனாயினும், அவன் ஜனன-மரண துக்கத்தினின்றும் நிவர்த்தி யடைந்து சிவ சாயுஜ்யத்தை அடைவான். மாதர்களிடம் கொண்ட மோகத்தினாலாவது பகைவர்களிடம் கொண்ட கோபத்தினாலாவது வஸ்து பிரீதியினாலாவது அஞ்ஞானத்தினாலாவது ஞானத்தினாலாவது ஓரிரவு இந்த ருத்ரகோடி க்ஷேத்திரத்தில் வசிக்கிறவன், ருத்ரபதம் அடைவான்"—என்று திருக்கழுக்குன்றத் தலபுராணத்திற் கூறப்பட்டிருப்பதைக் கண்டவுடன், என் மனம் பெரிதும் மகிழ்ந்தது. எந்தவித நிபந்தனையும் விதிக்காமல்—எந்தவித காரணத்தினாலாவது—ஓரிரவு தங்கியிருப்பதனாலேயே சிவசாயுஜ்யத்தை அளிக்கக்கூடிய திவ்ய க்ஷேத்திரமென்று சொல்லப்படும் திருக்கழுக்குன்றத்திற்கு, உடனே புறப்பட்டுச் செல்லத் தீர்மானித்தேன். என்னைப் போல் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்படையாதவனாயினும், சிறந்த ஆரோக்கிய ஸ்தலங்களுள் திருக்கழுக்குன்றமும் ஒன்றென்னும் காரணத்தினால், எனது நண்பன் சதாசிவனும் என்னுடன் துணையாகப் புறப்படலாயினன்.

முகத்தின் சந்தோஷமும் போய், உலகத்தை வெறுத்தவனாய்த் தென்பட்டான். "இனிது, இனிது, ஏகாந்த மினிது" அன்றோ? மன அமைதியும் வைராக்கியமும் பூண்டான். ஹரித்வாரஞ் சேர்ந்து, யுகந்தோறும் மாறுதலடையாது, "கண்டவர் விண்டிலர்" என்று நிற்கும் ஹிமாசல இயற்கை விந்தையில் மூழ்கி முனிவர் குழாத்தில் சேர்ந்தான்.

மறுநாள் காலை ஏழு மணிக்குத் திருக்கழுக்குன்றத்தை அடைந்த நாங்களிருவரும், பிரசித்தி பெற்ற சங்க தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேதகிரியின் அடிவாரத்திற்குச் சென்றோம். அடிவாரத்திலுள்ள சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்திருந்த ஒரு ஆதி சைவப் பண்டாரம், பரம வைதிகத் திருக்கோலத்துடன் விளங்கிய எங்களிருவரையும் அழைத்து அருகில் அமரச்செய்து, எங்களை நோக்கிப் பின்வருமாறு பேசலானார்:-

"உங்களைப் பார்க்கச்சே மகா பக்திமான்களாட்டமா தெரியறது. இந்த க்ஷேத்திரத்தின் மகிமையை முன்னமே கேள்விப் பட்டிருப்பேள்னு நினைக்கிறேன். இந்த மலையின் உச்சியிலே அதர்வண வேதமும் மத்தியில் யஜுர்வேதமும் அடியில் சாமவேதமும் வேரில் ருக்வேதமும் அமைஞ்சிருக்குன்னு புராணத்திலே விரிவா சொல்லப்பட்டிருக்குது. அல்லாமலும், கிரேதா யுகத்திலே சண்டன்—பிரசண்டன் என்ற கழுகுகளும், திரேதா யுகத்திலே சம்பாதி—சடாயு என்கிற கழுகுகளும், த்வாபர யுகத்திலே சம்புகுத்தன்—மாருத்தன் என்கிற கழுகுகளும், கலி யுகத்திலே சம்பு—ஆதி என்கிற கழுகுகளும் சிவபெருமானை வேண்டித் தவம் செய்த மகிமையினால், இம்மலைக்குத் திருக்கழுக்குன்றம் என்கிற பெயர் ஏற்பட்டிருக்குது. இப்போதுகூட, 'சம்பு—ஆதி' என்கிற ரெண்டு பட்சிகளும் நடுப்பகல் பன்னிரெண்டுமணி சுமாருக்கு இந்த மலைக்கு வந்து நித்த நித்தம் சாப்பிட்டுட்டுப் போகிறதுகள். நித்த நித்தம் அந்த பட்சிகளுக்குச் சாதம் சமைத்து ஊட்டுகிறவன் நான்தான். நித்த நித்தம் சர்க்கரைப்பொங்கல்தான் செய்யறது வழக்கம். உங்களைப் பார்க்கச்சே, பெரிய தர்மாத்மாக்களாட்டமா தெரியறது. அந்த புண்ணிய கைங்கரியம், இன்னக்கி உங்கள் கட்டளையா யிருக்கட்டுமே! வெளியூரிலிருந்து வரவாளுக்கு எவ்வளவோ செலவுகளிருக்கும். அவாளவாள் சக்திக்குத் தக்கபடிதானே தர்மம் செய்யணும். ஆகையால், நீங்கள் அதிகமா ஒண்ணும் தரவாண்டாம்; தலைக்கு ரெண்டு ரூபா கொடுங்க, போதும். மத்தியானம், ப்ரசாதமும் தருகிறேன். என்ன யோசனை! சம்மதந்தானே?"—என்று மிகுந்த நயமாக வினவினார் அந்த பண்டாரம். "ஆகா, அதுக்கென்ன?"—என்று கூறி, உடனே எனது மணிபர்ஸைத் திறந்து நாலு முழு ரூபாய்களை எடுத்து அப் பண்டாரத்தின் மகிமை மிகுந்த திருக்கரங்களில் சமர்ப்பித்தேன். "சரி, நீங்க முன்னால் போங்க; நான் பின்னால் வரேன்"—என்றார் பண்டாரம். நாங்களும் மகத்தான மகிமை பொருந்திய மலைமீது ஏறிச் செல்லத் தொடங்கினோம்.

இடை வழியில், எனது நண்பனாகிய சதாசிவன் என்னை நோக்கி, "என்ன பத்தா! உன்னைப்போல அசட்டுப் பித்துக்கொள்ளியை நான் கண்டதேயில்லை. நீ கூட அந்த பண்டாரத்திடம் ஏமாந்து போயிட்டாயே! அந்த நாலுரூபாய் இருந்தா, நாலு நாளைக்கி நாம்ப இங்கே எவ்வித கவலையு மில்லாமே ரொம்ப 'குஷி'யா காலங் கழிக்கலாமே! ஒரு வேளை சோத்துக்கு நாலுரூபா கொடுக்க, உனக்கு எப்படித்தான் மனந் துணிஞ்சுதோ? காலை வேளையிலே வெறும் வயித்தோடே ஆசாரம் குறையாமல் மலையேறினால்தான் புண்ணியம் கிடைக்கும்னு சொல்லி, காப்பி ஓட்டலுக்குப்போன என்னைக்கூட வலுக்கட்டாயம் பண்ணி கையைப் பிடிச்சி இழுத்தாந்துட்டே! உனக்கு நான்தான் பயப்படறேன்; என் வயிறுகூட பயப்படுமா என்ன? காலேலேருந்து வறண்டிருக்கும் வெறும் வயித்திலே, நல்ல பசி வேளையிலே, காரசாரமில்லாத வெறும் வெல்லச் சோற்றை எப்படித் தின்னு தொலைக்கிறது! நீ வேணுமானால் மேலே போப்பா; நான் இங்கேயே தங்கிடறேன். நான் ஒருத்தன் கூட வந்திருக்கேன்னு சொல்லி, வேதகிரீசுரிடத்திலே எனக்கும் சேர்த்து புண்ணியபலன் கொடுக்கும்படி கேட்டு வாங்கிக்கொண்டு வந்துவிடு"—என்று சொல்லி கீழே உட்கார்ந்து கொண்டுவிட்டான்.

"போடா, போ! பாழும் வயிற்றுக் கவலையே உனக்குப் பெரிய கவலையாய்ப் போயிடுத்து! இன்னக்கி ஒருநாள் உன் வயிற்றுக்கு லீவ் கொடுத்தால், நீ செத்தாப் போயிடுவாய்? நித்த நித்தந் தான் புழுங்கலரிசிச் சோறும் காரக் குழம்பும் புளிச்சமோரும் சாப்பிட்டிண்டிருக்கே; இன்னக்கி ஒரு நாளாவது பகவத்-ப்ரசாதம் சாப்பிட்டுப் பாரேன்! அதுவும் சாமான்ய ப்ரசாதமா என்ன? சக்கரைப் பொங்கலில்லியா! அப்படிப்பட்ட அற்புதமான ப்ரசாதம், வீட்டிலாவது காப்பி ஓட்டலிலாவது நீ தலைகீழா நின்னு தவம் பண்ணாலும் உனக்குக் கிடைக்குமா? முந்திரிப்பருப்பும் திராட்சைப்பழமும்

கலந்து அசல் பசுநெய் முழங்கை வழியாய் வழியும்படி மத்தியானம் பண்டாரம் நமக்குக் கொடுக்கப்போகிற அற்புதமான ப்ரசாதத்தை நினைச்சுக்கிட்டே, நாம் இப்போது சிரமம் தெரியாமலே மலையேறிடலாமே! இப்போ பிடிச்சே வயித்தைக் காலியா வச்சிருந்தால்தானே, மத்தியானம் இன்னும் நாலுபிடி சக்கரைப் பொங்கலைச் சேர்த்து உள்ளே தள்ள முடியும்! எழுந்திருடா, எழுந்திரு! மத்தியானம் பன்ரெண்டுமணி வரையிலே, பல்லைக் கடிச்சிக்கிட்டு பேசாமே பொறுத்துண்டிரு: வா, மேலே போகலாம்!"—என்று கூறி அவனை எழுப்பி அழைத்துக்கொண்டு மலையுச்சியை அடைந்தேன்.

மலையுச்சியிலுள்ள கோயிலிலிருக்கும் வேதகிரீச்சுரரைத் தரிசித்து பாடியும் துதித்தும் விபூதி பெற்று மகிழ்ந்து, தெய்விகத்தன்மை பொருந்திய கழுகு முனிவர்கள் அன்னம் உண்ண வரும் அருமைத் திருப்பாறையை அடைந்தோம். எங்களுக்கு முன்பே, அவ்விடத்தில் சுமார் பத்துப் பன்னிரண்டு 'பக்த—சிகாமணிகள்' பட்சி-தரிசனத்தின் பொருட்டு மிகுந்த பக்தி-சிரத்தையுடன் காத்துக் கொண்டிருந்தனர். எனது நண்பன் தனது கையில் அணிந்திருந்த கைக் கடியாரத்தை நான் கவனித்ததில், மணி பன்னிரண்டும் கழிந்து ஒருமணி யானதை உணர்ந்தேன். பின்பு, மணியோ ஒன்றரை—இரண்டு—இரண்டரை—மூன்று—இவ்வாறு விரைந்து கழிந்துகொண்டே வந்தது. ஆனால், பட்சிகளை மட்டும் காணோம்! யாரேனும் கொடிய பாவிகள் வந்திருந்தால், அப் புனிதப் பட்சிகள் வாராமலே நின்று விடுவது முண்டென்று நான் கேள்வியுற்றிருந்தது எனது ஞாபகத்திற்கு வந்தது. அங்கு கூடியிருந்த அவ்வளவு பேரில் எவரைக் குறிப்பிட்டுக் கீழே இறக்கி விடுவதென்பதும் பண்டாரத்திற்கு விளங்கவில்லை. முடிவில், மூன்றரை மணிக்கு அந்த புனிதக்கழுகுகள் இரண்டும் வந்து சேர்ந்தன. பண்டாரம் தனது கைகளில் வைத்துக்கொண்டிருந்த கிண்ணத்திலிருந்த சாதத்தை அலகால் கொத்தித் தின்னத் தொடங்கின. அப்போது, என்னருகிலிருந்த இரண்டு மூன்று அன்பர்கள், பளீர் பளீரென்று கன்னத்தில் அடித்துக்கொண்டு சாஷ்டாங்கமாக கீழே விழுந்து நமஸ்கரிக்கலாயினர். பின்பு, அவை யிரண்டும் திரும்பவும் வானை நோக்கிப் பறந்து மறைந்து போய்விட்டன. ஆனால், எனது நண்பன் சதாசிவன் மட்டும், அப் 'பட்சி-தரிசனத்'தினால் சிறிதும் மகிழ்ச்சி யடையவேயில்லை; அதற்குப் பதிலாக, தன்னைப் பட்டினி போட்ட என்னிடம் கொடுஞ் சினங்கொண்ட அவன், ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு வாய்க்குள்ளாகவே என்னென்னவோ முணுமுணுத்துக் கொண்டிருக்

தான். பின்பு, எல்லோரும் மலையை விட்டுப் பண்டாரத்துடன் புறப்பட்டு, கீழே இறங்கி அடிவாரத்தை அடைந்தோம். என்னையும் எனது நண்பனையும், தவிர, மற்ற பக்தர்களெல்லோரும் கடைத்தெருவை நோக்கிச் சென்று விட்டனர்.

பின்பு, திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்த பண்டாரத்தை நோக்கி, "காலேலேருந்து இது வரையிலே நாங்க தண்ணீர்கூட குடிக்கலே. பிரசாதம் தருவதாகச் சொன்னீங்களே, அதைக் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டால் தேவலை"—என்று வினயமாகக் கூறினேன் நான். அதைக்கேட்ட அவர், தனது சிஷ்யர்களுள் ஒருவனைக் கூப்பிட்டு, "டேய்! இவாளுக்கு ப்ரசாதம் கொடுத்தனுப்பு"—என்று கட்டளையிட்டார். அவன் எங்களை அடுத்த சத்திரத்திற்குள் அழைத்துக் கொண்டுபோய், உட்சென்று எலுமிச்சம் பழ அளவுள்ள இரண்டு சின்னஞ்சிறு வெல்லச்சோற்று உண்டைகளை இரண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு வந்தான். அதைக் கண்டதும், என் வயிறு பகீரென்று பற்றி யெரியத் தொடங்கியது. "இதுக்குத்தானா நாலுரூபா கொடுத்தேன்!"—என்று ஆத்திர மிகுதியினால், நான் வாய்விட்டுக் கூவிவிட்டேன். "பின்னென்ன! 'ப்ரசாதம்'னா, ரெண்டு படிச் சாதம் இருக்கும்னு நினைச்சிக்கிட்டியா என்ன?"—என்று சிரித்துக்கொண்டே வினவினான் அந்த சிஷ்யன். அந்த வார்த்தை எனது செவிகளில் கொடிய அம்பைப்போல் பாய்ந்தது. அருகில் நின்று கொண்டிருந்த எனது நண்பனின் முகமோ, ப்ரளயகால ருத்ரமூர்த்தியின் முகத்தைப்போல் மிகுந்த பயங்கரமாக

மாறிவிட்டது. அவனது பயங்கரமான கோபத்தை எவ்வாறு தணியச் செய்வதென்பதே எனக்கு விளங்கவில்லை. அன்று நாங்கள் பசியின் கொடுமை சகிக்க முடியாமல்—ஒருவரோடொருவர் பேசவும் துணியாமல்—வெவ்வேறு திண்ணையில் போய் 'சிவ-சிவா' என்று படுத்துக் கொண்டு விட்டோம். 'தலை கலனாக இரந்து உண்ணும் நாடு உடையான்'—என்று ஞானசம்பந்தர் பாட நின்ற பிச்சாடனப் பெருமானின் க்ஷேத்திரத்தை அடைந்த நாங்கள், முதல்தரமான—நெய்யொழுகும் சர்க்கரைப் பொங்கலுக்கு ஆசைப்பட்டால், எங்களது ஆசை எவ்வாறு நிறைவேறும்?

சீமாட்டி கார்த்தியாயினி

"ஜீவா"

"ஆமாம்; அன்று ஸ்டேஷனிலிருந்து வீடடைந்ததும் எதிர்பாராத விதமாக ஜுரம் அடிக்க ஆரம்பித்தது. அன்றைக்குத் தட்டுகெட்டு ஆபீஸ் போய்வந்தேன். அன்று மாலையிலிருந்து ஜுரம் அதிகரித்து என்னை வாட்டி யெடுத்து விட்டது. நேற்றுதான் ஜுரம் விட்டுச் சற்று உலாவ முடிந்தது. அதனாலேயே தங்களைப் பார்க்கக்கூட வர முடியவில்லை" என்று ஏதேதோ சாக்குக் கூறி மழுப்பலானான்.

இதைக்கேட்ட திவான் அநுதாபந் தெரிவித்தவராய்த் தன் தங்கை பக்கந் திரும்பி, "அம்மா! சிவசைலத்தை ஞாபகமிருக்கிறதா! அன்று காலை ரயில்ஸ்டே.... ...." என்று சொல்லி வருவதற்குள், கார்த்தியாயினி இடை மறித்து, "இதற்குள்ளாகவா மறந்துபோய் விடுவேன்? என்னுடன் ரயிலில் பிரயாணஞ் செய்த பெரியம்மாவின் பிள்ளையல்லவா இவர்!" என்று குனிந்தவாறு கூறினாள்.

இதுவரை தனது தமையனால் அறிமுகஞ் செய்யப்பட்ட கனவான்கள், மங்கையர்களோடெல்லாம் வினயமாகப் பேசிக் குதூகலித்துப் பெருமிதத் தோடிருந்த கார்த்தியாயினி, சிவசைலத்தைக் கண்டதுமே முகமாறுதலடைந்தாள். சிவசைலம் அவர்கள் நிற்குமிடத்தை யடைந்தபோது இவளை முதலில் கடைக்கணித்து விட்டே திவானோடு பேசலானான். அவனது அக்கடைக்கண் பார்வையை ஆற்றாது கார்த்தியாயினி தலை குனிந்தாள். அவன் தனது உடல் நிலையைப்பற்றிக் கூறிய மொழியின் உட்பொருளை யுணர்ந்து கொண்டவள்போல் அவள் தலையை அசைத்தாள். சிவசைலத்தை முதன் முதலாக ரயில் ஸ்டேஷனில் சந்திக்கையில் அவன் இருந்த தோற்றத்துக்கும், இப்போது இருக்கும் தோற்றத்துக்கும் பெரிதும் வேறுபாடிருப்பதை அவள் நன்கு உணர்ந்தாள். அத்துடன், தன்னாலேயே அவன் பெருமாறுதலடைந்திருக்கிறான் என்பதையும் ஒருவாறு உணர்ந்து கொண்டாள். ரயிலடியில் அவனை நோக்கியவுடனேயே தன்மனம் அவனது கம்பீர தோற்றத்தில் ஊன்றிப் பதிந்ததையும், அதற்கப்புறம் இவ்வொரு வாரத்திற்கிடையே அவனது உருவம் தன் மனக் கண்முன் அடிக்கடி தோன்றுவதையும், அவனைப்பற்றிய நினைவு அடுத்தடுத்து உண்டாவதையும் அவள் கவனித்து வந்திருக்கிறாள். எனவே, அவனது நினைவை தன் மனதினின்றும் அகற்றப் பெரிதும் முயன்று வந்திருக்கிறாள். இந் நிலைமையில், சிவசைலத்தை மீண்டுங் காண நேரிடவே, அவள் சங்கடநிலையை யடைந்தாள். எனவே, தன் தமையன் வினவிற்குப் பதிலளித்து விட்டு, அவ்விடத்தினின்றுஞ் சென்றுவிட முயன்றாள். இத் தரு

ணத்தில் சில பெண்மணிகளோடு தேவகி அங்கு வந்தாள். அவள் தன் தோழிகளைக் கார்த்தியாயினிக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள். ஆகவே, கார்த்தியாயினி தன் மனவேதனையை வெளிக்குக் காட்டாது சமாளித்துக்கொண்டு அவ் இள மகளிரோடு உரையாடினாள்.

தோழிகளோடு மண்டபத்தினுள் நுழையும்போதே சிவசைலத்தைக் கண்டு விட்ட தேவகி, தன் சகோதரியோடு அப் பெண்களைப் பேச விட்டுவிட்டு, அவனோடு உரையாடத் தொடங்கினாள். ஒரு வாரங் காணாமைக்குக் காரண மென்னவென்று ஆவலோடு கேட்டாள். அவனது உடல் மெலிவைக்கண்டு மன முருகினாள். இவள் எவ்வளவு பரிவோடு பேசுகிறாள் என்பதை யுணராது சிவசைலம் அசட்டையாகப் பதிலளித்தான். அவன் கண்கள் கார்த்தியாயினியை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவனது நோக்கெல்லாம் தன் சகோதரியின் மீது பதிந்திருப்பதைத் தேவகி எளிதில் ஊகித்துக் கொண்டாள். உடனே அவள் உள்ளத்தில் பொறாமைத்தீ மெல்ல மூளத் துவங்கியது. ஆத்திரங் கொண்டாள். தன்னால் காதலிக்கப் படும் ஒரு ஆடவன் வேறொரு பெண் (அவள் தன்னுடன் பிறந்த சகோதரியாயிருந்தாலும் சரியே) ணின்மீது மனதைச் செலுத்துகிறான் என்றறிந்தால் எந்த பெண்ணுக்குத்தான் பொறாமையும் கோபமும் பொங்கி யெழாது!

தேவகி மீண்டும் சிவசைலத்தை ஏதோ கேட்கப்போகும் சமயத்தில், வேறொருவரோடு உரையாடி விட்டுவந்த ஸர். பரமேஸ்வரன் பிள்ளை, கார்த்தியாயினி முதலியவர்களைப் பார்த்து, "நாம் போகலாமே! நாட்டியஞ் செய்பவள்கூட வந்து மேடையில் அமர்ந்து விட்டாள்; வாருங்கள்" என்றழைத்த வண்ணம் மேடையிருக்கும் பக்கத்தை நோக்கி முன்னே நடந்தார். கார்த்தியாயினி, சிவசைலம் முதலியவர்கள் பின் தொடர்ந்தனர்.

இதற்கு முன்பே விருந்தினர்களெல்லாம் ஆசனங்களில் அமர்ந்து விட்டனராதலால், திவான் மேடைக்கருகே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டி, அதில் கார்த்தியாயினியை உட்காரச் செய்து, பக்கத்து நாற்காலியில் தாம் அமர்ந்தார். சிவசைலம் கார்த்தியாயினியின் வலப் பக்கம் உட்கார்ந்தான். தேவகி தன் தோழிகளோடு மேடைக்கு இடப்புறத்தில், இம் மூவரையும் பார்த்தாற் போல் உட்கார்ந்தாள்.

எல்லோரும் வந்து விட்டனர் என்றறிந்ததும், தேவகுஞ்சரி பாலசாஸ்வதி திவானுடைய அநுமதியைப் பெற்று பரத நாட்டியத்தை ஆடத் தொடங்கினாள். தேவகுஞ்சரி எழுந்து சபைக்கு வணக்கஞ் செலுத்தி விட்டு, இனிய குரலில் பாடிய வண்ணம் அபிநயிக்க ஆரம்பித்ததும், பெரும்பாலாருடைய கண்கள், அவள் மீது ஏக காலத்தில் வட்ட மிட்டன. தேவகுஞ்சரி இயற்கையில் அப்படி யொன்றும் அழகியல்லள்; செயற்கை யழகே அவளிடம் மிகுந்து காணப்பட்டது. அவள் பூண்டிருந்த வைர நகைகளின் ஜொலிப்பும், தேகத்தை அலங்காரஞ் செய்து நின்ற காசிப் பட்டுப் புடவையிலிருந்த சரிகையின் தகதகாயமான பளபளப்புமே அங்குள்ள கனவான்களின் கண்களைப் பறித்தன. தேனொழுகும் மணமிக்க மலரில் வண்டுகள் மொய்ப்பது போல, பால சாஸ்வதியின் அலங்காரத்தில் சீமான்கள் கண்கள்—சில சீமாட்டிகளின் கண்கள் கூட—மொய்த்தன. சிலர் அவள் மீது வைத்த கண் இமையாது இருந்தனர். எனவே, தேவகுஞ்சரி மேடை மீது நடனமாடிக் கொண்டிருக்க, இவர்கள் ஒவ்வொருவரது கண்ணின் கருமணியிலும்—ஏன் அவர்களது உள்ளங்களிலும்—அவளது உருவம் நடனமாடிக் கொண்டிருந்தது. பெரும்பாலோர் அவளது அழகிலும், நடனத்திலும் மயங்கிப் போயிருந்தனர். தங்கள் கணவன்மார் தாங்கள் அருகிலிருப்பதையும் மறந்து, நாட்டியஞ் செய்யும் அத்தாசிப் பெண்ணின் மீது மோகங் கொண்டு மயங்கி வெறிக்க அவளையே பார்த்துக்

கொண்டிருப்பதைக் கண்டு சீமாட்டிகளில் சிலர் பொருமை கொண்டனர்; சிலர் தங்கள் கணவன்மார் மீது ஆத்திரங் கொண்டனர். ஒரு சீமாட்டி தன் கணவனைக் கண்களால் எரித்து விடுவது போல், அவர் முகத்தை முறைத்துப் பார்த்தாள்; மற்றொரு பெண்மணி தன் முழங்கையால் தன் கணவனது இடுப்பில் பலமாக இடித்தாள்; வேறொரு காரிமணி மெதுவாக —ஆனால் தனது அகமுடையான் காதில் படும்படியாக—அவனது தூர்த்தத் தன்மையையும் ரோக்கத்தையும் பற்றிக் கண்டபடி வைதாள்.

மற்ற கனவான்கள் எல்லாரையும் விட திவான் ஸர். பரமேஸ்வான் பிள்ளையே, தேவகுஞ்சரி பால சரஸ்வதியின் அழகிய தோற்றத்தில் மிகவும் மயங்கிப்போயிருந்தார். பால சரஸ்வதி பரதநாட்டிய மாடத் தொடங்கியதிலிருந்து, ஸர். பரமேஸ்வரம் பிள்ளை கார்த்தியாயினியிடம் அவளது பரதநாட்டியத் திறமையைப் பற்றியும், அழகு, குணம் முதலிய பிரபாவங்களைப் பற்றியும் அளந்து கொண்டே வந்தார். கடைசியாக தேவகுஞ்சரி பாடிய காமச் சுவை ததும்பிய தமிழ்ப் பதங்களிலும், அபிநயங்களிலும் அவர் மிகவும் ஈடுபட்டு தேனில் விழுந்த ஈயைப்போல சொக்கிப் போய் விட்டார். பெருங் குடும்பப் பெண்கள் தனியாக உட்கார்ந்திருந்த கூட்டத்தினிடையே கமலாதேவி அமைதியாக அமர்ந்திருந்தாள். திவானது மனைவி கமலாதேவி சிறிது கர்நாடக மென முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம். நமது மூதாதையர்கள் பெண்களுக்காக விதித்த சில சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மங்கையர் அடங்கி நடப்பது தான் முறை என்பது அவள் கருத்து. ஆகவே அவள் பெரிய பதவி வகிப்பவரது மனைவியாயிருந்தும் வெளியுலக விவகாரங்களில் ஈடுபடாமலே கோஷாப் பெண்போல் இருந்து வந்தாள். எனவே, அவள் கார்த்தியாயினி முதலியவர்களோடு கலந்து கொள்ளாது தனியாக உட்கார்ந்திருந்ததில் ஆச்சரியமில்லை. அவள் தன் கணவனது நிலையைக் கண்டு மனம் வருந்தினாள். அவர் ஸ்திரீலோலராய்த் திரிவதை யறிந்து தயருற்ற சமயம் நேரும் போது இனிமையாகப் பேசி அக்கூடா வொழுக்கத்தைத் தவிர்க்கும்படி இரக்கமாக வேண்டிக் கொண்டு வந்தாளே யன்றி, அவருடன் எதிர்த்துப் பேசியதில்லை.

கார்த்தியாயினியோ, தன் சகோதரர் கூறி வந்ததைக் கேட்பது போலிருந்தாளே யொழிய, அவள் காதில் ஒரு வார்த்தை கூட விழவில்லை. வலுக் கட்

டாயமாக இழுத்து வந்து நெருப்பின்

மீது உட்கார வைக்கப் பட்டவள் எவ்விதம் அல்லல் அனுபவித்துக் கொண்டிருப்பாளோ அது போன்ற உணர்ச்சியோடு அவள் நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தாள். ஆயினும், சிவசைலத்தின் முன் தன் சங்கட நிலையை வெளிக்குக் காட்டிக் கொள்வது ஆபாசம் என அவள் கருதியமையால், மிகவும் சாமர்த்தியமாக அவ்வுணர்ச்சியை அடக்கிக் கொண்டாள். சிவசைலத்தைப் பார்த்ததிலிருந்து தன் மனங் கட்டுக் கடங்காது செல்வதைக் கார்த்தியாயினி ஒருவாறு உணர்ந்தாள். ஆகையால், அவள் அந்நிலைமையை நீடிக்க விரும்ப வில்லை. சிவசைலத்தின் மீது தகாத முறையில் பாயும் மனத்தை அடக்க முயன்றாள். அதனாலேயே அவள் அவன் எதிரே இருக்க விரும்ப வில்லை. தீராப் பொறியாக அவன் தன் பக்கத்திலேயே வந்து அமர்ந்து விடவே, அவள் பரம வேதனையை யடைந்தாள். முதலில் நாட்டியத்தின் மீது கவனஞ் செலுத்த முயன்றாள். சிவசைலத்தின் முகத்தைப் பார்க்காதிருக்க வேண்டி அவன் பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு தன் சகோதரர் பேச்சை உன்னிப்பாகக் கேட்பது போல், பாவனை செய்தாள். என்ன செய்தும் கடைசியாக, சிவசைலத்தின் இங்கித மொழி அவளை மயக்கி அவன் விஷயத்தில் கவனஞ் செலுத்தும்படியும், அவனோடு மனங் கலந்து உரையாடும் படியுஞ் செய்து விட்டது.

சிவசைலம் துவக்கத்தில், நிவான் உரையாடலினிடையே கலந்து கொண்டு அவர் கூறும் மொழிக்கு ஒத்து தாளம் போடுபவன் போல் பேசி, கார்த்தியாயினியின் கவனத்தைத் தன் பக்கல் திருப்ப முயன்று வந்தான். நிவான் பேசியனுத்த பின்னர் தேவகுஞ்சரியின் நாட்டிய லாவண்யத்தில் இலயித்துப்போய் விடவே, இவனுக்குக் கார்த்தியாயினியோடு தாராளமாகப் பேசச் சௌகரியங் கிடைத்தது. இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சிறிது தூரத்துக்குப் பின்னாலேயே மற்றவர்கள் அமர்ந்திருந்தார்களாதலால், இவர்கள் பேசுவது மற்றவர்களுக்குச் சரியாக ஒன்றுங் கேட்காது.

“நான் இன்று தங்களோடு அளவளாவிப் பேசி மகிழும் சந்தர்ப்பங் கிடைத்ததை எனது பெரும் பாக்கியமாகவும், பெருமையாகவுங் கருதுகிறேன்” என்று கூறிக் கார்த்தியாயினியோடு பேச்சை மெதுவாக ஆரம்பித்தான்.

கார்த்தியாயினி அதற்கொன்றும் பதில் சொல்ல வில்லையாயினும், புன்னகை கொண்டாள். சிவசைலம் அதையே வாய்ப்பாகக் கொண்டு பொதுவாகப் பல விஷயங்களைப்பற்றி அவளோடு பேச்சு கொடுத்து பேசலானான். அவனது இதமான வார்த்தைகள் கார்த்தியாயினியின் மனதை நெகிழச் செய்து விட்டதென்றே கூற வேண்டும். சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் அவனுடன்

மனங்கலந்து பேசி மகிழலானாள். சிவசைலம் தேவகுஞ்சரி பாடும் தமிழ்ப் பதங்களைப் பற்றியும், அபிநயத்தைப் பற்றியும் ஹாஸ்யமாகப் பேசி கார்த்தியாயினியை வாய் விட்டுச் சிரிக்க வைத்தான். அதுவன்றி, அவன் மெதுவாக, கார்த்தியாயினியின் தோளோடு தன் தோள் உராயும்படி நெருங்கி உட்கார்ந்தான். ஏற்கனவே, தேவகுஞ்சரியின் காமச்சுவை மிகுந்த நாட்டியம் அவளுக்கு இன்ப உணர்ச்சியை மிகுதிப் படுத்தி யிருந்தது. இவனது ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் மின்சாரச் சக்தியால் தாக்குண்டவள் போல், கார்த்தியாயினி மதிமயங்கினாள்.

எதிர்ப்புறத்தில் தன் தோழிகளோடு அமர்ந்து தேவகி உரையாடிக் கொண்டும், நாட்டியத்தைப் பார்த்துக் கொண்டும் இருந்தாலும், அவள் கவனமெல்லாம் தன் தமக்கை கார்த்தியாயினியும் சிவசைலமும் இருக்கு மிடத்திலேயே பதிந்திருந்தது. அவள் இவ்விருவரது குதூகலம் பேச்சையும், சிரிப்பையும் பொறாமைக் கண்ணோடு நோக்கிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். தான் மனமாரக் காதலித்துவந்தும் சிவசைலம் தன்னை யலட்சியப் படுத்தி வந்ததும், தன் தமக்கையைச் சந்தித்து இன்னும் சில நிமிடங்கள் கூட ஆகாம லிருந்தும், நெடுநாள் பழகியவன் போல் மிக நெருங்கிப் பழகிப் பேசிவருவதும் ஆகியவற்றை எண்ணிப் பார்த்ததும் அவள் வயிறு பற்றியெரிந்தது. அத்துடனில்லாது, சிவசைலம் கார்த்தியாயினியின் முகத்தோடு முகம்வைத்துப் பேசுவதையும், தோளோடு தோள் பொருந்த மிக அணுக்கமாக உட்கார்ந்திருப்பதையும் கவனித்ததும் தேவகியின் மனம் சகிக்க முடியாத நகரவேதனையை யடைந்தது. தான் விரும்பும் காதலன் தன் தமக்கையோடேயே இவ்வளவு நெருக்கமாக உறவாடுவதை மேலும் காண சகியாது தேவகி அவ்விடத்தைவிட்டு வெளியேற முயன்றாள். எனவே, அவள் மெதுவாகத் திரும்பிச் சுற்றுமுற்றும் பார்க்கலானாள். அவ்வாறு பார்வையிட்டு வருகையில், நாராயணமேனன் தனக்குப் பின்புறத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்திருப்பதை யறிந்தாள்; திடுக்கிட்டாள். எங்கு அவன் தன் மனநிலையை அறிந்துவிட்டானோ எனச் சந்தேகித்தாள்; நாணங் கொண்டாள்.

நாராயண மேனன், தேவகி தன் தோழிகளோடு வந்து அமர்வதற்கு முன்பே, அவ்விடத்திற்குவந்து உட்கார்ந்திருந்தா னாதலால், இவர்கள் ஒருவர் பின்னொருவர் அமர்ந்தது தற்செயலாகவே நிகழ்ந்தது. தேவகி தனக்கு முன்புறத்தில் வந்து உட்கார்ந்திருப்பதை யறிந்த நாராயண மேனன் மிகவும் மகிழ்ந்தான். அவளது பின்னழகைக் கண்டு கண்டு களிகொண்டான். அவன் அவளுக்குப் பின்னே அமர்ந்திருந்ததால், அவளது முகபாவத்தை யறிய முடியா விடினும் அவள் தன் தோழிகளோடு பேசுந் தோரணையிலிருந்து, அவளுடைய கவனம் வேறிடத்தில் சென்றிருப்பதை இவன் ஒருவாறு ஊகித்தான். தேவகி சிவசைலத்தின்மீது காதல் கொண்டிருப்பது இவனுக்குத் தெரியுமாதலால், அவன் கார்த்தியாயினியோடு அளவளாவிப் பேசிவருங்காட்சியே அவள் கவனத்தை ஈர்த்திருக்கிறது என அறிந்தான். தேவகி பெருமூச்சு விடும்போதெல்லாம் அவளது தோள் உயர்ந்தெழுந்து அடங்குவதைக் கண்ட நாராயண மேனன், சிவசைலம் கார்த்தியாயினியிடம் நட்புரிமை கொண்டாடுவதை அவள் சிறிதும் விரும்பவில்லை; அதற்காகவே, அவள் மனவேதனை யடைகிறாள் என்று அநுமானித்தான்.

தேவகி தன் தோழிகளோடு ஏதோ சாக்குப் போக்கு கூறிவிட்டு, மெல்ல எழுந்து நடந்து மண்டபத்தினின்றும் வெளியேறினாள். சில விநாடிகளுக்கெல்லாம் நாராயண மேனனும் அவளைப் பின்தொடர்ந்து சென்றான். தேவகி தலைகுனிந்தவண்ணம் மெல்ல நடந்து பூந்தோட்டத்தினுள் நுழைந்தாள்.

“தேவகி! தேவகி! என்ன ஒருவிதமாகக் காணப்படுகிறாயே!” என்று கேட்டவாறு நாராயணமேனன் அவளை யணுகினான்.

தேவகி திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பியிருந்தது. நாராயண மேனனைக் கண்டதும் அவளுக்குத் துக்கம் அதிகமாயிற்று. தேவகி கண்ணீர் விடுவதைக் கண்ட நாராயண மேனன் பதைபதைத்தான். "தேவகி! ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது? என்னிடஞ் சொல்லக்கூடாதா? என் உயிரைக் கொடுத்தாயினும் உன் துயரை மாற்றுகிறேன். சொல்; சொல்!" என்று படபடப்போடு கேட்டான்.

இவனது இம்மொழி தேவகிக்கு எரிகிற நெருப்பில் நெய் வார்த்ததுபோலிருந்தது. அவள் வாய்விட்டுக் கதறினாள். "நாராயன்! என்னைத் தனியே விட்டுச் செல்! நான் இச்சமயம் ஏகாந்தத்தை விரும்புகிறேன். என் மனத் துயரை உன்னிடம் கூறமுடியாது. மன்னிக்கவும். உன்னால் அதற்குப் பரிகாரந் தேட முடியாது. போ! என்னைவிட்டுப் போ! என் நன்மையை விரும்புவையானால் உடனே செல்; செல்" என அழுகையோடு இரக்கமாக வேண்டினாள்.

"தேவகி! கண்................" என்று நாராயண மேனன் மேலும் ஏதோ கூற வாயெடுத்தான்.

தேவகியால் தாங்க முடியவில்லை. தான் நின்றவிடத்தி லிருந்து பைத்தியம் பிடித்தவள்போல் தன் அறையை நோக்கி ஓடினாள். அறைக் கதவைத் தாளிட்டுக் கொண்டு, படுக்கையில் விழுந்து முகத்தை மூடிக்கொண்டு ஓவெனக் கதறலானாள்.

(தொடரும்.)

நூதன தமிழ் நாவல்கள்.

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், **B. A.** எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
திகம்பர சாமியார் பால்ய லீலை	5	0	துரைக்கண்ணம்மாள்	2	4	மிஸ்டர் பூச்சாண்டி எம்மே!	1	2
மிஸிஸ் லைலா மோகினி	3	0	லக்ஷ்மீகாந்தம்	2	0	சோமசுந்தரம்	1	2
மன்மதபுரியின் மூடு மந்திரம்	2	12	திரிபுரசுந்தரி	2	0	டாக்டர் சோணாசலம்	1	2
கனகாம்புஜம்	2	12	இராஜேந்திர மோகனா	2	0	பச்சைக்காளி	1	2
தில்லைநாயகி	2	4	வசந்தகோகிலம்	1	4	சமயசஞ்சீவி	1	2
ஸதானந்த போதக சாமியார்	2	4	முத்துலக்ஷ்மி	1	4	சொக்கன் செட்டி	1	2
பன்னியூர் படாடோப சர்மா	2	4	நீலலோசனி	1	2	பூஞ்சோலையம்மாள்	1	2
			கலியாண சுந்தரம்	1	2	சிவராமகிருஷ்ணன்	1	2
			நங்கை மடவன்னம்	1	2	மாயசுந்தரி	0	12
			சிங்கார சூர்யோதயம்	1	2			

செய்யூர்-எஸ். சாரநாயகி அம்மாள் எழுதியவை. | எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
சிவபாக்யம்	1	8	நித்யகல்யாணி	0	12	கனகமணி	2	4
அபராஞ்சி	0	12	சண்முகவடிவு	0	5	பத்மாட்சி	2	0
ஞானக்கொழுந்து	0	12	மன்மத விஜயம்	0	4	வசந்தா	1	8
சம்பத்குமார்	0	12				வீரகேசரி	1	8

ரமாமணி ரூ. 2 0 0 | சுந்தரி மனோகரன் ரூ. 1 4 0

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

உண்மை நட்பின் உயரிய தன்மை

(கே. வி. சிவசுப்ரமணியன், பி. ஏ.)

1934-ம் வருஷம் மார்ச்சு மாதம் 18 தேதி மாலை ஆறுமணி. சென்னை கடற்கரையில் காற்று ரமணீயமாய் வீசிக்கொண்டிருந்தது. அலைகள் ஆரவாரித்துக்கொண்டு ஒன்றுக்கொன்று போராடிக்கொண்டிருந்தன. செங்கதிர்க் கதிரவனும் சேணெடு வானத்திற் சென்று களைப்புற்றுக் குடதிசை வீழ்ந்தனன். ஜனங்கள் அங்கங்கே கூட்டங் கூட்டமாய்க் கூடி இயற்கை இன்பத்தை அனுபவித்துக்கொண்டு உல்லாஸமாய் இருந்தனர். "நீ பிறந்ததெங்கே?—மதுரையில்; நான் பிறந்ததெங்கே? சித்தூரில். நாமிருவரும் முன் ஜென்மப் பயனல்லவோ இப்போது இணைபிரியாத நண்பர்களாகி, இருவரும் B. L. வகுப்பில் ஸ்டடி பண்ண நேர்ந்தது பார்த்தனையா!" என்றான் சம்பத் குமார் தன் ஆத்ம நண்பன் பஸவேசன் தோளில் கைபோட்டவண்ணம். "வாஸ்தவம்தான், இங்கிலீஷ் ஆதர்ஸ்கூட ரொம்பபேர் பிரண்ஷிப்பைப் பற்றி—என்ன எழவு. தமிழிலேயே பேசணும்னு நெனைச்சாக்கூட நடுவிலே நடுவிலே எப்படியோ இங்லீஷ் வேர்டுஸ் (Words) மிக்ஸாயிடுது—இங்கிலீஷ் கவிகள் இருக்கார்களே. அவர்கள்கூட நட்பைப் பற்றி அழகாக எழுதி இருக்கிறார்கள்" என்று பஸவேசனும் ஒத்துக்கு மத்தளம் போட்டான். (இவர்களிருவரும் சென்னை லாகாலேஜ் வாலிப மாணவர்கள் என்று நண்பர்கள் அறிவார்களாக.) பஸவேசன் தன் மயிரை அமெரிக்கன் கிராப் செய்து, ட்வீட் யூனிபாரம், ஹாட் முதலியன அணிந்து மேனாட்டு நாகரீகம் முற்றுமுடையவனாய்— சாதாரண நாகரீகமல்ல. அப்டு-டேட் நவநாகரீகம்—அழகில் முருகனுக்குக் கொஞ்சமும் தோற்றவனல்ல. அம்மாதிரியான மேனாட்டு நாகரீக நடையுடை பாவனைகளையுடைய ஸம்பத் குமாரும் அழகில் மன்மதனை வென்றவனென்றே கூறலாம்.

இங்ஙனம் இருவரும் கடற் கரையில் பேசிக்கொண்டிருக்கும்போது, ஸம்பத் குமார் தன் சினேகிதன் அறியாமலே தன் கண்களை சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு கன்னியின்மீது செலுத்தினான். ஆஹா! என்ன காட்சி! அவளது நீண்டு கருத்தடர்ந்த கூந்தலும், திரண்ட புஜங்களும், கமலம் போன்ற வதனமும் கூரிய கண்களும், மேனாட்டு நாகரீக உடையும் அவனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. சிறிது நேரத்தில்- இருவர் கண்களும் சந்தித்தன. தம்மையறியாமலே இருவர் தலைகளும் குனிந்தன. கண்டதுதான் தாமதம். உடனே காதல். ரம்பைபோன்ற ரமாமணியும் கடற்கரை நீங்கி வீடுசேர்ந்தாள். நண்பர்களும் காலேஜ் ஹாஸ்டலை யடைந்தனர். சம்பத் தான் கண்ட காதலியின் முகத்திற்கு சினிமா ராணிகள் பலரை ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்து முடிவில் அவளுக்கு ஒருவரும் ஈடில்லை என்று துணிந்தான். அவனது மனம் அந்நங்கையையே தியானித்தது.

II

மாதம் ஒன்று பறந்தோடியது. அவனது முயற்சியால்—சம்பத் குமாருக்கும் ரமாமணிக்கும் மணம் முடிக்க நாள் குறிப்பிடப்பட்டது. இக் காதலர்கள் கொண்டுள்ள காதலின் மகிமையை மதித்தற் கியலாதது. அத்தகைய காதலர்களுக்கு ஜூன்மீ 19 தேதி காலை மணம் நடக்கப் போகிறது. இருவருக்கும் ஒருநாள் போவது ஒரு வருஷமாகத் தோன்றியது. அவ்விவாக விஷயத்தைப் பற்றி கடுகளவுகூட பஸவேசனுக்குத் தெரியாது. தன் நண்பனுக்குத் தெரிவிக்காமல் அவனை மணந்துகொள்ள ஸம்பத் மனம் இடந்தரவில்லை. தனக்கு மணம் நடக்கப் போகிறதே என்று ரொம்ப சந்தோஷமடைந்திருந்தாலும் தன் நண்பனையும் அம்மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ளச் செய்தாலொழிய அவன் மனம் நிம்மதியடையாது. தன் காதலியைக் குறித்து அவனது அபிப்பிராயத்தை விரும்பினான். ஆகையால் பஸவேசனை பூந்தமல்லி ஹைரோட்டிலுள்ள பங்களாவுக்கு அழைத்துச்சென்று தன் காதலிக்குத் தன் நண்பனை அறிமுகப்படுத்தினான். ரமாமணியின் தந்தையாகிய டாக்டர். சங்கரனிடம் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தனர். இச்சம்பவத்தால் தனக்குப் பின்னால் வரப்போகும் துன்பத்தை ஸம்பத் சிறிதும் உணரவில்லை. ரதி தேவிக்குச் சற்றும் குறையாத அழகுடைய ரமாமணியின் ரமணீயமான பார்வையைக் கண்ட யார்தான் காதல் வலைப்படாதவர்? பஸவேசனும் கண்டான்; நோக்கினான், காதலுற்றான். பின்பு இருவரும் தங்களிருப்பிடத்தை யடைந்தனர்.

III

பூந்தமல்லியி லிருந்து வந்ததி லிருந்து பஸவேசனுக்கு மும்முரமான ஜுரம். காரணம் சம்பத்துக்குத் தெரியாது. ஸம்பத்தின் துடைமீது தலையை வைத்துப் படுத்திருந்தால் அவனுக்கு சிறிது ஆறுதலாக இருந்தது. நாடோறும் தூக்கத்தில் ரமாமணி அவன் கண்முன் நிற்கிறாள். அவளது நினைவு அவனை எறும்பாக உருக்கிவிட்டது. நண்பனின் உடல் மெலிவைக் கண்ட ஸம்பத்குமார் டாக்டர் பலரைக் கொண்டு அது காதல் நோயெனத் தெரிந்துகொண்டான். அவனது அந்தரங்கக் கவலையை வெளியிடுமாறு வேண்டினான். தாயறியாத ஓர் சூலுமுண்டோ? நண்பனுக்கு அறிவிக்காத செய்தியுமுண்டோ! ஆகையினால் பஸவேசன் ரமாமணியைக் காதலிப்பதாகக் கூறினான். "ஆ! என் நண்பனது வியாகூலத்திற்கு நானே காரணவாதியாவேன்! நண்பனுக்கு மணஞ் செய்வித்து காதலியை இழப்பதா? அல்லது நண்பனைவெறுத்து காதலியை மணப்பதா? என்று இருதலைக் கொள்ளி எறும்புபோல் இடர்ப்பட்டான் நமது ஸம்பத். ஏழை நெஞ்சம் எண்ணி எண்ணிப் புண்ணாவதன்றி வேறென் செய்வான், பாவம்! சுயநலங் கருதாது பொதுநலங் கருதும் பெருங்குணம் வாய்ந்த நம் ஸம்பத், தன் அன்பின் முக்காலே அரைக்கால் பங்கை கொள்ளை கொண்டிருந்த ரமாமணியைத் தன் தோழனுக்கு நல்ல நாளில் சிறந்த முறையில் மணம் புரிவித்தான். இங்ஙனம் எதிர் பாராது நடந்த சம்பவத்தினாலே பஸவேசனின் மனம் பூரிக்கவே உடலும் பூரிக்க ஆரம்பித்தது. சிலவாரங்கள் கழிந்தன. இயற்கைத்தாய் தன் அழகை மக்களுக்கு எக்ஸிபிஷன் மூலம் காண்பிக்கும் காலமாகிய ஜூலை மாதம் பிறந்தது. பஸவேசன் உடம்பு முற்றும் சௌக்கிய மடைந்துவிட்டது. 15 தேதி காலை பத்துமணிக்கு பஸவேசன் தன் மனைவியுடன் பம்பாய்க்குச் செல்ல விடைபெற்றுக்கொண்டு ரயி லேறினான்.

IV

மாதங்கள் பலசென்றன. இப்போது நம் பஸவேசன் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கிறான். இது இப்படி இருக்க சம்பத்குமார் தன் காதலியையும் நண்பனையும் விட்டுப் பிரிந்த காரணத்தால் ஏக்கமுற்று நோய் வாய்ப்பட்டான். அம்மட்டுமல்ல. ரமாமணியின் உறவினர்கள் ரமாமணியை யாரோ ஒருவனிடம் பணம் வாங்கிக்கொண்டு சம்பத் விற்றுவிட்டானென்று குற்றம் சாட்டி அவன்மீது கேஸ்

தொடர்ந்தனர். சம்பத், தான் தப்பித்துக் கொள்ள எவ்வளவோ முயன்றும் கோர்ட்டார் அவனுக்கு அபரிமிதமான அபராதம் விதித்தனர். அவனால் அதைக்கொடுக்க முடியவில்லை. எட்டாம் மடத்துச் சனியன் அவனைப் பிடித்துக்கொண்டது போல் ஒன்றின்பின் ஒன்றாகத் துன்பம் படையெடுத்து வந்தன. அவனது ஆஸ்தி முழுதும் ஏலம் போடப்பட்டது. மீதி தொகைக்காக ஒரு கண்காணியிடம் அவன் அடிமைப்பட்டான். இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் இராப்பகலாக கொடிய வேலை வாங்கினான். தன் எஜமானனின் ஆடுகளை மேய்ப்பதே அவன் தொழிலாயிற்று. இவ்வளவுக்கும் அவன் பெற்ற பலன் அரைகுறையான வயிற்றுச் சோறுதான். பஞ்சமென்னும் கொடிய பிசாசு அவனைப் பிடித்துக் கொண்டது. சிலமாதங்களுக்குப் பின் அவன் விடுதலையடைந்தான். சம்பத் "நம்மைப் பிடிச்ச சனியன் இன்றோடு ஒழிந்தது. இனி பிழைக்கும் வழியைத் தேடுவோம்" என நினைத்துக்கொண்டு இரவுபகலாய் பம்பாயை அடைந்தான். பம்பாயில் தன் நண்பனை எங்கே காண்பது? எனத் திகைத்து தெருவெல்லாம் சுற்றி அலைந்து களைப்புற்று தங்குவதற்காக ஹைகோர்ட்டை யடைந்தான். தற்செயலாய் தன் நண்பன் ஜட்ஜு ஸ்தானத்தில் கொலுவிற்றிருப்பதைக் கண்டான். ஹா! என்ன அதிசயம்! பாழுங் கடவுளுக்கு கண்ணில்லை என்கிறார்களே! அது நிஜமே. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைபோல் வளர்ந்த எங்களிருவரில் ஒருவனை ஜட்ஜாகவும் மற்றொருவனை அடிமையாகவும் இருக்கும்படிச் செய்தானே! இருக்கட்டும். பசவேசன் இன்றாவது என்னைக் கண் திறந்து பார்க்க மாட்டானா? எனக் கூறி நண்பன் கண்முன் படும்படி போய் நின்றான். கந்தைகளையே ஆபரணமாகக் கொண்ட ஸம்பத்தை அவன் தன் நண்பனென எங்ஙனம் அறிதல் கூடும். ஆகையால் ஜட்ஜு அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அங்கிருந்தோர் ஸம்பத்குமாரை வைது துரத்திவிட்டனர். இப்போது சம்பத்துக்கு மகிழ்ச்சி ஒருபுறமும் அழுகை ஒருபுறமும் வருகிறது. பொழுது போயிற்று. பொற் கிரணங்களை வீசி கதிரவனும் அஸ்தமித்தனன். ஸம்பத் இராப் பட்டினியோடு படுக்கும் இடத்தைத் தேடி அலைந்தான். கந்தை கட்டிக்கொண்டு பிச்சைக்காரனைப் போலிருக்கும் இவனுக்கு யார்தான் படுக்க இடங்கொடுப்பர். பாவம்! அந்நகருக்கு வெளியேயுள்ள ஒரு இடிந்த பாழுங் கோயிலையடைந்து கள்ளிருளில் உள்ளே படுத்துறங்கினான். பிச்சைக் காரர்களுக்கும் திருடர்களுக்கும் கள்ளக் காதலர்களுக்கும் தங்கள் தங்கள் தொழிலை நடத்த அது பேருபகாரமா யிருந்தது. ஆனால் அன்றிரவு அக்கோயிலில் இவனைத் தவிர ஒரு ஈ எறும்பு கிடையாது. அவன் நடந்தலைந்த களைப்பால் ஒரு கருங்கல்லைத் தலைக்கு வைத்துக்கொண்டு நன்றாய்த் தூங்கிவிட்டான். இந்த சிலமணி நேரத்தில்தான் அவன்படும் கஷ்டங்கள் அவன் மனதைவிட்டு நீங்கி இருந்தன. பேய்களும் படுத்துறங்கும் நேரமாகிய கள்ளிரவில் எருமையின் திருவுருவம்போன்ற இரண்டு திருடர்கள் அங்கு படுத்துக் கொள்வதற்காக வந்தனர். ஆனால் அன்று அவர்கள் கொள்ளையடித்த பொருள்களை பங்குபோடும் விஷயத்தில் சண்டை ஏற்பட்டு ஒருவன் மற்றவனைக் கொன்று வீழ்த்திவிட்டு வெளியேறி, கோயிலில் ஒரு மனிதன் கொலைசெய்து கிடப்பதைக் கண்டு தான்பயந்து ஓடிவந்ததாகப் போலீசாரிடம் தெரிவித்துவிட்டு ஓடிப்போய் விட்டான். சொன்னதுதான் தாமதம். ஒரு முசல்மான் சப் இன்ஸ்பெக்டர் சில செந்தலைப் புலிகளுடன் புறப்பட்டுப் போய் சோதனைபோட்டார். அங்குகொலை செய்யப்பட்டு கிடக்கும் ஒரு பிணத்தையும் நமது ஸம்பத்குமாரையும் கண்டுபிடித்தார். உடனே இன்ஸ்பெக்டர் அவனைப் பிடித்துக்கொண்டு (கொஞ்சம் தெத்துவாயானபடியால்) "டேய்! ந்ந்ந் நீதானே இந்த மன்ஸனை கொக் கொக் கொன்னு போட்டே. நம்ளிகிட்டே ஒளிக்காதே சொல்லிடு. இல்லா போட்டா உசர் புடிச்சிடுவேன்." என்று உருட்டல் மருட்டல்

எல்லாம்செய்து அவன்தான் கொலைசெய் தவன் என்று கொலைக்குற்றத்தைச் சாட்டினர். அவனது ஏழ்மைத் தன்மையும் மருண்ட பார்வையும் அத்தகைய ஆபத்தை அவனுக்கு விளைத்தது. "Misfortunes never come single" (ஆபத்துக்கள் என்றும் தனியாக வருவதில்லை. பட்ட காலிலே படும்.) என்ற பழமொழி நம்சம்பத் விஷயத்தில் மெய்யாயிற்று. பொய் புனை சுருட்டு டம்பம் நிறைந்த இவ்வுலகில் நாம் இருந்தென்ன, இறந்தென்ன என நினைந்து உயிரையும் வெறுத்தான்.

V

மறுநாள் சம்பத் ஹைகோர்ட் ஜட்ஜு முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். குற்ற விசாரணை நடந்தபோது ஸம்பத் தானே குற்றவாளி என மிக்க வணக்கத்துடன் ஒப்புக்கொண்டான். தன்முன் நிற்பவன் தன் நண்பன் தானென அறியாத ஜட்ஜு அவனுக்குத் தூக்குதண்டனை விதித்தார். மாலை நான்கு மணிக்கு சம்பத் தூக்கு மேடைமீது கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். வேடிக்கை பார்க்கவந்த ஜனங்களின் கூட்டம் எள் போட்டால் எள் விழாதபடி நிறைந்திருந்தது. அக்கூட்டத்தில் என்ன நடக்கப்போகிறதென்பதை அறிய உண்மைக் குற்றவாளியும் வந்திருந்தான். தூக்கிவிடுவதற்கு இன்னும் 15 நிமிஷங்கள்தான் இருக்கின்றன. ஸம்பத்தின் நிலையைக் கண்டு அக் கூட்டத்திலுள்ள கல்நெஞ்சனும் கலங்கி துக்கித்தான். எங்கும் ஒரே நிசப்தம். பார்த்தான் திருடன். "ஆஹா! என்னாலன்றோ ஒருஉயிர் போனதுமின்றி இன்னும் சிறிது நேரத்தில் ஒருபாவமும் அறியாத இன்னொரு உயிர் போகப்போகிறது. அதுகண்டும் நான் ஒளிந்திருத்தல் ஆண்மையாகுமா?" என்று கூறி மனங் கொதித்தவனாய் கூட்டத்தில் சரேலெனப் பாய்ந்து ஸம்பத்குமாரின் கால்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து கதறி மன்னிக்க வேண்டினன். கூட்டத்திலிருந்தவர்களும் கனம் ஜட்ஜு அவர்களும் ஒன்றுமறியாது திகைத்தனர். உடனே திருடன் மேடைமீதேறி, "ஜனங்களே! நான்தான் குற்றவாளி. ஒன்றுமறியாத அவரை விடுதலை செய்து என்னைத் தூக்கிலிடுக" என்று கூறி நடந்தவற்றைக் கூறினன். அப்போது கூட்டத்திலிருந்த எல்லா கண்களும் ஸம்பத்தின் வாடிய முகத்தையே நோக்கின. ஜட்ஜும் இதைக்கண்டு ஆச்சரியமுற்று சம்பத்தை உற்றுநோக்கினர். சோபாவைவிட்டு எழுந்தோடினர். "ஹா! சம்பத்!" எனக் கூறிக்கொண்டே சந்தோஷம் ஒருபுறமும் இரக்கம் ஒருபுறமும் உடையவராய் பேச நாவெழாமல் வாய் குளறி பேரானந்தத்தால் கட்டியணைத்துக் காலில் விழுந்தார். "நான் தெரியாது உனக்குச் செய்த அபசாரத்தை மன்னிக்கும்படி கெஞ்சுகிறேன். நீயன்றோ சிறந்த நீதிபதி! நான் இப்பதவியை வகித்தும் என்ன பயன்!" என்று புலம்பினர். உரிய நேரத்தில் உண்மைக் கொலையாளி தூக்கிலிடப்பட்டான். சிறிதுநேரத்தில் ஜனங்களெல்லோரும் ஸம்பத்குமார் ஜட்ஜின் சிநேகிதன் என்றறிந்தனர்.

VI

வாசகர்களே! மேல் நடந்தவை இன்னதென நான் கூறவும் வேண்டுமோ? ஒருவாரம் கழிந்தது. ஸம்பத்குமார் அந்நகரத்திற்கு போலீஸ் ஸுப்பரின்டெண்டெண்டு ஆனான். ஒருநாளில் ஒருமுறையேனும் தன் நண்பனைக் காணவிட்டால் பசவேசனுக்கு மனம் சகியாது. அவர்கள் சிநேகிதம் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தது. ஒருமாதத்திற்குப்பின்பு பஸவேசன் சகோதரி இரேணுகா தேவியை ஸம்பத்குமாருக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். இரேணுகா தேவியும் தன் கணவன் கல்வியறிவுக்குச் சிறிதும் குறைந்தவளில்லை யாதலால் ஸம்பத்குமார் மகிழ்ச்சியடைந்தான். அவன் தன் காதலியுடன் "ரேணுகா விலாஸ்" என்னும் பங்களாவில் வசித்து வருகின்றனர். அவர்களிருவரும் அனுபவிக்கு மின்பத்தைப் பங்குபோட்டுக் கொள்வதற்காக மறுவருஷம் ஒரு சுந்தர புத்திரன் பிறந்தான்.

("இரஸிகன்.")

காலச்சக்கரம் உருண்டோடும் வேகத்தில் உலகமே தலைகீழாக மாறுகிறதென்றால், அதில் வாழும் மனிதர்கள் மாறுதலடைவதுதானா ஆச்சரியம்! ஒரு காலத்தில் ஒருவருக்குப் பிடித்தமாயிருந்த கொள்கை மற்றொரு காலத்தில் பிடித்தமில்லாமல் போகிறது; இதற்கு முன்னர் அம் மனிதருக்குப் பிடித்தமில்லாதிருந்த கொள்கையே பின்னர் மிகவும் பிடித்தமுடையதாய்ப் போய் விடுகிறது. அவ்வளவு தூரம் போவானேன்! ஒரு நிமிஷம் ஒருவருக்குச் சரியெனத் தோன்றும் விஷயம் அடுத்த நிமிஷம் தவறாகத் தெரிகிறது. சில விநாடிகளுக்கு முன் வரை அநாவசியமாகக் காணப்படும் பொருள், அடுத்த கணத்திலேயே அவசியமாகிறது. இதெல்லாம் காலகற்பஞ் செய்யும் கோலம்! ஆகவே, காலநிலைமையை யொட்டி—காலதேச வர்த்தமானத்தை யொட்டி—மனிதர்கள் நடந்து கொள்ளுவதே அறிவுடைமையாகும். (அதை யறிந்து அநுசரித்து நடவாதவன் இவ்வுலகில் வாழ்வதற்கே தகுதியற்றவனாவான்.)

ஒரு காலத்தில் தமிழ்நாடகக் கலை, மிக உன்னத நிலையிலிருந்தது. எக்காரணத்தாலோ அது கலைவாணர்கள் கவனிப்பை யிழந்தது. அதுவன்றி, தகுதியற்றவர்கள் கையிலும் அது சிக்கி மிகவும் சீர்கேடான நிலைமையை யடைந்தது. அக்கலையை மீண்டும் சிறப்பான நிலைக்குக் கொண்டுவர பெரிதும் பாடுபட்டவர்கள் பலர். அவர்களில், சமீப காலத்தில் ஆங்கிலநாடகக் கலையைப்போல், தமிழ்நாடகக் கலையையும் உன்னத நிலைக்குக் கொண்டு வரப் பாடுபட்டவர்—இன்னும் பாடுபட்டு வருபவர்—ராவ்பகதூர். ப. சம்பந்தமுதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களாவர். நம் நாட்டில் ஒருவர் நாடகத்துறையி லிறங்கி வேடம் பூண்டு நடிப்பதைக் கேவலமாகக் கருதுவது இன்னங்கூட இருந்து வருகிறது. எவ்வளவு பெரிய தகுதிவாய்ந்தவர் நடித்தாலும், "அவன் என்ன கூத்தாடிப் பயல்தானே!" எனப் பரிகாசஞ் செய்வது வழக்கம். நம் முதலியார் நாடகவுலகில் புகுந்த காலத்து இம்மனப்பான்மை அழுத்தமாக இருந்தது. அவர் அக்கேவல மொழியை யெல்லாம் யொருட்படுத்தாது, நாடகக் கலைக்குப் புத்துயிர் அளிக்க வேண்டுவென்ற ஒரு குறிக்கோளோடேயே "சுகுண விலாஸ சபை" என்று ஒரு சபை யேற்படுத்தி அதன் வாயிலாகச் சில நாடகங்கள் நடத்தி அவைகளில் தமக்குத் தகுந்த பாத்திரங்களைப் பூண்டு நடித்து வரலானார்; அத்துடனில்லாது தாமே பல நாடகங்களையும் இயற்றியிருக்கிறார். இவ்விஷயத்தை "பதி பக்தி" படத்தைப்பற்றி விமரிசனம் எழுதும் போது குறிப்பிட்டிருப்பதை நேயர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

இவ்வாறு, கூத்தாடித் தொழில் மிகக் கேவலமானது என்ற மனப்பான்மை

மக்களிடையே ஏற்பட்டிருந்த காலத்தில், அகௌரவத்தைக் கருதாது, மிகத் தைரியமாக நாடகமேடை யேறிய ராவ் பகதூர் சம்பந்த முதலியார் சினிமாப்படக் காட்சியில் நடிப்பதை கௌரவக் குறைவென்று சிறிது காலத்துக்கு முன் வரை எண்ணியிருந்தார் என்று நான் இப்போது தெரிவித்தால் வாசகர்கள் ஆச்சரிய முறுவார்கள்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன் சென்னைக் கிறிஸ்தவ வாலிப சங்க கட்டிடத்தில், மேற்படி சங்கத் தர்க்க சபைக் கூட்டமொன்று நடந்தது. "நாடக மேடையின் தற்கால நிலை" என்பதைப் பற்றி, பச்சையப்பன் கலாசாலை தமிழ்ப் போசிரியராயிருந்த காலஞ்சென்ற மணி—திருநாவுக்கரசு முதலியார் பேசினார். அவர் தமது சொற்பொழிவில், "திரு. சம்பந்த முதலியார் போன்றவர்கள் சினிமாப் படக்காட்சிகளில் நடித்து தமிழ் நாடகக் கலையைச் சிறப்பிக்க வேண்டு"மென்று குறிப்பிட்டார். அக்கூட்டத்தில் அப்சர்வரா யிருந்த ராவ் பகதூர்--சம்பந்த முதலியார், அவரது யோசனை தமக்குச் சம்மதமில்லை எனத் தெரிவிக்கு முறையில் தலையை யசைத்தார். அப்பேர்ப்பட்டவர், ஒரு வருடத்துக்கு முன் கல்கத்தா பாரதலக்ஷ்மி பிக்சர்ஸார் தயாரித்து வெளியிட்ட "சதி-சுலோசனா" படத்தை டைரக்ட் செய்யும் வகையில் மெல்ல சினிமாவுலகில் அடியெடுத்து வைத்தார். இவ் விஷயத்தை இப் படத்தைக் குறித்து விமரிசனம் எழுதுகையிலும் விவரித்திருக்கிறேன். அதற்கடுத்த படியாக, இப்போது கோயமுத்தூர் பாரத் பிலிம் கம்பெனியார் தயாரித்த "மனோஹரானில்" புருடோத்தமனாக வேடம் பூண்டிருக்கிறார். திரு. முதலியாரிடத்தில் ஏற்பட்ட இம் மாறுதல், காலத்தின் வேகத்தினால் ஏற்பட்டதன்றோ ?

தமிழ் புது வருஷ விசேஷ அறிவிப்பு!

அதி உன்னத ஜோடிப்பு! அபார நடிப்பு!

வித்வான் C. S. செல்வரத்னம் பிள்ளை, மிஸ். C. N. நீலாவதி முதலியோர் ஒருங்கே நடிக்கும்

நளாயினி

எமது மகத்தான புராண புண்ணிய படம்.

கோலாப்பூர்
சம்ராத் சினிடோனில்
தயாராகிறது.

விவரங்களுக்கு:—
ஓரியண்டல் சௌண்ட்
பிக்சர்ஸ் லிமிடெட்,
திருப்பூர்.

ஆனால், ராவ்பகதூர்-ப. சம்பந்த முதலியாரிடத்தில் காணப்படும் நரை திரை மூப்பு, அளவு கடந்த உடல் தளர்ச்சி, அவரை நாம் இப்போது மனமுவந்து வரவேற்கும் வகையில் இல்லை. அவர் சுமார் 10-வருஷங்களுக்கு முன்—ஏன்? மணி—திருநாவுக்கரசு முதலியார் யோசனை கூறிய காலத்தில் (ஐந்தாறு வருடங்களுக்கு முன்) கூட, சினிமாப் படங்களில் நடிக்க முற்பட்டிருந்திருப்பாரானால், தமிழ் நாட்டில் லளித கலைக்கு ஒரு விதத்தில் பெருமை யளித்திருப்பா ரென்பது திண்ணம். கடந்துபோன காலத்தைப் பற்றி ஆகுலித்துப் பயனென்?

மனோஹரன்

ராவ் பகதூர்—சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்களில் "மனோஹரன்" நாடகமே தலைசிறந்ததென (Master-piece) எனக் கூறப்படுகிறது. அந்நாடகத்தில்தான் நடிப்பு விஷயத்தில் அவருக்கு நல்ல பெயருங்கூட. இதை யெல்லாங் கருதியே, கோயமுத்தூர்—பாரத் பிலிம்ஸ் சொந்தக்காரர்கள் அந்நாடகத்தைப் பெரும் பொருள் செலவில் தமிழ்ப் பேசும் படமாகத் தயாரித்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பலனை யடைந்தார்களோ என்னவோ! என்னைப் பொருத்த வரையில், என் போன்றார் எதிர்பார்த்தவளவு நமது முதலியார் சம்பந்தப்பட்ட இப் படம் இல்லை யென்றே வருத்தத்தோடு கூறவேண்டியிருக்கிறது. இப்போது இப் படத்தில் நடிக்கும் நடிகர்களைவிட இன்னும் திறமை வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கலாம்; திரு. சம்பந்த முதலியார் புருடோத்தமனாக நடிக்காது டைரக்ட் செய்யு மளவோடு நின்றிருக்கலாம்.

இப்போது பம்பாய் பிலிம் ஸிடியில் தயாராய் வெளியாகி யிருப்பதைக் கொண்டு பார்த்தால், இப்படத்தில் கூடுமானவரை நடிப்பு, முகபாவம், பேச்சு முதலிய சகல அம்சங்களிலும் திறமையைக் காட்டி சிறந்து விளங்கும் ஸ்ரீமதி கே. ஆர். சாரதாம்பாளுக்குத் தான் முதன்மை ஸ்தானங் கொடுக்கவேண்டும். அவர் தாம் பூண்ட ராணி பத்மாவதி பாத்திரத்திற் கேற்ப, சாந்தத்தையும், பெருந்தன்மையையுங் காட்டித் திறமையாக நடித்திருக்கிறார். அவர் பாடிய ஒன்றிரண்டு பாடல்கள்கூட இனிமையாக இருந்தன.

கிழ அரசன் புருடோத்தமனாக, திரு. சம்பந்த முதலியார் வேடம் தரிப்பதற்குத் தகுதிவாய்ந்தவரே. ஆயினும், பட்டமகிஷியிருக்க, தோழி வசந்த சேனையைக் காதற் கிழத்தியாகக் கொண்ட அரசனுக்குரிய உடற்கட்டு இவரிடமில்லை. இவர் முகத்தில் திரை விழுந்து உடல் தளர்ச்சியுற்று காணப்படுகிறார். அதனாலேயே இவரால் ராஜனுக்குரிய கம்பீரத்தை நடிப்பில் காட்டமுடியவில்லை என நினைக்கிறேன். புருடோத்தமன் வசந்த சேனையோடு சரச சல்லாபஞ் செய்து கொண்டிருக்கையில் முகபாவத்திலும் பேச்சிலும் இவர் காதலுணர்ச்சியை இன்னும் நன்றாக வெளிப்படுத்தி யிருக்கலாம். வசந்த சேனையை அன்பாக அழைக்கையில் "வசந்தா!" "வசந்த சேனா!" என்று விளித்திருக்கலாம். அப்படியின்றி, ஆசிரியர் சிலர், மாணவர்களை யழைப்பது போல், "வசந்த சேனை, வசந்த சேனை!" என அழுத்தந் திருத்தமாக நீட்டி ஒவ்வொரு முறையுங் கூப்பிடுகிறார். புருடோத்தமன் வசந்த சேனையுடன் காதல் விளையாட்டு ஆடிக் கொண்டிருக்கையில், ராணி பத்மாவதி சிறுவன் மனோஹரனோடு அங்கு தோன்றியதும், இவர் காட்டும் முக பாவம் பொருத்த முடையதாயில்லை. ஏதோ இவர் அதிகமாகக் குற்றஞ் சொல்லுவதற் கிடமின்றி நடித்திருக்கிறார் எனச் சொல்லாமலே யன்றி, விசேஷமாக ஒன்றுங் கூறுவதில்லை.

திரு. வி. ஏ. டி., செல்லம்—அல்ல-வி. ஏ. டி., சலம்; அதாவது அவாது முழுப்பெயர் வி. ஏ. தணிகாசலம், தணிகாசலம் என்ற பெயர் சலமாகச் சுருக்கப்பட்டுச் செல்லமாக மாறி விட்டது. இது நவீன பெயர் சுருக்கத்தால் ஏற்பட்ட கோளாறு. திரு. தணிகாசலம் நவர்ன

மெண்டு அமிஷியல் பார்டி மெம்பரா யிருந்து பல நாடகங்களில் நடித்துப் பெயர் பெற்றவர். தற்போது சுகுணவிலாச சபையில் சேர்ந்து நடித்து வருகிறார். அவரது கம்பீர தோற்றம் இப்படத்தில் மனோஹரனாக வேடம் பூண்பதற்குத் தகுந்ததாக அமைந்திருக்கிறது. அவர்

மனோகரனுக்குரிய வீரத்தைத் தம் நடிப்பில் இன்னுஞ் சிறிது நன்றாகக் காட்டி நடித்தி ருப்பாராயின் நன்றாயிருந்திருக்கும். மனோ ஹரன் சங்கிலியால் பிணிக்கப்பட்டு அரச வைக்குக் கொண்டுவரப்படும் போது, அவன் தன் தந்தையின் அநியாயத் தீர்ப் பை எதிர்த்து சங்கிலியை உதறி உடைத்

“நளாயினி” தமிழ்ப் படத்தில் நடிக்கும் ஸ்ரீமதி சி. என். நீலாவதி.

தெறிந்துவிட்டு அரசனை வெட்டப் போகு மிடத்தில் திரு நணிகாசலம் திறமையைக் காட்டி நடித்திருக்க வேண்டும். என்ன இருந்தாலும், அவர் சினிமா உலகுக்குப் புதியவர்தானே!

வசந்த சேனைக்கு இருக்க வேண்டிய விஷமப் பார்வையையும் பெருமித உணர்ச்சியையுங் கூடுமான வரை காட்டி ஸ்ரீமதி டி. எம். கமலவேணி நடித்திருப்பது பாராட்டத்தக்கது.

மனோகரன் மனைவி இளவரசி விஜயாளாக ஸ்ரீமதி கே. டி. ருக்மணி நடிக்கிறார். "மேனகா" படத்தில் நடித்ததைக் காட்டிலும், இப்படத்தில் இவரது நடிப்பில் அபிவிருத்தி காணப்படுகிறது. சினிமாவுக்கேற்ற முகவெட்டுடைய இவர் வருங்காலத்தில் சினிமா மண்டலத்தில் சிறந்த நட்சத்திரமாகப் பிரகாசிக்கக் கூடும்.

பைத்தியம் பிடித்த வஸந்தனாக வேடம் பூண்ட எம். ஏ. கணேசனது ஹாஸ்ய நடிப்பு குறிப்பிடத்தக்கது. வஸந்தனும், அரண்மனை விகடனும் சேர்ந்து உண்டாக்கும் ஹாஸ்ய ரசமே இப்படத்துக்கு அமையும். ஸ்ரீமதி மங்களம், ஸ்ரீமதி சாந்தாதேவி முதலியோரைக்கொண்டு எடுக்கப்பட்டிருக்கும் வைத்தியர் குடும்ப கோலாகலத்தைக் காட்டும் ஹாஸ்ய பாகத்தை இப்படத்தில் இடையிடையே நுழைத்திருக்க வேண்டியதில்லை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

பொதுவாக, எல்லா நடிகர்களுமே சாவதானமாகவும், மெதுவாகவும் பேசுவதும், துரிதத்தையோ பரபரப்பையோ காட்டாது படம் செல்வதும் படம் மந்தமாக இருப்பதற்குக் காரணமாக இருக்கின்றன. எனவே, அம் மந்தத்தைப் போக்க இந்த ஹாஸ்யபாகத்தை நுழைத்திருந்தால் அது தவறில்லை. இதிலும் ஸ்ரீமதி மங்களத்தின் நடிப்பு பாராட்டத் தக்கதாகவே இருக்கிறது.

இப் படத்தில் காட்டப்பட்ட அரண்மனை முதலிய சின் ஜோடிப்பும் இயற்கைக் காட்சியும் கண்களைக் கவர்கின்றன. ஒலிப் பதிவும், படப்பதிவும் சுமாராக இருக்கின்றன. சம்பாஷணை, பாட்டு உணர்ச்சி தரும் வகையில் அமையாது சாதாரணமாகவே இருந்தன. பொதுவாக, இப் படத்தைத் தயாரித்த கோவை பாத் பிலிம்ஸார் கன் முயற்சி பாராட்டத் தக்கதே. பொதுஜன ஆதரவுக்கு இப் படம் உரியதேயாகும்.

உஷா கல்யாணம்

சினிமாவில் ஒரு நடிகர் பேரும் புகழும் பெறுவதற்கு முகவெட்டும், நடிப்புத் திறமையும் அவசியமாயிருப்பது போலவே, அவர் நடிக்கும் கதை சிறந்ததாயும், உடன் நடிப்போர் திறமை வாய்ந்தோராயும் இருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். கதை சிறந்ததாயில்லா விட்டால், உடன் நடிப்போர் திறமையுடையோராயில்லா விட்டால், முக்கிய நடிகர் எவ்வளவுதான் அழகிய தோற்றமுடையவராயும், சிறந்த நடிகராயுமிருந்தாலும் அவர் பெயர் பெற முடியாது. அவரது நடிப்பும், பாட்டும், பேச்சும் சோபித மடையாது. அதுவன்றி அவருக்கு இதுவரையுள்ள பெயருக்கும் களங்கமே யேற்படும்.

இவ்வித நிலையில் தான் இப்போது "உஷா கல்யாணத்"தில் உஷையாக நடிக்கும் ஸ்ரீமதி எஸ். டி. சுப்புலக்ஷ்மி இருக்கிறார். இவர் சினிமா அழகி; சிறந்த நடிகை. இனிய சாரீரம் வாய்ந்தவர். அவருக்கேற்ப, தகுந்த ஜோடியாக சங்கீத வித்வான் தியாகராஜ பாகவதர் அமைந்ததனாலேயே அவரது முதல் படமாகிய "பவளக்கொடி"யில் வெற்றி பெறுவிடினும், இரண்டாவது படமான "நவீன சாரங்கதரா"வில் நல்ல பெயர் பெற்றார். ஆனால், அவரது துரதிஷ்டமோ அல்லது தமிழ்ப் பட உலகின் துரதிஷ்டமோ "நவீன சதாரத்தி"லும், "உஷா கல்யாணத்தி"லும் அவருக்குச் சரியான ஜோடி யமையவில்லை. டைரக்டர் இவ் விஷயத்தில் கவனஞ் செலுத்தவில்லையென்றே கூற வேண்டும். இதனால், இவர் இப்

படத்தில் தன்னைப் பொருத்தவரையில் சிரமப்பட்டு நடித்தும் எடுபட வில்லை. மாஸ்டர்-எம். வி. கிருஷ்ணப்பாவை எது கருதி அநிருத்தனாக நடிக்க வைத்தார்களோ தெரிய வில்லை. சங்கீதமா? நடிப்பா? கம்பீர தோற்றமா? ஒன்றும் அவரிடங் காணப்பட வில்லை. சாதாரணமாகவே பாடுகிறார். உஷையின் தந்தை வாணாசுரனாக நடித்த ஸ்ரீ. சி. வி. வி. பந்துலு இதற்கு முன் "ஞானசௌந்தரி" முதலிய படங்களில் நடித்ததைக் காட்டிலும் நன்றாக சிரமப்பட்டு நடித்திருக்கிறார். கிருஷ்ணன் வேடம் பூண்டவரிடம் எனக்குக் கவர்ச்சியே ஏற்பட வில்லை. சீன் ஜோடிப்பு தேவையில்லை. போடோகிராபி, ஸவுண்டி ரிகார்டிங் ஆகியவை சுமாரா யிருக்கின்றன. இவ்வளவு தான் இப் படத்தைப் பற்றிக் கூறமுடியும்.

கருட கர்வ பங்கம்

சென்னை ஓரியண்டல் பிலிம் கம்பெனியார் தயாரித்த இப் படம் ஒரு வகையில் பொதுமக்கள் மனதைக் கவரக் கூடியதே. பூனா சாஸ்வதி ஸ்டுடியோவில் இப்படம் எடுக்கப்பட் டிருப்பதால் தயாரிப்பு முறையில் பாராட்டத்தக்க அம்சங்கள் சில இருக்கின்றன. போடோ மிகத் திறமையாக எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஸவுண்ட் ரிகார்டிங்தான் படத்தின் முற்பகுதியில் அவ்வளவு தெளிவாக எடுக்கப்படவில்லை.

"Sign of the Cross" என்னும் ஆங்கிலப்படத்தில் பிரசித்தி பெற்ற ஹாலிவுட் டைரக்டர் ஸிஸில் பி. டிமில் என்பார், கதாநாயகியாக நடிக்கும் மிஸ். கிளாடட் கால்பட் என்னும் 'சினிமா அழகியைக் கழுதைப்பால் நிறைந்த தடாகத்தில் ஸ்நானஞ் செய்ய வைக்கிறார். அதைப் பின்பற்றியே போலும், இப்பட டைரக்டரும் பாமாவாக வேடம்பூண்ட ஸ்ரீமதி மோஹனாம்பாளைப் பசும்பாலில் குளிக்கச் செய்கிறார். இது தமிழ்ப்படத்துக்கு ஒரு விசேஷ அம்சமல்லவா! எல்லாம் சரிதான்! தன்னை விடப் போழகி யாருமில்லையென இறுமாந்திருந்த சத்தியபாமை வேடத்துக்கு ஸ்ரீமதி மோஹனாம்பாளைத் தவிர வேறு யாரும் அகப்பட வில்லையா? ருக்மணி வேடம் பூண்டவர் மட்டுந்தானென்ன! அவரது அன்னநடை பொன்றே போதுமே! நமது தமிழ்ப்பட முதலாளிகள் ஆயிரம் ஆயிரமாக வாரியிறைத்து நடிகர்களைத் தேர்ந்தெடுக்கும் அழகுக்கு இப் படமொன்றே உதாரணமாக அமையும். ஸ்ரீமதி மோஹனாம்பாள் கிராமபோனில் நன்றாகப் பாடிப் பெயரெடுத் திருக்கலாம். இப்படத்தில் அவர் அப்படி யொன்றும் விசேஷமாகப் பாடவில்லை. அதைவிட, அநுமானாக நடித்த ஸ்ரீ பார்த்தசாரதி மிக நன்றாகப் பாடி ஜனங்களை மெய்மறக்கச் செய்கிறார். அவரது நடிப்புக்கூட கூடுமானவரை நன்றாகவே இருந்தது. அவருக்கு அடுத்த படியாகத் தான் கிருஷ்ணனாக நடித்த சிறுகளத்தூர் சாமாவைச் சொல்ல வேண்டும். அவரும், நாரதாக நடித்த சங்கீத வித்வான் சீனிவாசனும் நன்றாகப் பாடுகிறார்கள்.

இப் படத்தில் ஹாஸ்யம் என்ற பெயரோடு கோமாளிக்கூத்து நடந்திருக்கிறது. யாதவனாகவும், அவரது வேலையாளாகவும் ஸ்ரீசுப்பிரமணிய முதலியாரும், மற்றொருவரும் நடிக்கின்றனர். இவ் விருவருக்கும் முறையே லால் என்றும், ஹார்டி என்றும் ஆங்கில ஹாஸ்ய நடிகர்களது பெயர்களை முதலாளிகள் கொடுத்திருக்கிறார்கள். சுப்பிரமணிய முதலியாரது ஸ்தூல தேகத்தையும் பருத்த தொந்தியையும் பார்த்தாலே ஹாஸ்ய ரசமுண்டாய் விடுகிறது. அவ்வாறிருக்க, அவர் ஏன் ஓடியாடி அவதிப்படவேண்டும்? யாதவன், குதிரைமீதேறுவதற்கு அதன் வாலையும் தலையையும் பிடித்துக்கொள்ளச் சொல்வதும் அது சரிப்படாமல் போகவே குதிரைமீது ஏணியைச் சாத்தி ஏறி விழுவதும் பார்ப்பவரை விழுந்து சிரிக்க வைக்கிறது. ஆனால், முதன்முறை கருடனோடு குதிரை யேறிச் செல்லும்போதே இவ்வாறு செய்திருந்தால் அறிவுடைமையாயிருக்கும். அதைவிட்டு இரண்டாவதாக பலராமருடன் செல்லுகையில் இவ்விதம் செய்வது பரிகாசத்திற் கிடமாகும். மற்

றென்று கருடன் பறந்து செல்லவேண்டியிருக்க, குதிரை மீதேறிச் செல்வது பெருநகைப்பை விளைவிக்கிறது. பலராமர் வேடம் பூண்டவரது தோற்றம் பார்க்க சகிக்கவில்லை.

சந்திரஹாஸன்

இது இந்தியாவின் பல பாகங்களில் பல பாஷைகளில் பிரசித்தி பெற்ற புராணக் கதையாகும். இதைச் சினிமாவுக் கேற்றபடி அமைக்கு முயற்சியில் சென்னை Al. Rm. கம்பெனியார் தவறி விட்டார்கள். இதை வெகு அழகாக எடுத்திருக்கலாம். இப் படத்தில் "மார்க்கண்டேயரி"ல் நல்ல பெயர் வாங்கிய மாஸ்டர் வி. என். சுந்தரம் சந்திரஹாஸனாக நடிக்கிறான். இவன் கம்பீர தொனியில் பாடுகிறான். இவனைவிட பாலசந்திரஹாஸனாக நடித்த மாஸ்டர். ராமுடு நன்றாக நடிக்கிறானெனக் கூறலாம். சந்திரஹாஸனுக்குக் காதலிமாராக நடிக்கும் எம். ஆர். சந்தானலக்ஷ்மியும், சி. எஸ். சாரதாம்பாளும் மாஸ்டர் சுந்தரத்துக்குத் தமக்கைமார் போல் காணப் படுகிறார்கள். தலைக்குத் தகுந்த குல்லாயா! குல்லாய்க்குத் தகுந்த வாறு தலையா? என்ற விஷயம், நடிகர்களுக்குச் சௌகரியமாக பாத்திரங்களைக் கொடுப்பதில் நிபுணத்வம் வாய்ந்த தமிழ்ப் பட முதலாளிகளால் தான் தீர்க்கப்பட வேண்டும். ராஜகுமாரியாக நடிக்கும் ஸ்ரீமதி சந்தானலக்ஷ்மி, "ராதா கல்யாணத்"தில் நடித்ததைவிட இதில் குறிப்பிடத் தக்கவாறு நடிக்கிறார் எனச் சொல்வதற்கில்லை. விஷையாக நடிக்கும் ஸ்ரீமதி சாரதாம்பாள் சினிமாவுக்குப் புதியவர். அத்துடன் நல்ல தோற்றமு மில்லை. ஆகவே, அவரிடம் நாமொன்றும் அதிகமாக எதிர்பார்த்தற்கில்லை. மந்திரி துஷ்டபுத்தியாக நடிக்கும் ஸ்ரீ. பி. பி. ரங்காச்சாரி சமயோசிதமாகத் திறமையுடன் நடிக்கிறார். ஸ்ரீமதி டி. சுசிலாதேவி தோழியாக நடிக்கிறார். அவர் அழகிய தோற்றமும், நடிப்புத் திறமையும் உடையவராக இருக்கிறார். அவருக்கு ஏன் கதாநாயகி வேடம் கொடுத்திருக்கக் கூடாது?

கல்கத்தா பயோனீர் ஸ்டூடியோவில் இப்படம் எடுக்கப்பட் டிருப்பதால், இதில் காட்டப்படும் சீன்ஜோடிப்பு முதலியவை நாம் இதற்கு முன் பல முறை பார்த்தவையே. போட்டோ எடுக்கும் விஷயத்தில் அதிக கவனஞ் செலுத்தப்படவில்லை. பராசக்தியின் பத்துவித தோற்றங்கள் ஆபாசமாய்ச் சித்திரித்துக் காட்டப்படுகிறது.

முதற் பரிசு ரூ. 300. ரொக்கப் பரிசு ரூ 500. 2-வது பரிசு ரூ. 175.

முதலில் வரும் சரியான விடைக்கு ரூபா 25. பிரவேசக் கட்டணம் அணு 2.

முடிவு தேதி 16-5-36.

1	கைலா — ம்	கயிலை மலை
2	— தை	பெண்
3	— லைதல்	துலைத்தல்
4	— ங்கம்	ஓர் தேயம்
5	— ழுமை	வளமை
6	— டாரம்	கொப்பரை

கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்து தனிக் காகிதத்தில் விடை எழுதி கூபன் 1-க்கு 2-அணு வீதம் M. O. செய்து விடையுடன் M. O. ரசீதையும் சேர்த்து அனுப்ப வேண்டியது. ரூ. 1 வரை மூக்காலணு, காலணு ஸ்டாம்புகளாக அனுப்பலாம். இப்போட்டிச் சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மானேஜர் தீர்ப்பே முடிவானது. இப்போட்டிக்காக அனுப்பிய பணம் எக்காரணத்தைக்கொண்டும் வாபஸ் செய்யப்படமாட்டாது. இதன் முடிவு 1-6-36 தேதி இதழில் வெளிவரும். (பக்ஷிகள் போட்டி சரியான விடை:—வானம்பாடி, வாவல், போத்து, அன்னம், காருடன், குருவி.)

மானேஜர், ஜூபிலி நிலையம், லெக்ஷிமிபுரம், மதுரை.